விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 16 புதன்கிழமை (29.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 131

## ஜனநாயகத்தின் வெற்றி

### ஆதரவு 215; எதிர்ப்பு 1; மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன்

# 19 ஆம் திருத்தம் நிறைவேறியது



(கொழும்பு)

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் ஆளும், எதிரணிக் கட்சிகளின் அமோக ஆதரவுடன் நிறைவேறியது. சட்ட மூலத்திற்கு ஆதரவாக 215 வாக்குகளும், எதிர்ப்பாக ஒரே ஒரு வாக்கும் பதிவாயின. ஏழு பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. ஒருவர் வாக்கெடுப்பைப் புறக்கணித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பும் ஆதரவு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட 19ஆம் திருத்தச் சட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆதரவை வழங்கியுள்ளனர். இதன்போது,

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் ஜனநாயகத்துக்கு வழிகோலுவதுடன், நல்லாட்சியையும் உறுதிப்படுத்தும் என்று தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

19ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் நாடாளு

24ஆம் பக்கம் பார்க்க....


## போர்க்குற்றம் தொடர்பில் அமெரிக்கா கரிசனை

### இலங்கை விஜயத்தில் கெரி வெளிப்படுத்துவார்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பிலான அமெரிக்காவின் நீண்டகால கரிசனைகளை இலங்கை அரசதரப்பிடம் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி வலியுறுத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புக்கு எதிர்வரும் சனிக்கிழமை விஜயம் செய்யவுள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி, அரசதரப்பினரைச்



சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இவ்விரு நாடு

23ஆம் பக்கம் பார்க்க....

## புலம்பெயர்ந்தோர் தடைநீக்க நடவடிக்கை - அரசாங்கம்

(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழர்களின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இதனை நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்தவர்கள் மீதான தடை கடந்த 2014 மார்ச் மாதம் கொண்டு வரப்பட்டது.

எனினும் இதில் நாட்டுக்கு எதிராக செயற்படாதவர்களும் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்தே புதிய அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சர் தடை நீக்கம் குறித்து அறிவித்திருந்தார்.

இந்தநிலையில் முழுமை அரசியலை பயன்படுத்தி இலங்கைக்கு சமாதானத்தை கொண்டு வரப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முன்னைய அரசாங்கம், கடந்த பல ஆண்டுகளால் சர்வதேசத்துடன் முரண்பாட்டை

24ஆம் பக்கம் பார்க்க....

## சமுகமளிக்காத ஏழு எம்.பிக்கள்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது திருத்த வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நேற்று நிறை வேற்றப்பட்டது. வாக்கெடுப்புக்கு உறுப்பினர்கள் எழுவர் சமுகமளிக்கவில்லை.

பிரேமலால்ஜயசேகர, சுசந்த புஞ்சிநிலமே, ஜகத் பாலசூரிய, ஜனக்க பண்டார தென்னகோன், பசில் ராஜபக்ஷ, ஹெகலிய ரம்புக்வெல, எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோரே சமுகமளிக்கவில்லை. (11)

## வெள்ளை வான் கும்பல் இரகசிய அறிக்கை தயார்!

(கொழும்பு)

வெள்ளை வான் கும்பல் தொடர்பில் இரகசிய அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் வெள்ளை வான்களில் ஊடகவியலாளர்கள், அரசியல் வாதிகள், சிவில் அமைப்பு செயறபாட்டாளர்கள் கடத்தி காணாமல் போகச் செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பாதுகாப்பு தரப்பு சார் பிரதானிகள் மூவர் பற்றிய இரகசிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இந்த அறிக்கை பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், முப்படையினர், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இந்த பாதுகாப்புச் சபையில் அங்கம்வகிக்கின்றனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## சிராந்தி, யோசிதவையும் கைது செய்ய திட்டம்!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி ராஜபக்ஷ மற்றும் மகன் யோசித ராஜபக்ஷ ஆகியோரை அரசாங்கம் அடுத்த சில நாட்களில் கைது செய்ய திட்டமிட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இருவருக்கும் எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஏற்கெனவே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இந்நிலையில், இவர்கள் இருவரும் அடுத்த சில நாட்களுக்குள் கைது செய்

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வைத்தீஸ்வரக்குருக்களுக்கு முதலமைச்சர் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மூதறிஞர் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் வைத்தீஸ்வரக் குருக்கள் தமது 99ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தமை சைவ உலகத்துக்கு ஒரு பேரிழப்பாகும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அன்னார் எண்ணற்ற நூல்களின் ஆசிரியர், அரிய நூல்கள் பலவற்றை அழிய விடாது அச்சில் பதிப்பித்த ஆஜானுபாவர். அளவற்ற அறப்பணிகளில் ஈடுபட்ட அன்புமனம் படைத்த அறிஞர். திருவாசகத்தின் மீது ஆழ்ந்த அறிவையும் பக்தியையும் கொண்டிருந்தவர். பலருக்கு வழிகாட்டியாகவும் வளந்தரு அறிவுரைகள் வழங்கிய வல்லவராகவும் வாழ்ந்து இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னாரின் ஆத்மா இறைவனின் அடிகள் சேர்ந்து சாந்தி பெறுவதாக என்றுள்ளது. (11)

## பொலிஸார் மீது கத்திக் குத்து

யாழ்.மூளாய் மாவடிப் பகுதியில் இனந்தெரியாத நபர்களின் கத்திக் குத்திற்கு இலக்காகி பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை கைது செய்ய பொலிஸார் குறித்த பகுதிக்கு நேற்று மாலை சென்றுள்ளனர். சந்தேக நபரின் வீட்டுக்கு சென்று அவரைக் கைதுசெய்ய முற்பட்டவேளை அவர் பொலிஸார் ஒருவரை கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். இந்த நிலையில் குறித்த இடத்துக்கு மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று தெரியவருகிறது. கத்திக்குத்துக்கு இலக்காகி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் தர அதிகாரியான எஸ்.லியனகே என்பவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அங்கு மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது கத்தியால் குத்திய சந்தேக நபர் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## பல்கலைக்கழக மாணவர் நேற்றும் வகுப்பு பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)



மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவு மாணவர்கள் இரண்டாவது நாளாகவும் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது கடந்த 25ஆம் திகதி இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் மாணவர் ஒருவரின் கை துண்டாடப்பட்டது

இனந்தெரியாத குழுவினரால் சுதுமலை பகுதியில் தமது பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளதாக கலைப்பீட ,மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பிரிவில் கல்வி பயிலும் ஒன்பது மாணவர்கள் மீதே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இனந்தெரியாத குழு ஒன்று மாணவர்கள் மீது வாள்வீச்சு நடத்தியுள்ளதுடன் போத்தல் மற்றும் கொட்டான்களால் தாக்கியுள்ளனர்.

இதன்போது மாணவர் ஒருவரது கை வெட்டப்பட்டுள்ளதுடன் இன்னொரு மாணவருக்கு உடல் முழுவதும் வெட்டுக் காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள இந்த தாக்குதலுக்கு எதிராக இன்று புதன் கிழமையும் பகிஸ்கரிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர். (11)


**தவறிவிட்டது**

628102627V எனும் இலக்கமுடைய நடராசா செல்வமணி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை ஆஸ்பத்திரி வீதிக்கும் திருமறைக்கலாமன்றத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். (சி-846)

T.P :- 0775250993



**WANTED ENGLISH TEACHERS**

**(Full time and Part time)**

- Female teachers are wanted to teach students between 5 years to 12 years age group
- Location: Jaffna town, Nelliady, Kilinochchi
- Books, modules and Teaching Training are provided by us.
- Those who have previous experience are preferred.
- Basic Qualification is "B or A" in O/L. • Salary negotiable.

Please apply to the address given below with your Bio-Data and relevant information within 7 days.

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

(சி-844) NO. 113 KANNATHIDDY ROAD, JAFFNA.


## சேவை நலன் பாராட்டு



திருமதி
**பார்வதிதேவி மகேஸ்வரன்**
B.A (Hons) Dip in Education SLTS-I
யா/ஏழாலை மகா வித்தியாலயம்

**சேவை விபரம்**
ஆசிரியர் :- பு/பாத்திமா முஸ்லிம் மகா வித்தியாலயம் 1985.12.26 - 1998.10.31
ஆசிரிய ஆலோசகர்:-
கோட்டக்கல்வி அலுவலகம், கற்பிட்டி புத்தளம்.
1998.11.01 - 2005.05.08
ஆசிரியர்:-யா/ஏழாலை மகா வித்தியாலயம்
2005.05.09 -2015.04.29

திருமதி பார்வதிதேவி மகேஸ்வரன் அவர்கள் இருபத்தொன்பது வருட ஆசிரிய சேவையில் பத்து வருடங்கள் எமது பாடசாலையில் சிறந்த புவியியல் ஆசிரியராக ஆற்றலும் ஆளுமையும் மிக்க சேவையை வழங்கி இன்று அவர் தம் அறுபதாவது அகவையில் ஓய்வு பெறுகின்றார். அவர் தம் சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வு காலத்தில் சீருஞ் சிறப்பும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

(223)

**அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்**
**யா/ஏழாலை மகா வித்தியாலயம் ஏழாலை.**

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
10 - 06 - 1936



உதிர்வு
09 - 04 - 2015

## செல்லையா குஞ்சிதபாதம்

09.04.2015 அன்று காலமான எமது குடும்பத் தலைவர் செல்லையா குஞ்சிதபாதம் அவர்களுடைய வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.04.2015) புதன்கிழமை எமது சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி நல்லூர் வடக்கு, கல்வியங்காடு எனும் முகவரியில் நடைபெறும். தயவுசெய்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் குடும்பசகிதமாகக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் எமது தந்தை சுகவீனமுற்றிருந்த பொழுது உரிய வைத்தியம் அளித்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள், கண்ணும் கருத்துமாய் வைத்தியம் அளித்த கொழும்பு வைத்தியர் திரு.ஜெயக்குமாரன் அவர்களுக்கும் அமரர் திடீர் மரணமுற்றபொழுது உடன் எமது வீடு வந்து மரணச் சடங்குக்குரிய ஏற்பாடுகளைச் செய்த அயலவர்கள் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறியோருக்கும் உலகின் பல பாகங்களிலுமிருந்தும் தொலைபேசி மூலமாகவும் வேறு பல வழிகளிலும் எமது குடும்பத்தாருக்கு ஆறுதல்கள் கூறியவர்களுக்கும் மற்றும் அந்தியேட்டி, வீட்டுக்கிரியை நிகழ்வுகள் போன்றவற்றில் பங்குபற்றியோர் மற்றும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர் இரங்கல் உரை வழங்கியோர் போன்ற அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


சந்திரசேகரப்பிள்ளையார்
கோவிலடி, நல்லூர் வடக்கு.
0212224855

-குடும்பத்தினர்.

(9398)

## கண்ணீர்க் கரணிக்கை

தோற்றம்
1943 - 02 - 27



மறைவு
2015 - 04 - 27

**அமரர் சுப்பிரமணியம் செந்தில்நாதன்**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்பக் கல்லூரி அதிபர்; தர்மகர்த்தா, அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம், அராலி ஆவரப்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

**அன்பின் இருப்பிடமாய் ஆதரவின் தரிப்பிடமாய்**
**இன்பமயமாய் உரையாடி-இதயம் மகிழும்-ஐயா**
**இனிக்காண்போம் உனை என்றோ!**

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தர்மகர்த்தா அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானையும், முத்துமாரி அம்பாளையும் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

சிவாச்சாரியாரும், திருப்பணி சபையினரும்,
அன்னதான சபையினரும், அடியார்களும்,
அகாயக்குளம் விநாயகர், தேவஸ்தானம்.

சிவாச்சாரியாரும், பரிபாலன சபையினரும்,
அன்னதான சபையினரும்,
சங்காபிஷேகக் குழுவினரும், அடியார்களும்,
ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

(9397)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந்தர அரசியல் தீர்வு

## பிரதமர் மோடி நம்பிக்கை

(டில்லி)

**இலங்கையில் நிலவும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று காணப்படும் சூழல் ஏற்பட்டுள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் டில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகளின் குழுவொன்று சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தலைமையில், தி.மு.க., பா.ஜ.க., காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் இந்தியப் பிரதமரைச் சந்தித்து, காவிரிக்கு குறுக்கே புதிய அணை ஒன்றை கர்நாடக அரசு கட்டும் விவகாரம், ஆந்திராவில், 20 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பேச்சு நடத்தியிருந்தனர்.

இதன்போது, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும், பேசப்பட்டதாக, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அது குறித்து தகவல் வெளியிட்ட அவர், இலங்கையில் அரசியல் நிலைமைகள் முன்னேற்றமடைந்துள்ளதாக இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

அங்கு அரசியல் தீர்வு ஒன்று காணக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும், தமிழ்நாட்டில் உள்ள கட்சிகள் இதனைத் தமது அரசியல் விளையாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டாலேயே, இது சாத்தியமாகும் என்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்ததாகவும் விஜயகாந்த் தெரிவித்தார். (இ-5)


## தேவை

மஞ்சி, மெலிபன், நெஸ்லே, ஏமாஸ், ரிஸ்பரி சொக்லட் தொழிற்சாலைகளுக்கு ஆண்/ பெண் தேவை.

18-55 வயது.

(157) 35,000/= உயர் சம்பளம்

**இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:- 0717002057**


# ஷிராணிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான வழக்கு ஜூலை மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சொத்துக்கள், விபரங்களை வெளியிடாமைக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு, கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்ட முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.


இந்த வழக்கை தொடர்ந்து முன்கொண்டு செல்லமுடியுமா? என்பது தொடர்பில் பிரதிவாதி தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் கடிதம் தங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தது.

இதனையடுத்தே, மேற்படி வழக்கை ஜூலை மாதம் 21 ஆம் திகதிக்கு பிரதான நீதவான் ஒத்திவைத்தார். (இ-5)

# மகிந்தவின் நிலைப்பாடு பிழையானது பொதுபல சேனா மீண்டும் சுட்டிக்காட்டு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு தமது இயக்கமே பொறுப்பு கூற வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கொண்டுள்ள நிலைப்பாடு பிழையானது என பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய கலகொட அத்தே ஞானசார தேரர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு எமது இயக்கம் ஒப்பந்த அடிப்படையில் செயற்பட்டது என்று கூறப்படும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் தோற்பார் என்று தெரிந்தும் அவர் போட்டியிட்டது அவரின் தவறு என கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். (இ-5)




July 23rd யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்பூக்கள்



IELTS™

English for International Opportunity

**Speciality of our course**

- Special attention to Advanced Grammar Vocabulary
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

**IELTS™ Life Skills**

**From 2015 May IELTS Life Skills Course will be available at this centre.**

திருமணம் செய்து u.k க்கு செல்வதற்கான settlement visa விற்கு இனிமேல் IELTS Life Skills பரீட்சையை எடுக்கவேண்டும்.

**IELTS Life Skills is available at two levels.**

***IELTS Life Skills-$A_1$ speaking and listening**

***IELTS Life Skills-$B_1$ speaking and listening**

அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்பட்டு ஒரே தடவையில் $B_1$ பரீட்சையில் சித்தியடைய உங்களை ஆயத்தப்படுத்துவோம்.

வகுப்புக்கள் 04.05.2015 ல் ஆரம்பம்.




**Course Schedule**

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00 -11.00 | 8.30-10.30, 5.00 - 700 |

**BRITISH COLLEGE OF ENGLISH**

No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)

Tel : 021 222 0384 , 077 880 3887


## இராசி பலன்

29.04.2015

(சித்திரை 16, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

ஏகாதசி பின்னிரவு 3.11 மணிவரை

பூரம் பின்னிரவு 2.08 மணிவரை

இராகுகாலம் 11.58-1.28 மணிவரை

சுபநேரம் 4.28-5.58 மணிவரை

ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்** – சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்

**இடபம்** – பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வாகன சுகமுண்டு.

**மிதுனம்** – பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**சிம்மம்** – ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** – விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**துலாம்** – திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், காரிய அனுகூலமுண்டு, ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** – தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** – சாதுரியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், புதிய திட்டங்கள் கைகூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் விலகுவர்.

**மகரம்** – உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** – காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மீனம்** – உற்சாகமான நாள், நிர்வாகத் திறைமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 188

## பொறாமையிலிருந்து விடுதலை

...நீங்கள் புதிய ஆசையுடன்-கடன் வாங்கப்பட்ட ஆசையுடன் செயலாற்றத் தொடங்குகிறீர்கள். மிகவும் தெளிவாக இருங்கள்... இது உங்கள் சொந்த ஆசையல்ல. அது மற்ற எவருக்கோ சொந்தமான கடன் வாங்கப்பட்ட ஆசை அது அந்த பென்ஸ் காரினுடைய சொந்தக்காரரின் ஆசை. இவ்வாறுதான் நீங்கள் உங்கள் மனதில் ஒப்பிடுதல் மற்றும் பொறாமைப் படுதலின் விளைவால் மற்றவர்களின் ஆசையின் மீது செயற்படத் தொடங்குகிறீர்கள்.

உங்கள் வீட்டில் ஒரு குளிர்சாதனப் பெட்டியின் அவசியத்தை நீங்கள் ஒருபோதும் உணர்ந்திருக்க மாட்டீர்கள். ஆனால், உங்கள் அண்டை வீட்டுக்காரர் ஒரு குளிசாதனப் பெட்டியை வாங்கியவுடன் நீங்கள் அது இல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ண ஆரம் பித்துவிடுகிறீர்கள்!

உடனே ஒரு குளிர்சாதனப்பெட்டி வேண்டிதன் அவசியத்திற்கான உலத்திலுள்ள எல்லாக் காரணங்களையும் கண்டு பிடித்துவிடுவீர்கள். இவ்வளவு நாட்கள் குளிர்சாதனப் பெட்டி இல்லாமல் சமாளித்துக் கொண்டுதானே இருந்தீர்கள்! எதுவும் மாறவில்லை. ஆனால் என்ன நடந்தது? உங்கள் மனம் ஒப்பிட ஆரம் பித்துவிட்டது!



ஆனால் கடன் வாங்கப்பட்ட ஆசைகள் ஒருபோதும் உங்கள் சொந்தமாக முடியாது. அது உங்கள் மனதில் மிகவும் நுட்பமாக நிகழ்வதால் கடன் வாங்கப்பட்ட ஆசையின் சரியான மூலம் தெரிந்து கொள்ளப்படாமலேயே போய்விடுகிறது. அது மனதின் மிகவும் நுட்பமான தந்திரமான ஒரு விளையாட்டு. ஆனால் நாம் எப்பொழுதும் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்று சொல்லிக்கொண்டிருப்போம்.

ஒரு சின்னக்கதை...

ஒருவன் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்குப் பிறகு அவன் இருந்த இடத்திற்குத் திரும்ப வந்தான். அவன் நண்பர்களுடன் அக்கம்பக்கமெங்கும் சுற்றி வந்தான். அங்கு பல மாற்றங்கள் நிகழ்ந்திருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தான். நண்பனிடம் விமர்சித்தான். வளமை சுற்றுப்புறத் தோற்றத்தையே முழுமையாக மாற்றிவிட்டது! நண்பன் சொன்னான்: இல்லை, வளமை இல்லை வெறும் சாதாரண பொறாமை.

நாம் எப்பொழுதும் மற்றவர்களைத் தோற்கடிக்கவே முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நீங்கள் கடன் வாங்கப்பட்ட ஆசைகளுடன் இருப்பீர்களானால் ஒருபோதும் நிறுத்த மாட்டீர்கள். ஏனெனில் ஏதேனும் ஒன்றை நிறைவேற்றும் சமயத்தில் இன்னொரு கடன் வாங்கப்பட்ட ஆசை எங்கிருந்தாவது வரும்; நீங்கள் மீண்டும் ஒருமுறை ஓடத் தயாராகிவிடுவீர்கள்! (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### பெண்கள் வர்க்கத்தையே மயக்கத்தில் ஆழ்த்திய பெண்.... நிச்சயம் பொறாமை கொள்வீங்க!...

மங்கையின் கூந்தல் வாசம் மணவாளனை மயக்கும் என்பது அன்னவருக்கும் தெரிந்தது தான். ஆனால் அலகாபாத்தை சேர்ந்த ஸ்மிதா ஸ்ரீவஸ்தவாவின் கூந்தலோ, பெண்கள் வர்க்கத்தையே மயக்கத்தில் ஆழ்த்தும் வகையில் உள்ளது. தனது உயரத்தை விட மூன்று அங்குலம் நீண்ட கூந்தலை உடைய ஸ்மிதா, இந்தியாவின் நீண்ட கூந்தல் கொண்ட பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்.

தற்போது 7 அடி நீளம் கொண்ட கூந்தல் உடையவராக உள்ள ஸ்மிதா, கூந்தல் நீளத்தில் உலக சாதனை படைப்பதே தனது லட்சியம் என்று கூறியுள்ளார். 37 வயதாகும் ஸ்மிதா, தனது கூந்தல் 6 அடி நீளம் இருந்தபோதே லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துவிட்டார். தனது சாதனை குறித்து ஸ்மிதா கூறுகையில், எனது வாழ்க்கை ஓய்வில்லாதது. எனது கூந்தலின் நீளம் 7 அடி. எனது கூந்தலுக்காக பல விருதுகளை வென்றுள்ளதுடன், லிம்கா சாதனை புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளேன். கின்னஸ் சாதனை புத்த கத்தில் இடம் பிடிக்க திட்டமிட்டுள்ளேன் என்றார்.



கடைவீதிக்கு செல்லும் போது பலரும் எனக்கு மரியாதை தருகின்றனர். என்னுடன் பேச ஆர்வப்படுவதுடன், எப்படி இவ்வளவு நீண்ட கூந்தலை வளர்க்கின்றீர்கள் என்று கேள்வி எழுப்புகின்றனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் என்னுடைய கூந்தலின் நீளம் உண்மையானது தானா என்று இழுத்து பார்க்கின்றனர். உண்மை என்று தெரிந்தவுடன் நீங்கள் அதிர்ஷ்டசாலி என்று கூறிவிட்டு செல்கின்றனர் என்ற ஸ்மிதா மேலும் தெரிவித்தார். குழந்தை பருவத்திலிருந்தே கூந்தல் வளர்ப்பதில் ஸ்மிதா ஆர்வத்துடன் இருந்து வருகிறார். ஸ்மிதாவின் முயற்சிக்கு அவரது குடும்பத்தினரும் ஆதரவளித்து வருகின்றனர். உத்தரப்பிரதேசத்தில் உள்ள உள்ளூர் எண்ணெய் தயாரிப்பு நிறுவனங்களின் தூதுவராகவும், அங்கு நடைபெறும் அழகி போட்டியின் நடுவராகவும் ஸ்மிதா செயலாற்றி வருகிறார். சீனாவின் க்சி குய்பிங் 18 அடி நீள கூந்தலுடன் கின்னஸ் சாதனை படைத்துள்ளதால், தனது கின்னஸ் சாதனைக்கு இன்னும் நீண்ட பயணத்தை ஸ்மிதா மேற்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.




### பெப்பர் சில்லி சிக்கன்

**தே.பொருட்கள்:**




சிக்கன் - 1/4கிலோ
முட்டை - 1
கான்ப்ளவர் - 1 ஸ்பூன்
தயிர் - 1/4 கப்
இஞ்சி பூண்டு விழுது - 1 ஸ்பூன்
மஞ்சள்த்தூள் - 1/2 ஸ்பூன்
மிளகுத்தூள் - 3ஸ்பூன், பச்சமிளகாய் - 3, கரம்மசாலாத்தூள் - 1/2 ஸ்பூன், உப்பு - தேவைக்கு, நீளமாக அறிந்த வெங்காயம் - 1, மிளகுத்தூள் - 1ஸ்பூன், நறுக்கிய பச்சமிளகாய் - 1, எண்ணெய்,மல்லி இலை - தே.அளவு

**செய்முறை**

சிக்கன், முட்டை, கான்ப்ளவர், தயிர், இஞ்சி, பூண்டு விழுது, மஞ்சள்த்தூள், மிளகுத்தூள், பச்சமிளகாய், கரம் மசாலாத்தூள், உப்பு இவை அனைத்தையும் ஒன்றாக போட்டு நன்றாக மிக்ஸ் செய்து 1 மணி நேரம் நன்றாக ஊறவிடவும்.

எண்ணெய் நன்றாக சூடு ஆன பின்பு ஊற வைத்த சிக்கனை பொரித்து தனியாக எடுத்துவைக்கவும். பொரித்த எண்ணெயில் வெங்காயம் போட்டு பொரிக்கவும். அதனை தனியாக எடுத்து வைக்கவும். பாத்திரத்தில் சிறிது எண்ணெய் விட்டு பொரித்த சிக்கன், மற்றும் மிளகு, பச்சமிளகாய், கொத்தமல்லி போட்டு வதக்கவும். அதன் மேலே பொரித்த வெங்காயம் போட்டு கிளறி இறக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணி ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்தினம் கொழும்பில் முன்னெடுத்துள்ளது. தற்போதைய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கிலேயே மக்கள் விடுதலை முன்னணி இவ்வார்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளது.

## ஜெ.சொத்துக் குவிப்பு வழக்கு

# அரச சட்டத்தரணியாக ஆச்சார்யா நியமனம்



ஆச்சார்யாவை சிறப்பு அரச சட்டத்தரணியாக நியமித்து கர்நாடக அரசு உத்தர

(பெங்களூர்)

**முன்னாள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் திடீர் திருப்பமாக அரச சட்டத்தரணியாக மீண்டும் ஆச்சார்யா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

விட்டுள்ளது. உதவி சட்டத்தரணியாக சந்தேசவுட்டாவை நியமித்தும் கர்நாடக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நிலையில் நேற்று மாலை 4 மணிக்கு எழுத்துபூர்வ வாதத்தை பி.வி.ஆச்சார்யா தாக்கல் செய்தார். ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் பவானி சிங்கிற்கு முன் அரச சட்டத்தரணியாக பணியாற்றியவர் சட்டத்தரணி பி.வி. ஆச்சார்யா ஆவார்.

நெருக்கடி கொடுக்கப்படுவதாக புகார் கூறி அரச சட்டத்தரணி பொறுப்பிலிருந்து ஆச்சார்யா விலக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 16 வர்த்தகர்களுக்கு எதிராக 109000 ரூபா தண்டப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இந்த மாதம் 16 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக ஒரு இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை இணைப்பாளர் த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள 16 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக நிறை குறைந்த பாண் விற்பனை, காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை போன்ற குற்றங்ககுக்கு எதிராக மல்லாகம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து மேற்படி தண்டப்பணம் அந்தந்த நீதிமன்றங்களின் ஊடாக அறவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பெரும் தவறுக்கு வித்திடலாம்

## இ.கா.கூ.பிராந்திய முகாமையாளர் அறிவுரை



(சாவகச்சேரி)

சில பெற்றோர் தமது பிள்ளைகளுடன் செல்லும் போது பாதசாரிகள் கடவையூடாக வீதியைக் கடக்காது சில தூர இடைவெளியில் கடப்பார்கள். இது ஒரு சிறிய விடயமாக இருந்தாலும் பெரும் தவறுக்கு வித்திடலாம் என இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் பா.சத்தியன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபன சாவகச்சேரிக் கிளையினரால் நடத்தப்பட்ட தமது கிளையில் அங்கத்தவர்களாக உள்ளவர்களது பிள்ளைகளில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய 40 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோரையே தமது முன்னுதாரணமாக குறிப்பிட்ட வயதுவரை பிள்ளைகள் பின்பற்றுவார்கள்.பெற்றோர் விடும் சிறு தவறுகள் பிள்ளைகள் பாரிய தவறுகளைச் செய்யத் தூண்டுவதாக அமைந்துவிடும்.

எனவே பெற்றோராகிய நாம் பிள்ளைகள் முன் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.சில பெற்றோர் தமது பிள்ளைகளுடன் செல்லும் போது பாதசாரிகள் கடவையினால் வீதியைக் கடக்காது சில தூர இடைவெளியில் கடப்பார்கள். பொலிசாரைக் கண்டால் மட்டும் பாதசாரிகள் கடவையைப் பாவிப்பார்கள்.அது சில தூர வித்தியாசம் தானே என நாம் நினைக்கலாம்.

ஆனால் எமது பிள்ளைகள் அதனை முன்னுதாரணமாகக் கொண்டு தாமும் அப்படிகடக்கமுயற்சிப்பார்கள். இதேபோல் பல வடயங்கள் எமக்கு சின்னவிடயமாக தோனறுவது பெரும்தவறுக்கு வித்திட்டு விடலாம்.

அவர் தொடர்ந்து தனதுரையில் நாம் சிறுவர்களாக இருந்தபோது இருந்த அறிவை விட தற்போதுள்ள பிள்ளைகள் அறிவிலும் புத்திக்கூர்மையிலும் சிறந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்களது அறிவினை ஆக்கபூர்வமான பாதையில் கொண்டு செல்லும்போது நல்ல விளைவுகளை நாமும் நாடும் அடையலாம். அதற்கான வழிவகைகளை பெற்றோரும் கல்விச்சமூகத்தினரும் முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்றார்.

ந.நர்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில்தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் பிரதமவிருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் கே.பிரதீபன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சி.புனிதநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 18 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் A/L லண்டன் PR<br>தொ.இ: B/694 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 64 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி அரச தொழில்<br>தொ.இ: G/1151 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 45 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: HNDA/ தனியார் தொழில்<br>தொ.இ: B/695 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1152 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 52 செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: மின்னியல் பொறியியலாளர்<br>தொ.இ: B/698 | பிறப்பு: 1982 RC<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ NGO<br>தொ.இ: G/1160 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 32 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, CIMA, MBA லண்டன் NOT PR<br>தொ.இ: B/699 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 73 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 161 cm<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: G/1161 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கிழக்கு கண்ணகை புரம் அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரிஅம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் கடந்த19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி முற்பகல் 10மணிக்கும் மறுநாள் முற்பகல் 10மணிக்கு தீர்த் தத்திருவிழாவும் இடம்பெறும். (இ)

## 800 பேருந்து சேவை மீண்டும் ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாலையினால் இதுவரை காலம் சேவையாற்றாது இருந்த வழி இலக்கம் 800 பேருந்து சேவை நாளை மறுதினம் முதலாம் திகதி தொடக்கம் பொது மக்களதும் வேண்டுகோளிற்கிணங்க மீண்டும் சேவையாற்றவுள்ளது.

இச் சேவை நீர்வேலி சந்தியிலிருந்து ஆரம்பித்து மாசுவன் சந்தி ஊடாக மூன்றாம் சந்தியை அடைந்து அங்கிருந்து புன்னாலைக்கட்டுவன் சந்தியை அடைந்து அங்கிருந்து வழி இலக்கம் 764 வழியாக யாழ். மத்திய பேருந்து நிலையம் வரை சேவையாற்றும் என இ.போ.ச.யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ)

# 19.5 மில்.ரூபா செலவில் 47 வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 19.5 மில்லியன் ரூபாய் செலவில் 47 வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் வொ.வியாகேசு தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தவருடத்துக்கான வரவுசெலவு திட்டத்தின் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகள் புனரமைப்பு, மயான அபிவிருத்தி, நீர் விநியோக திட்டம் என பல அபிவிருத்தி வேலைகள் நடைபெறவுள்ளன.

அந்த வகையில் வீதி புனரமைப்பில் கரணவாய் தெற்கு செல்வாபுரம் வீதி, கரணவாய் மேற்கு வைரவர் கோவில் வீதி தொடக்கம் தபாற்கந்தோர் வரையான வீதி, சித்தம்பாதி வீதி, கீரிப்பல்லி வீதி, உடுப்பிட்டி வடக்கு சிறிமுருகன் கொலனி வீதி, உடுப்பிட்டி தெற்கு வீரபத்திரர் கோவில் கிழக்கு வீதி, வல்வெட்டி கோணன் வேலி வீதி, இமையாணன் கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி சந்தை வீதி, துலாவி செல்வம்மில் வீதி, கரணவாய் வடக்கு கண்ணன் கோவில் வீதி, கரணவாய் வட மேற்கு சுங்கம்புலம் வீதி, கரணவாய் மத்தி குளங்கரை வீதி, கரவெட்டி மேற்கு ஸ்ரீ நாரதா வீதி, கரவெட்டி வடக்கு மயிலியர் ஞான வீதி, ஜீசஸ் பாடசாலை வீதி, கரவெட்டி மத்தி சாத்தியத் தோட்டம் வீதி, கரவெட்டி கிழக்கு வளர்மதி காட்டுப்புலம் வீதி, துன்னாலை தெற்கு வேம்படி கிளான் வீதி, துன்னாலை இந்திரம்மன் கோவில் வீதி, அல்வாய் கவிஞர் செல்லையா வீதி, அல்வாய் கிழக்கு ஞான வைரவர் ஈயதை வீதி, கரணவாய் மேற்கு பூவரம்பிட்டி இந்து மயான வீதி, கரணவாய் குருக்கட்டு வீதி, கரணவாய் கிழக்கு கீரிப்பல்லி வீதி, உடுப்பிட்டி வீராட்சி மலந்தரை வீதி, உடுப்பிட்டி வடக்கு மல்லாமலை வீதி, வல்வெட்டி மத்தி வல்வெட்டி இந்து த.ம.பாடசாலை வீதி, சமரபாகு மாடந்தை மாவடி வீதி, இமையாணன் மேற்கு செல்வம்மில் வீதி, நாவலடி வீதி, கரணவாய் மேற்கு, ஆண்டாவளவு வீதி, கரவெட்டி மேற்கு இராசசிங்கன் வீதி, கரவெட்டி தெற்கு உச்சில்அம்மன்கோவில் வீதி, மத்தொனி சண்டில் குள வீதி, சம்பந்தர் கடை இணைப்பு வீதி, கரவெட்டி மத்தி கவுந்தில் வீதி, கட்டைவேலி கொல்லர் வீதி, துன்னாலை தெற்கு தோப்பு வீதி (செப்பனிடல்), துன்னாலை மத்தி நெடிலி வீதி, துன்னாலை மேற்கு அணிஞ்சிலடி தக்குச்சம்பாதி வீதி, நெல்லியடி வடக்கு துலாக்கட்டு வீதி, நெல்லியடி செட்டித்துறை வீதி, நெல்லியடி கிழக்கு ராணிமில் ஒழுங்கை, அல்வாய் தெற்கு அல்வாய் பூவற்கரை வீதியுடன் இணைந்த எம்.பி வீதி, வதிரி புளியடி வீதி, குமிழடிப்பிள்ளையார் கோவி லடி கிழக்கு நோக்கிய வீதி ஜரீஸ் அமைத்தல் , அத்தாய் அந்தாய் வீதி ஆகிய வீதிகள் புனரமைப்பு செய் யப்படவுள்ளன.

அத்துடன்10 இலட்சம்ரூபாய்செலவில் மயான அபிவிருத்தியும் 2 இலட்சம் ரூபாய் செலவில் நீர் விநியோகத் திட்டமும் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




## ஞானச் சுடர் வெளியானது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெளியீடான ஞானச் சுடரின் சித்திரை மாத 208 ஆவது மலர் வெளியாகியுள்ளது.

இதில் அடக்கமும் பணிவும், அன்பு தரும் தெய்வ சிந்தை, ஊக்கம் உயர்வு தரும், சித்தர்களின் ஞானம், இந்துமதமும் பசுவும் போன்ற கட்டுரைகள் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## விமலேசன் முதலாமிடம்


(தும்பளை)

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களுக்கிடையில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டுக்கான அலுவலக முகாமைத்துவப் போட்டியில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த குடத்தனை கிராம அலுவலர் அ.விமலேசன் 1ஆம் இடத்தையும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தை சேர்ந்த அத்தியடி கிராம அலுவலர் என்.சுந்தரராஜா 2ஆம் இடத்தையும் ஊர்காவற்றுறை பிரதேசத்தை சேர்ந்த நாரந்தனை வட மேற்கு கிராம அலுவலர் எம்.புருசோத்தமன் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (இ-19)

## நடமாடும் சேவை

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் யாழ். மாவட்ட செயலகத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நடமாடும் சேவை ஒன்று நாளை 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில் வடமராட்சி கிழக்கு மக்களை கலந்து கொண்டு தமது தேவைகளை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ-19)





தந்தை செல்வாவின் 38 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு யாழில் உள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் தந்தை செல்வா அறங்காவற் குழுத்தலைவர் பேராயர் கலாநிதி ஜெபநேசன் தலைமையில் கடந்த 26 ஆம் திகதி காலை நடைபெற்றது. (படங்கள்:-உ.சாளின்)

## 70 மில்.செலவில் யாழ்.மாநகரசபையால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்.மாநகரசபையால் சேகரிக்கப்பட்ட வருமானங்களில் 2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதியில் இருந்து 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி வரை நிலையான வைப்பு கணக்கில் உள்ள 70 மில்லியன் ரூபாய் நிதியை வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் அனுமதியுடன் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் பல வேலைத்திட்டங்கள் இடம்பெறவுள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் அவசரமாகவும் அவசியமாகவும் திருத்தம் செய்யப்படவுள்ள 26 வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. அத்துடன் 12 வடிகால்கள் புனரமைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் மாநகரசபையின் சுகாதார தொழிலாளர்களுக்கான தின வரவுபதிவு செய்தல்,கைகழுவுதல், ஆடை மாற்றுதல் போன்ற செயற்பாடுகளுக்காக பாசையூர், பசார், நல்லூர்,நாவாந்துறை ஆகிய இடங்களில் தனியான கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்த வேலைத்திட்டங்கள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும்

### பொலிஸ்மா அதிபரிடம் டக்ளஸ் எம்.பி.கோரிக்கை

யாழ். குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் நிலையில், பொலிஸார் இது தொடர்பில் அதிக அவதானமெடுத்து, இவ்வாறான வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தவும், அவை தொடராதிருக்கவும் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென ஈ.பி.டி.பி மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளார்.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் அடுத்தடுத்து பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. கடந்த வாரம் சாவகச்சேரி உணவகமொன்றில் தாக்குதல் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இதேநேரம் கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி பகுதியில் இடம்பெற்றுள்ள வாள்வெட்டுச் சம்பவமொன்றில் அல்வாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அதே தினம் சுதுமலை சந்தியில் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் தாக்கப்பட்டு, இதில் ஒருவரது கை துண்டாடப்பட்ட நிலையில், இவர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நாளுக்கு நாள் குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துவரும் நிலை காணப்படுகின்றது.

பொலிஸார் இது குறித்து மிகவும் விழிப்பாக செயற்பட்டு, குற்றவாளிகளை கைது செய்து, சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதே நேரம், இவ்வாறான செயற்பாடுகள் தொடராத வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தை புரட்டிப்போட்ட பயங்கர நிலநடுக்கம் குடிதண்ணீர், உணவின்றி பொதுமக்கள் பரிதவிப்பு

# 80 இலட்சம் பேர் இதுவரை பாதிப்பு

## ஐ.நா. அதிர்ச்சித் தகவல்

(காத்மண்டு)

**நேபாளத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற பேரவலத்தில் சிக்கி இதுவரை 5ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ள அதேவேளை அந்நாட்டின் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரான 80இலட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.**

நேபாளத்தில், 80 ஆண்டுகளில் வரலாறு காணாத பயங்கர நிலநடுக்கம் கடந்த சனிக்கிழமை ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.9 ஆக பதிவான நில நடுக்கத்தால் தலைநகர் காத்மண்டு முற்றிலும் சீர்குலைந்தது. வீடுகள், கட்டடங்கள், கோயில்கள், வரலாற்று சின்னங்கள் மண்ணில் புதைந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் கட்டட இடிபாடுகளில சிக்கி பலியாகினர். 3 நாளில் 55 முறை நிலநடுக்கங்களும், நில அதிர்வுகளும் தொடர்ந்தன. வீடுகளுக்குள் செல்லாமல், திறந்தவெளியிலேயே இரவு பகலாக மக்கள் தங்கியுள்ளனர்.

மீட்பு பணிகள் தற்போது அங்கு விரைவாக நடந்து வருகிறது. இந்தியா சார்பில் 700க்கும் மேற்பட்ட தேசிய பேரிடம் மீட்பு குழுவினரும், நவீன மீட்பு உபகரணங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு நாடுகளும் மீட்பு பணியில் கைகோரத்துள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மழை பெய்ததால் மீட்பு பணியில் சிக்கல் ஏற்பட்டது. நேற்று முன்தினம் காலை முதல்வானிலை சீரடைந்ததைத் தொடர்ந்து மீட்பு பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.







கட்டட இடிபாடுகளை அகற்ற

அகற்ற சடலங்கள் குவியல் குவியலாக கிடக்கின்றன.

இதனால் பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. காத்மண்டு பள்ளத்தாக்கு பகுதியில் மட்டும் ஆயிரத்து 100பேர் பலியாகி இருப்ப தாகவும், சிந்து பால் சவுக்கில் 875 பேர் பலியாகி இருப்பதாகவும் நேபாள உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், இமயமலை அடிவாரத்தில் உள்ள பின்தங்கிய கிராமப் பகுதிகளுக்கும் மீட்பு குழுவினர் நேற்று முன்தினம் விரைந்துள்ளனர். நிலநடுக்கத்தால் இமய மலையிலிருந்து பாறைகள் உருண்டு விழுந்ததால், பல கிராமங்கள் மண்ணில புதைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

| | |
|---|---|
| மொத்த சனத்தொகை | 2கோடி76இலட்சம் |
| பாதிக்கப்பட்டோர் | 80 இலட்சம் |
| பாதிக்கப்பட்ட சிறுவர்கள் | 10இலட்சம் |
| இறப்பு (உறுதிப்படுத்தப்பட்டது) | 4ஆயிரம் |
| இறப்பு (அச்சம் வெளியீடு) | 10ஆயிரம் |
| இந்தியாவில் இறந்தோர் | 72 |
| திபெத்தில் இறந்தோர் | 25 |
| நில அதிர்வு | 7.9 ரிக்டர் |
| நிலஅதிர்வின் எண்ணிக்கை | 75 |

காத்மண்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களின் கூட்டம் நிரம்பி வழிகிறது. அடுத்தடுத்த நில அதிர்வு காரணமாக மக்கள் பீதியில் உறைந்துள்ளதால், வாகன நிறுத்துமிடப் பகுதியில் தற்காலிக முகாம்கள் அமைத்து வைத்தியர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் 3 நாட்களாக திறந்த வெளியிலேயே முகாம்கள் அமைத்து தங்கி உள்ளனர். இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட பலநாடுகளில்இருந்து நிவாரண பொருட்கள் அனுப்பி வைத்துள்ள போதிலும், குடிநீர், உணவு இன்றி மக்கள் தவித்து வருகின்றனர்.

இதேவேளை நேபாள நிலநடுக்கத்தின் தாக்கம், இந்தியாவிலும் உணரப்பட்டது. பீகார் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட வட மாநிலங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டது. கட்டடங்கள் குலுங்கின. இடிந்து விழுந்தன. இடிபாடுகளில் அகப்பட்டு, 70 பேர் உயிரிழந்தனர். நேபாளத்தில் இந்திய மீட்புக்குழுவினர் பூகம்பம் பாதித்த பகுதிகளில் சிக்கியிருக்கும் இந்தியர்களை மீட்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதற்கிடையே பூகம்பம் பாதித்த பகுதிகளில் தொடர்ந்து நிலஅதிர்வு மற்றும் மழை காரணமாக மீட்பு பணிகள் பாதிக்கப்பட்டது. நலஅதிர்வுகளும் நீடித்து வருவதால மீட்பு பணிகளில் பெருத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்தியா, சீனா, துருக்கி உள்ளிட்ட நாடுகளின் இராணுவ வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேபாளம் பேரழிவு பூகம்பத்தில்10இலட்சம் குழந்தைகள் உட்பட 80 இலட்சம் மக்கள் பாதிக கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது. நேபாளம் பேரழிவு பூகம்பத்தில் 80 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 14 இலட்சம் மக்களுக்கு உணவு தேவையுள்ளது. என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. (இ-5)

## நிலநடுக்கத்தால் காத்மண்டு நகரமே 10அடி தூரம் தெற்காக நகர்ந்துள்ளது

நேபாளத்தை புரட்டிப் போட்ட நிலநடுக்கத்தால் அந்நாட்டின் தலைநகர் காத்மண்டு 10 அடி தூரம் தெற்காக நகர்ந்துள்ளதாக வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். அதே சமயம் இமயமலையின் உயரத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்று கூறியுள்ளனர்.

80 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக அதிகளவில் நிகழ்ந்த இந்த நிலநடுக்கத்திற்கு பின் ஏற்பட்ட ஒலி அலைகள் மூலம் பெறப்பட்ட நிலஅதிர்வு தரவின் படி, காத்மண்டு மாநகரம் 10 அடி தூரம் தெற்காக நகர்ந்துள்ளதாக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் புவியியல் வல்லுநரான ஜேம்ஸ் ஜாக்சன் தெரிவித்துள்ளார்.

அவரது ஆய்வறிக்கையானது, அடிலெய்டு பல்கலைக்கழகத்தின் புவியியல் விஞ்ஞான துறையின் தலைவரான சாண்டி ஸ்டியசியின் ஆய்வறிக்கையை ஒத்துள்ளது. யூரேசியாவிடம் இருந்து இந்திய கண்டத்தை வேறுபடுத்தும் இமய மலை பகுதியில் பூமி தட்டுகள் 10 டிகிரி அளவுக்கு வடக்கு மற்றும் வடகிழக்காக நகர்ந்ததாக இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.


எனினும் இந்த நிலநடுக்கத்தால உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்டில் மி.மீ அளவிலான மாற்றங்களே ஏற்பட்டுள்ளதாகவும் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர் (இ-5)

## நிலநடுக்க பாதிப்பை எதிர்கொண்ட நேபாளத்திற்கு தனது ஒருமாதச் சம்பளத்தை வழங்கினார் மோடி

(டில்லி)

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, தனது ஒருமாத சம்பளத்தை நிதியுதவியில் சேர்த்துள்ளார் இந்திய பிரதமர் நரேந்திர மோடி.

நேபாளத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட 7.9 ரிக்டர் அலகிலான நிலநடுக்கத்தின் தாக்கம் இந்தியாவிலும் உணரப்பட்டது. இந்தியாவின வடக்கு, கிழக்கு மாநிலங்களில் நிலநடுக்கத்தால் 72 பேர் உயிரிழந்தனர். இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, பல்வேறு தரப்பில் இருந்தும் நிதியுதவிகள் குவிந்து வருகின்றன. பிரதமர்



நரேந்திர மோடியும் தன் பங்குக்கு, நேற்று முன்தினம் தனது ஒருமாத சம்பளத்தை பிரதமர் தேசிய நிவாரண நிதிக்கு நன்கொடையாக வழங் கினார்.

நிலநடுக்கத்தால் பலியானோர் குடும்பங்களுக்கு தலா 6 இலட்சம் ரூபா நிவாரணம் மற்றும் படுகாயம் அடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே வடக்கு மாநிலங்களில் பருவம் தவறிப் பெய்த மழையால் ஏற்பட்ட பயிர் நட்டத்துக்கு விவசாயிகளுக்கு உதவ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் ஒரு மாத சம்பளப் பணத்தை, நன்கொடையாக வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மக்களின் காணிகளை அரசு மீள வழங்க வேண்டும்

## ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு

**வடக்கு மாகாணத்தில் முறையற்ற குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களின் நிலங்களை அம்மக்களுக்கே வழங்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அண்மையில் வன்னி மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியபோதே




அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக எமது மக்களில் பலர் தங்களது சொந்த காணிகளை விட்டு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு கைவிடப்பட்ட காணிகளில் யுத்தம் முடிவுற்றதன் பின்னர், பல தரப்பினரும் குடியேறிய நிலையில், அக் காணிகளைத் தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்ளும் முயற்சிகளிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் பொதுமக்களின் காணிகள் பல புலிகள் இயக்கத்தினரால் பயன்படுத்தப்பட்டன. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் அக் காணிகள், புலிகளினுடையவை எனக் கூறப்பட்டு, பாதுகாப்புத் தரப்பினரால் பயன்படுத்தப்பட்டன.

இவற்றுள் பல காணிகளை நாம் கடந்த காலங்களில் விடுவித்துள்ளோம். யாழ். பல்கலைக்கழகத்திற்குரிய கிளிநொச்சி அறிவியல்நகர் காணி அவ்வாறு மீட்கப்பட்ட காணிகளுள் ஒன்றாகும்.

எமது மக்களின் நிலங்கள் எமது மக்களுக்கே சொந்தம் என்ற எமது நிலைப்பாட்டினை முன்னிறுத்தியே நாம் இவ்விடயம் தொடர்பில் செயற்பட்டு வருகின்றோம்.

எனவே, தற்போதைய அரசு இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எமது மக்களின் நிலங்களை, வாழ்வாதாரங்களை அபகரிக்கும் வகையிலான குடியேற்றங்கள் உருவாகுவதை எம்மால் அனுமதிக்க முடியாது என்றார். (2)

# கள்ளிக்குளத்தில் கிராமிய சந்தை



வவுனியா, கள்ளிக்குளம் கிராமத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அனுசரணையில் சிறுவர்களுக்காக மாலைநேர கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி இக்கிராமத்தில் இயங்கி வரும் சிறுவர் கழகத்தின் சிறுவர்களின் ஏற்பாட்டில் கிராமத்தில் தமது வீட்டுத் தோட்டங்களில் விளைந்த கத்தரிக்காய், மிளகாய், பயிற்றங்காய், கீரைக்கட்டுகள், பப்பாசிப்பழங்கள், வாழைப்பழங்கள் உட்பட பல கிராமிய விளைபொருட்களை சந்தைப்படுத்தும் நிகழ்வு கள்ளிக்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இங்கு சிறுவர்கள் மிகவும் ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் தமது பொருட்களை கூவிக்கூவி விற்பனை செய்தனர். (2)

# வயல்நிலங்களில் உள்நுழையும் கால்நடைகள் நெற்பயிர்ச் செய்கையை நாசப்படுத்துகின்றன

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்மடு குளத்தின் கீழான இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கை விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு கல்மடு குளம் கமக்கார அமைப்பினரால் அண்மைக்காலமாக பொது மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தது.

இந்த அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த பகுதியில் இதுவரை கால்நடைகள் கட்டி வளர்க்கப்படாமையால் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் பலரது வயல் நிலங்களினுள் கால்நடைகள் உள்நுழைந்து பயிர்களை நாசப்படுத்துவதுடன் நட்டத்தையும் ஏற்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே காலதாமதம் இன்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-263)

# அநாவசியத் தலையீடுகளின் காரணமாக இன நல்லிணக்கம் கேள்விக்குறியாகின்றது

## வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவிப்பு

(விசுவமடு)

இராணுவ அதிகாரிகளின் அநாவசிய தலையீடுகளினால்தான் இன நல்லிணக்கம் எமது நாட்டில் கேள்விக்குறியாகி வருகின்றது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவித்துள்ளார்.



வைத்திய கலாநிதி சிவமோகனின் ஒருங்கிணைப்பில் யாழ்.மருத்துவ சங்கத்தின் தலைவர் வ.முரளி மற்றும் அங்கத்துவ டாக்டர்களின் பங்களிப்பில் இலவச மருத்துவ முகாம் ஒன்று கடந்த 26 ஆம் திகதி விசுவமடு தொட்டியடி பிரதேசத்தில் நடைபெற்றது.

விசுவமடு தொட்டியடி பிரதேசம் விசுவமடுவின் சகல பிரதேசத்துக்குமான ஒரு மத்திய பின்தங்கிய பிரதேசமாகும். இங்கு நடைபெற்ற முகாம் மூலம் பெருந் தொகையான மக்கள் பிரயோசனம் அடைந்தனர்.

மேலும் இராணுவக்குழுக்கள் தொடர்ந்து சுற்றிவந்து கொண்டிருந்தன. அதுபற்றி வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் நாம் ஒரு மருத்துவ முகாம் நடத்தினால் அதில் இராணுவத்தினருக்கு என்ன வேலை? இது போன்ற இராணுவ அதிகாரிகளின் அநாவசிய தலையீடுகளினால்தான் இந் நாட்டில் தொடர்ந்தும் இன நல்லிணக்கம் கேள்விக்குறியாகி வருகின்றது.

மாற்றம் காண்போம் என்று சென்னார்கள். இராணுவத்தினரின் மனங்களில் உள்ள பேரினவாத சிந்தனையை, தமிழரை அடக்கியாள வேண்டும் என்ற சிந்தனையை, எப்படி மாற்றுவது? ஒட்டு மொத்த இராணுவத்தினரையும் அகற்றி தமிழ் மக்களை தமது நாட்டில் தமது பாட்டில் வாழ விடாத வரையில் இன நல்லிணக்கம் ஒரு கேள்விக்குறியே.

இனியும் ஒரு கோர யுத்தத்தின் தாக்கத்தை புரிந்து கொள்ள முடியாத இன வாதிகள், தமிழினத்தின் சுதந்திர வேட்கையை புரிந்து கொள்ளாத அடிப் படை மதவாதிகள் அரசியலில் தாக்கம் செலுத்த முற்படுவது எமது நாட்டின் ஒட்டுமொத்த இன நல்லிணக்கத்துக்கும் உதவப்போவதில்லை என்றார். (2)

# புகையிரத கடவையை கடக்க முயன்ற வாகனத்தை புகையிரதம் மோதித்தள்ளியது

## சாரதி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி



(பனிக்கன்குளம்)

மன்னார், முருங்கன் செம்மண் தீவு பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையினை கடக்க முயன்ற முருங்கன் நீர்ப்பாசனத்திணைக்களத்திற்கு சொந்தமான பிக்கப் வாகனத்தினை வேகமாக வந்து புகையிரதம் மோதித் தள்ளியதில் பிக்கப் வாகன சாரதி படுகாயம் அடைந்த நிலையில் முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையின் அவசரசிகிச்சை பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.10மணியளவில் மேற்படி கடவையில் இடம் பெற்றுள்ளது. இதில் முருங்கன் நீர்ப்பாசன திணைக்களத்தின் சாரதியான சிவச் சாமி (வயது -50 என்பவரே படுகாயம் அடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

கொழும்பில்இருந்து காலை 8.30 மணியளவில் புறப்பட்ட புகையிரதம் மாலை 5.45 மணியளவில் தலைமன்னார் துறை புகையிரத நிலையத்தை வந்தடையும். இந் நிலையில் அன்றைய தினம் தாமதித்து வருகை தந்த நிலையில் இரவு முருங்கன் செம்மண்தீவுப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முயன்ற பிக்கப்ரக வாகனத்தை மோதியுள்ளது.

இதன் போது குறித்த பிக்கப்ரக வாகனத்தின் சாரதி படுகாயமடைந்து முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மதவாச்சியில் இருந்த தலைமன்னார் வரை பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

# கிளிநொச்சியில் நடைபெறும் கட்சிகளின் மேதின நிகழ்வுகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியினர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஆகியோர் மேதினக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

அந்த வகையில் கிளிநொச்சிமாவட்ட கூட்டுறவு அமைப்புக்களான பனை தென்னை வள கூட்டுறவு சங்கங்கள், பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள், சிகை அலங்கரிப்பாளர் சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கங்கள் ஆகியவை ஒன்றிணைந்து கிளிநொச்சி நகரில் மேதின நிகழ்வினை நடத்தவுள்ளன.

அதேபோல் ஈழமக்கள் ஜனநாய கட்சியின் ஏற்பாட்டில் முழங்காவில் பகுதியிலுள்ள நாச்சிக்குடா சந்தியில் பிற்பகல் 3.30 மணிக்கு மேதின நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசியகூட்டமைப்பின் ஏற்பாட்டில் தருமபுரம் பகுதியில் மேதின நிகழ்வு நடைபெறவுள்ளது. (2-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணைப்படுத்தப்படாத பதவிவெற்றிடங்களுக்கு 42 பணியாளர்களுக்கு நியமனக் கடிதங்கள்

## அனுமதி வழங்கினார் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்

(மல்லாவி)

**வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வடக்கு மாகாண பிரதேச சபைகளில் நிலவுகின்ற அட்டவணைப்படுத்தப்படாத பதவி அணியினருக்கான நியமனங்களின் வெற்றிடங்களுக்கு ஏற்கனவே நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்ட ஆளணியினரை நியமனம் செய்யுமாறு பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.**

இதன்பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் நிலவிய அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களுக்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு தகுதியானவர்களின் விண்ணப்பங்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருந்தது.

இப்பட்டியலின் பிரகாரம் காவலாளி மூன்று, சாரதி ஐந்து, மின்னிணைப்பாளர் ஒன்று, மருந்து கலவையாளர் இரண்டு, காரியாலய காரிய சகாயர் நான்கு, நூலகத் தொழிலாளி மூன்று, சுகாதாரத் தொழிலாளி பதின்னான்கு, வேலைத் தொழிலாளி பத்து ஆகிய எட்டு பதவிகளுக்குரிய 42 பணியாளர்களுக்கான நியமனக் கடிதங்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் குமாரசாமி மிதிலைநாதனின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபையில் பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் காணப்பட்ட ஆளணிப் பற்றாக்குறை இப்புதிய நியமனங்களின் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.(2-15)



**மன்னார் மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் குடும்ப பெண்கள் 16 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களது வாழ்வாதா ரத்தை மேம்படுத்தும் வகையில் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீ ஸ்வரனின் நிதியொதுக்கீட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட தையல் இயந்திரங்கள் அண்மையில் மன்னார் பிரதேச செயலக கேட் போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.**




# நிர்வாகத் தெரிவு


(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கிவரும் தொண்டர் அமைப்பான இளைஞர் கழகங்களின் ஒன்றிணைந்த அமைப்பான கிளிநொச்சி இளைஞர் கழக மாவட்ட சம்மேளன நிர்வாக தெரிவுக்கூட்டம் கடந்த 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்ட காரி யாலய மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட இளைஞர் கழக சம்மே ளன செயலாளர் திருமதி ம.துசிய ந்தி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இதுவரைகாலமும் ஆற்றப்பட்ட சேவைகள் புதிய அமைப்பு எவ்வாறு செயற்படவேண்டுமென விளக்கமளிக்கப்பட்டமையை தொடர்ந்து நிர் வாக தெரிவு நடைபெற்றது.

இதில் தலைவரா க த.சங்கர், செயலாளராக நா.குகேந்திரா, பொருளாளராக அய்னா சிறீசுதர்சன, அமைப்பாளராக யோ.தர் சன், உப தலைவராக அ.கிசான், உப செயலாளராக செல்வி தி. அகிலா மற்றும் துறைசார் செய லாளர்கள் ஒழுக்க குழு உறுப்பினர் கள் ஆலோசனை சபை என தெரிவுகள் நடைபெற்றது.

அதன்பின்னர் 2015 ஆம் ஆண்டு வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திரபால, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள்,இளைஞர் கள் யுவதிகளென பலரும் கலந்து கொண்டனர்.(2-281)



**இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மு/மாங்குளம் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வரும் பெற்றோரை இழந்த இரு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்ட போது....**

**(படம்:பனிக்கன் குளம் செய்தியாளர்)**

# இறங்கு துறைகள் அமைப்பதற்கு 6மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## கிளிநொச்சி கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இறங்குதுறைகள் புனரமைப்பதற்கு கடற்றொழில் அமைச்சின் ஊடாக 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பிரதி பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிளாலி ,நாகதேவன்,துறை கௌதாரிமுனை, பாலாவி ஆகிய பிரதேசங்களில் காணப்படுகின்ற இறங்குதுறைகளை புனரமைப்பு செய்வதற்காக 4 பிரதேசங்களுக்கும் தலா 1.5மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்பு வேலைகள் ஆரம்பிப்பதற்கான மதிப்பீட்டு வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் உடனடியாக புனரமைப்பு நடவடிக்கைகள் இடம் பெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

# முச்சக்கரவண்டி -இ.போ.ச.பேருந்து விலத்த முற்பட்டவேளை விபத்துக்குள்ளானது

## இருவர் காயம்

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்திலிருந்து துணுக்காய் நோக்கி பயணித்த முல்லைத்தீவு இ.போ.ச சாலைக்கு சொந்தமான பேருந்து மல்லாவியிலிருந்து மாங்குளம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியும் நேர் எதிரே ஒன்றையொன்று விலத்த முற்பட்ட வேளையில் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது முச்சக்கர வண்டியில் பயணித்த இருவரில் ஒருவர் கால்முறிந்த நிலையில் மற்றையவர் காயமடைந்த நிலையிலும் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5.45 மணியளவில் மாங்குளத்திற்கும் துணுக்காய்க்கும் இடைப்பட்ட வீதியிலுள்ள வன்னி விளாங்குளம் இராமதாஸ் கடை சந்திக்கு அண்மையாக நடைபெற்றுள்ளது.

இதன் போது ஒலுமடு மாங்குளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சுமன் (வயது–24) என்ற இளைஞன் கால் முறிந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் அறிந்த மாங்குளம் பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து விபத்துடன் தொடர்புபட்ட இ.போ.ச பேருந்தையும் முச்சக்கர வண்டியையும் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்ற துடன் விபத்துடன் சம்பந்தப்பட்ட வாகனங்களின் சாரதிகளையும்கைதுசெய்து தடுத்துவைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15)

# ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு 20மில்.ரூபா நிதியொதுக்கீடு

## முதற்கட்டமாக ஒதுக்கினார் அமைச்சர் றிசாத் பதியுதீன்

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப்பிரிவில் கடந்த 25 வருடகாலமாக பயன்படாமல் இருந்த ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் முதற்கட்ட நிதி ஒதுக்கீடாக 20 மில்லியன் ரூபாயை, வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இலங்கையின் பழைமையான தொழிற்பேட்டையில் ஒட்டுசுட் டான் தொழிற்சாலை மிகவும் பிரசித்தம் பெற்றதொன்றாக இருந்துவந்தது. வன்னி யுத்தகாலத்தில் இத் தொழிற்சாலையின் செயற்பாடுகள் முற்றாக ஒடுக்கப்பட்டு, பணியாற்றிய ஊழியர்கள் தமது தொழிலினை இழக்கும் நிலையேற்பட்டது. அதேபோல்இதனை நம்பி வாழ்ந்த பல குடும்பங்கள் தமது வருமானத்தை இழந்தன.

இந்நிலையில் புதிய அரசாங்கத்தினால் கைத்தொழில், வணிகத் துறை அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களில் செரமிக் கூட்டுத்தாபனமும் ஒன்றாக இருந்ததனால், இதன் கீழ் இந்த ஒட்டுசுட்டான் தொழிற்சாலையும் உள்ளீர்க்கப்பட்டிருந்தன.

அந்த வகையில் இதற்கு தேவையான இயந்திரங்களை தருவிக்கும் வகையிலும் இந்த தொழிற்சாலையை மீண்டும் புனரமைத்து பிரதேசத்தில் உள்ள 200 இற்கும் மேற பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நோக்கிலும் அமைச்சர் உடனடியாக இந்த தொழிற்சாலை புனரமைப்பு தொடர்பில் கவனம் செலுத்துமாறு செரமிக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு பணிப்புரையை வழங்கியிருந்ததுடன், 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் செயலிழந்துள்ள தொழிற்சாலைகளை மீள இயக்க வைப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்த அடிப்படையில் குறித்த தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க தேவையான அனைத்து நடவடிக்கையினையும் மேற்கொண்டுள்ளதாக கடந்த 26 ஆம் திகதி முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த அமைச்சர் றிசாத் பதியுதீன் கூறினார். (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1127

## மீசைக்காரன் செய்த கலாட்டா



...சற்று நேரத்தில் அவர் வெளியே வந்து தண்ணீர் எடுத்துப் போனார். அதன் பின் சிறிது நேரத்தில் மீசைக்காரர் வெளியே வந்தார்.

இது நடந்து சில நிமிடங்களுக்குப் பிறகு, கமலாவின் தந்தை 'ஐயோ! ஐயோ!' என்று அலறிக் கொண்டே தன் அறையிலிருந்து ஓடி வந்தார்.

"வரதட்சிணைக்காக வைத்திருந்த பணம் பத்தாயிரத்தையும் காணவில்லை.

அந்த மீசைக்காரர் என்னை தண்ணீர் கொண்டு வரச் சொல்லி வெளியே அனுப்பிவிட்டு, பெட்டியில் இருந்த பணத்தைத் திருடி விட்டார்!" என்று வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு புலம்பினார்.

அதேசமயம், ரவியின் தந்தையும் கூச்சலிட்டபடி ஓடி வந்து "எங்கே அந்த மீசைக்காரர்? என் பெட்டியிலிருந்து ஐயாயிரம் ரூபாயைத் திருடி விட்டார்!" என்று கூவினார்.

இரு வீட்டுக்காரர்களும் மீசைக்காரரைத் தேட, அவரைக் காணவில்லை.


அப்போதுதான் அவர் பணம் திருடுவதற்காக நாடகமாடியிருக்கிறார் என்பது புலனாகியது.

ரவி தன் தந்தையை தனியே அழைத்துச் சென்று, 'அப்பா! நான் முன்னமே இந்த வரதட்சிணை விவகாரமே வேண்டாம் என்று கூறியும் நீங்கள் கேட்கவில்லை. இப்போது பாருங்கள்! நமக்கு வர வேண்டிய பணமும் போயிற்று. உங்கள் பணமும் திருட்டுப் போய்விட்டது.

போனது போகட்டும்! நம் சம்பந்தி எத்தனையோ சிரமப்பட்டு நமக்காக ஏற்பாடு செய்த வரதட்சிணை அநியாயமாகக் களவு போய்விட்டது. இந்த விடயத்தை இத்துடன் விட்டு விடுங்கள்! முகூர்த்த நேரம் நெருங்கி விட்டது!' என்றான்.

ரவியின் தந்தை அரைமனத்துடன் சம்மதித்தார். குறித்த முகூர்த்தத்தில் திருமணமும் நடந்தேறியது.

திருமணத்தன்று மாலை தன் கணவனுடன் தனியாக வண்டியில் செல்லும்போது, 'மிக மகிழ்ச்சி கரமாக நடந்திருக்க வேண்டிய திருமணம் இப்படியாகி விட்டதே! அநியாயமாக பணம் களவு போய்விட்டது?' என்று வருத்தப்பட்டாள்.



அதைக் கேட்டு கடகடவென சிரித்த ரவி, "பணம எதுவும் களவு போகவில்லை.

இது நானும், உன் தந்தையும் சேர்ந்து நடத்திய நாடகம்!

உன் வீட்டிற்குப் பெண கேட்க வந்திருக்கையில், எங்களை வழி அனுப்புவதற்கு உன்அப்பாவெளியே வந்தபோது, என் அப்பா தனக்குப் பரிச்சயமான ஒருவர் தெருவில் சென்று கொண்டு இருந்ததைப் பார்த்து, அவருடன் பேச ஆரம்பித்தார்.

அந்த சமயம் நான் உன் அப்பாவிடம் என்னுடைய திட்டத்தை ரகசியமாகக் கூறினேன்.

உண்மையில், மீசைக்காரர் எனக்கு நன்கு பழக்கமானவர்.

அவரைக் கொண்டு இப்படியொரு நாடகமாடத் திட்டமிட்டேன்.

நாங்கள் போட்ட திட்டப்படி, தனக்கு இருமல் வருவது போல் அவர் நடிக்க என் அப்பா தண்ணீர் எடுத்து வர வெளியே சென்றார்.

நான் அதற்கு முன்னதாகவே அப்பாவின் பெட்டியிலிருந்து ஐயாயிரம் ரூபாய் எடுத்து அவரிடம் தந்துவிட்டேன்.

பிறகுதான் அவர் உன் அப்பாவின் அறைக்குள் சென்றார்.

உண்மையில் உன் அப்பாவிடம் வரதட்சிணைப் பணமே இல்லை.

பணம் திருட்டுப் போய் விட்டது போல் நடித்தார்.

என்னுடைய அப்பாவும் பணத்தைத் திருட்டுக் கொடுத்திருந்ததால், உன் அப்பாவின் வரதட்சிணைப் பணம் திருட்டுப் போனதை அப்படியே நம்பிவிட்டார்.

நமது திருமணமும் நன்கு முடிந்தது!' என்றான்.

"அப்படியா? எனக்காகவா இப் படியொரு நாடகம் நடத்தினீர்கள்!

பாவம்! அந்த மீசைக்காரர் என்றாவது பிடிபட்டால்?' என்றாள் கமலா !

'கவலைப்படாதே! அவர் பிடிபடமாட்டார்! அவர் ஒரு கைதேர்ந்த நாடக நடிகர்!

அன்று அவருடைய கிருதா, மீசை எல்லாம் போலி! அவர் எடுத்துப் போன ஐயாயிரத்தையும் பிறகு அவர் எனக்குத் திருப்பிக் கொடுத்து விடுவார்!' என்றான் ரவி.

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

04.2015
29

- 1672 - பிரான்சின் பதினான்காம் லூயி மன்னன் நெதர்லாந்தை முற்றுகையிட்டான்.
- 1770 - ஜேம்ஸ் குக் ஆஸ்திரேலியாவின் இன்றைய சிட்னியை அடைந்து தான் சென்ற இடத்துக்கு பொட்டனி விரிகுடா எனப் பெயரிட்டான்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: நியூ ஓர்லென்ஸ் நகரம் கூட்டணிப் படையிடம் வீழ்ந்தது.
- 1882 - பெர்லின் நகரில் எலெக்ட்ரோமோட் எனப்படும் பேருந்து வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1916 - முதலாம் உலகப் போர்: பிரித்தானிய இந்தியப் படைகள் ஓட்டோமான் படைகளிடம் ஈராக்கின் கூட் என்ற இடத்தில் சரணடைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியில் ஜேர்மனிய இராணுவம் நேச அணிகளிடம் நிபந்தனையின்றி சரணடைந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தின் பல பகுதிகளிலும் உணவுப்பொதிகளை விமானத்தில் இருந்து வீசும் மானா நடவடிக்கையை ஐக்கிய இராச்சிய வான்படையினர் ஆரம்பித்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஹிட்லர் ஏவா பிரௌன் என்ற தனது நீண்ட நாளைய காதலியை தனது பெர்லின் சுரங்க அறையில் வைத்து மணம் புரிந்தார். இருவரும் அடுத்த நாள் ஏப்ரல் 30இல் தற்கொலை புரிந்து கொண்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் டாகவ் என்ற இடத்தில் இருந்த வதை முகாமை அமெரிக்கப் படைகள் விடுவித்தனர்.
- 1946 - ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஹிடெக்கி டோஜோ மற்றும் 28 முன்னாள் தலைவர்கள் போர்க் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டனர்.
- 1970 - வியட்நாம் போர்: அமெரிக்க மற்றும் தென் வியட்நாம் படைகள் வியட் கொங் போராளிகளைத் தேடி கம்போடியாவை முற்றுகையிட்டன.
- 1975 - வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க குடிமக்கள் சாய்கோன் நகரை விட்டு புறப்பட்டனர்.
- 1986 - லொஸ் ஏஞ்சலீஸ் நகர பொது நூலகம் தீப்பிடித்ததில் 400,000 நூல்கள் அழிந்தன.
- 1991 - வங்காள தேசத்தில், சிட்டாகொங்கில் இடம் பெற்ற சூறாவளியில் 138,000 பேர் வரையில் உயிரிழந்தனர். 10 மில்லியன் பேர் வீடுகளை இழந்தனர்.
- 2005 - 29 ஆண்டு கால முற்றுகையின் பின்னர் லெபனானில் இருந்து சிரியா முற்றாக வெளியேறியது.

### பிறப்புகள்

- 1818 - இரண்டாம் அலெக்சாண்டர், ரஷ்யாவின் பேரரசன் (இ. 1881)
- **1848 - ரவி வர்மா, இந்திய ஓவியர் (இ. 1906)**
- 1891 - பாரதிதாசன், புரட்சிக்கவிஞர், பாவேந்தர் (இ. 1964)
- 1938 - திமிலை மகாலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (இ. 2010)
- 1957 - மேமன்கவி, ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கியப் படைப்பாளி
- 1970 - அன்ட்ரே அகாசி, முன்னணி டென்னிஸ் ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1843 - வின்சென்ட் ரொசாரியோ, இலங்கையின் முதல் ஆயர்.
- 1980 - ஆல்ஃபிரெட் ஹிட்ச்காக், ஆங்கிலத் திரைப்பட இயக்குனர் (பி. 1899)

### ரவி வர்மா



ராஜா ரவிவர்மா கேரளாவின் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள கிளிமானூர் எனும் ஊரில் 1848 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலிருந்தே சமஸ்கிருதம், மலையாளம் ஆகியவற்றுடன் ஓவியத்தையும் தம்முடைய உறவினர் ராஜா ராஜவர்மாவிடமிருந்து கற்றுக்கொண்டார்.

இவர் திருவாங்கூர் மன்னர் ஆயில்யம் திருநாள் மகாராஜாவின் உதவியுடன் 1862 ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் அரண்மனையில் எண்ணெய் வண்ண ஓவியக்கலையை அரண்மனை ஓவியர் ராமசாமி நாயுடுவிடம் ஒன்பது ஆண்டுகள் பயின்றார். அவ்வேளையில் அரச குடும் பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்துகொண்டார்.

தியோடோர் ஜென்சன் என்னும் ஐரோப்பியர் 1868 இல் அரண்மனை வந்திருந்தபோது அவர் ஓவியம் வரையும் முறையையும் உத்திகளையும் அருகில் இருந்து கவனித்து அதன் மூலம் தாமும் அந்த ஐரோப்பியக் கலையைக் கற்றுக்கொண்டார். அயில்யம் திருநாள் மகாராஜா, ரவிவர்மா தம்மை மிகச் சிறப்பாக வரைந்ததற்காக வீரஸ்ருங்கலா என்னும் உயரிய விருதை அளித்தார்.

1894 ஆம் ஆண்டு மும்பையில் தமது அச்சகத்தை நிறுவினார். 1896 இல் அவரது அச்சகத்தில் முதல் பிரதி ஓவியம் தமயந்தி அன்னப்பட்சி யுடன் உரையாடும் ஓவியம் அச்சிடப்பட்டது. நவம்பர் 24, 2002 இல் டில்லியில் நடந்த ஓவிய ஏலத்தில் இவரது யசோதையும் கிருஷ்ணனும் ஓவியம் 56 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

உலகப் புகழ்பெற்றவர்களின் ஓவியங்களை வரைந்த இவர், 1906 இல் தமது 58 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

**'நண்பரே...'**

முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசும்போது, ரஜினியை 'மித்ருடு' (நண்பரே) என்று குறிப்பிட்டார்.

அவர் பேசுகையில் கூறியதாவது:-

'பெத்தராயுடு படத்தில் உங்களுக்கு நல்ல கேரக்டர் அமைந்தது. அதுமட்டுமல்ல. நிஜ வாழ்க்கையிலும் நல்ல கேரக்டர் உடையவர் நீங்கள். மேடைக்கு நீங்கள் வந்த போது, பொதுமக்கள் எவ்வளவு ஆர்வத்தோடு வாழ்த்தொலி எழுப்பினார்கள் பார்த்தீர்களா!

தமிழ்நாட்டுக்கு வெளியே ஆந்திராவில் கூட இவ்வளவு ஆதரவு உங்களுக்கு இருக்கிறது. எனவே, தமிழக மக்களின் கோரிக்கையை ஏற்று நீங்கள் அரசியலுக்கு வர வேண்டும்' இவ்வாறு கூறிய சந்திரபாபு நாயுடு, ரஜினி பக்கம் திரும்பி, எப்போது அரசியலுக்கு வரப்போகிறீர்கள் என்று கேட்பது போல், கையினால் சைகை செய்தார். ஆனால ரஜினியோ முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல், மௌனமாக இருந்தார்.

**தெலுங்கில் பேச்சு**

சந்திரபாபு நாயுடு பேசி முடித்ததும், ஒலி பெருக்கி முன் வந்து நின்றார், ரஜினி. அப்போது, கூடியிருந்தவர்கள் எழுப்பிய வாழ்த்தொலியும், கைத்தட்டலும் அடங்க வெகு நேரம் ஆயிற்று. ரஜினிகாந்த் தெலுங்கில் பேசினார். இவரும் சந்திரபாபு நாயுடுவை 'மித்ருடு' என்றே குறிப்பிட்டார்.

தன் பேச்சில் ரஜினிகாந்த் கூறியதாவது:-

'உங்கள் (சந்திரபாபு நாயுடு) ஆட்சி தொடர்ந்து நடக்கவும், வரப்போகும் பாராளு மன்ற தேர்தலில் நிறைய இடங்களைப் பெறவும் பெரியவர் (என்.டி.ராமராவ்) ஆசி உங்களுக்குத்தேவை. பெரிய பொறுப்பு கொடுத்து அவரை டெல்லியில் உட்கார வைத்து விட்டு, மாநிலத்தின் முதல்-அமைச்சராக நீங்கள் நீடிக்க வேண்டும். அதற்காக, நீங்கள் அவருடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும்' இவ்வாறு ரஜினி கூறினார்.




ரஜினிக்கு தங்கக்காப்பு அணிவிக்கிறார், ஏ.நாகேசுவரராவ். நடுவில் சந்திரபாபு நாயுடு.

**தங்கக்காப்பு**

'பெத்தராயுடு' படத்தில் கலைநயம் மிக்க ஒரு பெரிய தங்கக்காப்பை ரஜினி அணிந்திருப்பார்.

அதேமாதிரியான தங்கக்காப்பை, 30 பவுனில் செய்து ரஜினிக்கு நினைவுப் பரிசாக வழங்கினார், மோகன்பாபு. மேடையில் இதை ரஜினியின் கையில், பழம்பெரும் நடிகர் ('தேவதாஸ்' படப்புகழ்) ஏ.நாகேசுவரராவ் அணிவித்தார். அப்போதும் ரசிகர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் விண்ணைப் பிளந்தது.

**'வீரா'**

சந்தர்ப்ப சூழ்நிலையால் மீனா, ரோஜா ஆகிய இருவரை மணந்து கொண்டு திண்டாடும் 'இரண்டு பெண்டாட்டிக்காரராக' ரஜினி நடித்த படம் 'வீரா'

நகைச்சுவை கலந்த இந்தப் படம் நூறு நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி வாகை சூடியது.

**கதை**

இப்படத்தில், முத்துவீரப்பன் என்ற கிராமத்து இளைஞனாக ரஜினி நடித்தார். நன்றாகப் பாடும் ஆற்றல் கொண்ட ரஜினி, பெரிய பாடகராக வேண்டும் என்று விரும்புகிறார்.

இந்த பாடகர் கனவுடன் திரிந்தவர் கண்ணில், 'கவிதை'யாக தென்படுகிறார் மீனா. பார்வைப் பரிமாற்றங்கள் 'காதல் மொழி'யில் போய் முடிய, காதலித்த வேகத்தில் திருமணமும் நடந்து முடிந்து விடுகிறது.

*(தொடரும்)*





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-127**

..**இ**ருதயத்துக்குள்ள உடைஞ்சுபோன சில்லுகளுக்கு மத்தியில சொல்லுகளும் மாட்டிக்கிருச்சு சுப்பஞ்செட்டியாருக்கு.

மால மாத்துன பொம்பளையச் சீல மாத்த விடல. அழுத்தித் தலவார விடல; அழுத சொகங்காண விடல; பொருந்தி உக்காந்து பொண்டாட்டிக ரெண்டு பேரையும் களி திங்க விடல.

பட்டியில மாடுகளக் கௌப்புற மாதிரி பொண்டாட்டிக ரெண்டு பேரையும் முத்துக்காமு பத்திட்டான் பத்தி.

நெத்தி நெலப்படியில இடிக்க சாமிவீட்டுக்குள்ள புகுந்த சுப்பஞ்செட்டியாரு இத்துப்போன பழைய தகரப் பொட்டியத் தெறந்தாரு.

அந்தப் பொட்டியப் பாத்தாக் களவாணிப் பயலுக்கும் கண்ணீர்வந்திரும். வந்தவன் கையில ஒண்ணு ரெண்டு இருந்தா அவன் போட்டுட்டுப் போயிருவான். அந்தப் பொட்டி அடியில கெடந்த பழைய காகிதப் பொட்டலம ஒண்ண எடுத்துப் பிரிச்சுக்கிட்டே இந்தா மகளே! இதுல காதோலையும் முருகுத்தட்டுமிருக்கு. ஆத்தா செத்தன்னைக்கி ஒம் பங்குக்குன்னு அப்பன் எடுத்து வச்சது.

பசுமாடு செத்த வீட்ல கன்னுக்குட்டி கதர்ற மாதிரி ஓ...ன்னு கதறி அழுது உசுர் வத்திப் போனா பவளம்; அப்பன் சீதனம் தரச் சேத்து வச்சிருந்த பழைய குடத்தையும் வாங்கிக்கிட்டா.

ஏறு வெயில்ல கொடபுடிச்சு முத்துக்காமி முன்னப் போக, பொண்டாட்டிக ரெண்டு பேரும் ஆளுக்கொரு சுமை சொமந்து அவன் பின்னால போக, ஊர் எல்லையில ஓடக் கரைக் கருவேல மரத்தடியில கருவாச்சி கட்டிப்புடிச்சு அழுகுறா அக்கா தங்கச்சிக ரெண்டுபேரையும் அணச்சு.

ஒரு ஊர்ல பெறந்தோம்; ஒண்ணாவே வளந்தோம். எந்துன்பம் கேட்டமுக நீங்க இருந்தீக; ஒங்க துன்பம் கேட்டமுக நான் இருந்தேன்; இன்னைக்கித்தாண்டி நான் நாதியில்லாம நிக்கிறேன் நடுத்தெருவுல.

என்னிய மறந்துராதீங்கடீ. அப்பன் இல்லாத காலத்துலயும் நம்பி வாங்கடி நம்மூருக்கு; கருவாச்சி இருக்கேன் கஞ்சி ஊத்த. மூணு பொம்பளைகளுக்கும் ஒண்ணு சொன்னாப்புல ஊத்துது கண்ணீரு.

அதுக்கு மேல ஒரு பேச்சும் பேச முடியல; ஊள்கூடு வேகுது.

என்னமோ ராச்சியத்த எழந்து வார ராணிக மாதிரி இந்த ஏங்கு ஏங்குறீக. வாங்கடி ஏலா... வாங்கடி...

புருசன் சத்தம் விடவும் கடைசியாக் கண்ணத் தொடச்சுப் பொறப்புடப் போன பொம்பளைக, ஒத்தக்கையில அவுந்த வேட்டியப் புடிச்சுக்கிட்டே அப்பன் ஓடிவாரதப் பாத்து நின்ட எடத்துல நின்டு போனாளுக. *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில்,
# அருள்தரும் அன்னை ஸ்ரீ வடபத்
## மன்மத வருஷ ம
# புதிய சித்திரத் திருத்தே
## 29.04.2015 புதன்



### மஹோற்சவ குருவின் ஆசியுரை



இறைவனுடைய திருவடிகளை அடைவதற்காகவே பிறவி எடுத்தோமாதலால் அத்திருவடிகளைச் சிந்தித்தலும் துதித்தலும் விழாக்கள் எடுத்து வணங்குதலுமே நமது கருமமாகும். அந்தவகையில் தாவடிக் கிராமத்தில் அந்தணப் பெரியோரின் சிந்தையில் எழுந்த கோவிலே ஸ்ரீ வட பத்திர காளி அம்பாள் கோவிலாகும். இக்கோவில் வட திசை நோக்கி அமைந்ததனால் இப்பெயர் பெறக் காரணமாயிற்று. இங்கு சித்திரா பூரணையை தீர்த்தாந்தமாகக் கொண்டு பதினைந்து தினங்கள் பெருவிழா எடுத்து அடியார்கள் வணங்கி வருகிறார்கள். இவ்வருடம் ஆதீன கர்த்தாவான பிரம்மஸ்ரீ நா. சசிதரசர்மா (ரவி ஐயர்) அவர்களின் தளராத முயற்சியாலும் உபயகாரர் மற்றும் அடியவர்களின் பெரும் பங்களிப்போடும் கொழும்பு லக்ஷன் சிற்பக் கலைக் கூடக் கலைஞர்களின் பேருழைப்போடு விஸ்வப் பிரம்மஸ்ரீ தம்பிப்பிள்ளை சிறிதரன் அவர்களால் அம்பாளுக்கு ஒரு புதிய அழகிய சித்திரத் தேர் உருவாக்கப்பட்டு இன்று அதன் வெள்ளோட்ட பெருவிழா நடைபெறுவது சிறப்பானது.

பஞ்ச கிருத்தியங்களை உணர்த்தும் மஹோற்சவ விழாவிலே தேர்த்திருவிழாவானது ஆணவம், கன்மம், மாயையை இறைவன் திருவருளால் அழித்து ஜீவராசிகள் முக்தி பெறுதலை குறிப்பதாகும். தேர்த்திருவிழா என்றதும் அந்தக் கிராமமே விழாக்கோலம் பூண்டு காட்சி தருவதோடு ஊர்கூடி வடம்பிடித்து தேர் இழுக்கும் பக்திமயமான கண்கொள்ளாக் காட்சியாகவும் அமைந்துவிடும்.

தேரின் சக்கரங்களில் சூரிய சந்திரனும், பாரின் நுனியில் நால் வேதங்களும், அச் சில் விருஷபரும் விஷ்ணுவும், ரச்சுப்பகுதியில் அஷ்டநாகங்களும், அச்சில் மேல் எட்டுத் திக்கிலும் இந்திராதி தேவரும், அஷ்ட கஜங்களும், பூதாஷ்டகமும், அனந்தாதி அஷ்ட தேவரும், பட்டிகையின் பத்துத் திசைகளில் நூறு உருத்திரரும் மற்றும் அஷ்ட மங்கலங்களும், ஸ்தம்பங்களில் 36 தத்துவங்களும், எட்டுக் கொடிகளும் பூஜிக்கப்படுவதோடு தட்சணாமூர்த்தி , விநாயகர், குமாரர், சதாசிவரோடு, சாரதியாக பிரம்மாவும் அச்சிக்கப்பட்டு சர்வலோக நாயகியான ஸ்ரீ வடபத்திரகாளி தேரில் ஆரோகணித்து அருள்புரியும் திருவருட்காட்சியை காண நாம் ஆவலோடு விரதம் பூண்டிருக்கிறோம்.


இச்சித்திரத்தேரின் திருப்பலியில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் , ஆதீன கர்த்தாவுக்கும் , சிற்பக் கலைஞர்களுக்கும், கூடி வடம்பிடிக்கவரும் அடியார் திருக்கூட்டத்திற்கும் அன்னை மங்கல நாயகியின் திருவருள் கைகூட நல்லாசிகளை தெரிவிப்பதோடு இன்று நடைபெறும் வெள்ளோட்டப்பெருவிழாவும் 02.05.2015 சனிக்கிழமையன்று நடைபெறவிருக்கும் தேர்த்திருவிழாவும் சிறப்பாக நடைபெற நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| இஷ்டம் மனிஷாண! | "மதுர மந்திரமாமணி" |
| அமும் மனிஷாண! | சிவஸ்ரீ குமார சரவணபவ குருக்கள் (J.P), |
| ஸர்வம் மனிஷாண! | இணுவில். |

வேண்டும் வரம் அளித்து அருள் தந்து காக்கும்
அன்னை ஸ்ரீ வட பத்திரகாளியின் திருவருளால்
நாட்டில் நிலையான சாந்தியும் சமாதானமும்
கிடைத்து எல்லோரும் இன்புற்று வாழ பிரார்த்திக்கின்றோம்.

**ஆதீனகர்த்தா, ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.**


### சித்திரத்தேரில் பவனி வரும் பத்திரகாளி அம்பாள்



தாவடி வடபத்திரகாளி அம்பாளின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.வரலாற்றுப் புகழ் பெற்ற எமது குலதெய்வமான பத்திரகாளி அம்பாளிற்கு சித்திரத் தேர் அமைக்க வேண்டும் என்ற அடியார்களின் நீண்டநாள் கனவு இன்று நனவாகுவதையிட்டு அம்பாளின் அருளினை வியந்து நிற்கின்றோம். இந்த அழகுமிகு சித்திரத்தேரினை அமைக்கவேண்டு மென்ற ஆலய தர்மகர்த்தாவின் நீண்டநாள் விருப்பம் நிறைவேறுவது கண்டு அவரும் அவரது அடியவர்களும் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்து நிற்கின்றோம். வட பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஆண்டுதோறும் ஏதோ ஒரு புதிய அபிவிருத்தியைக்கண்டு வருகின்றது.இவ்வருடம் பல மில்லியன் ரூபா செலவில் அழகான சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் நிகழவேண்டுமென்ற அம்பாளின் அருள் கைகூடுவது கண்டு திருவிழா உபயகாரர்களும் அம்பாளின் அடியவர்களும் மனம்பூரிப்படைகின்றோம்.வேலை ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட காலத்திற்குள் சித்திரத்தேரோட்டம் நிகழவேண்டும் என்ற ரவி ஐயாவின் விருப்பம் அம்பாளினால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை எண்ணும் பொழுது உடல் புல்லரிக்கின்றது.

அம்பாளின் சித்திரத்தேரினை ஆக்குவதற்கு பணத்தினை வாரி வழங்கிய உள் நாட்டு, வெளிநாட்டு அடியவர்களுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள் ளோம். இந்த சித்திரத்தேரினை விரைவாகவும் அழகாகவும் ஆக்கித்தந்த ஆச்சாரிய பெருந்தகையின் கைவண்ணத்தை பாராட்டாமல் இருக்க முடியாது.மொத்தத்தில் அம்பாளுக்கென உருவாக்கப்பட்ட இச்சித்திரத்தேருக்கு ஆதரவு வழங்கிய அனைத்து அம்பாள் அடியவர்களுக்கும் ஆலயத்தின் நலன்விரும்பி என்ற வகையில் எமது உளமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்க ளையும் தெரிவித்துக்கொள்வதுடன் அம்பாளின் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இந்திரவிழாபோல் சிறப்பாக நடைபெற அருள் செய்ய வேண்டுமென எம் பெருமாட்டியை இறைஞ்சி நிற்கின்றேன்.

*பேராசிரியர் க.தேவராஜா*
*தலைவர்/வணிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்*
*தாவடி வடக்கு, கொக்குவில்.*



### பக்தருக்கருள்புரியும் பத்திரகாளித் தாயே!

கொக்குவில் தாவடி தெற்குக் கிராமத்திலே வடதிசை நோக்கி எழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டும் வரம் தந்து காத்து அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீ வடபத்திரகாளியின் அருள் பிரவாகம் அளவிட முடியாது.

அடியார்களினால் 'எங்கடை ஆச்சி', 'பத்திரகாளி ஆச்சி' என அன்பு ததும்பச் செல்லமாக அழைக்கப்படுபவள். கிராம மக்கள் தாம் எண்ணும் கருமங்களின் சிந்தனையில் ஆச்சிக்கே முதலிடம் கொடுப்பவர்கள். இன்றும் அவளின் அற்புத அருளுக்குப் பாத்திரராகிப் பயத்துடனும் பக்தியுடனும் வழிபடுபவர்கள்.இத்தகைய சிறப்புப் பெற்ற எங்கள் பத்திரகாளியின் தல வரலாறு மகத்துவமானது. சுமார் 48 நிலப்பரப்பளவைத் தன்னகத்தே சுற்றாடலாகக் கொண்டு அமர்ந்திருந்து அருளாட்சி செய்பவள்.சரித்திரம் தெரிந்தவரை 200 வருட காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதி வரையறை தெரியாத சரித்திர வரலாறு கொண்டவள் எங்கள் ஆச்சி.

உறவுமுறை கொண்ட நான்கு அந்தண சிரேஷ்டர்கள் அம்பாள் ஆலயம் அமைய அத்திபாரமிட்டவர்கள்.முதலில் மண் கோயிலாக மடம் கட்டி அதில் அம்பாளை வைத்து வழிபட்டதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. வளர்ச்சிப் படிமுறையில் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டு ஓலைக் கொட்டிலில் அம்பாளின் வழிபாடுகள் வளர்ச்சியடைந்தது. வளர்ச்சியின் அடுத்த நிலையில் ஆலயத்தை மெருகூட்ட எடுத்த முயற்சி வெள்ளைக் கற்களினால் அதை உருவாக்கும் வரை நிறைவேறியது. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற அற்புதங்கள் பல அளவிடமுடியாதவை.

ஆலய சுற்றாடலில் அன்னையின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். அடியார்கள் அவ்வழியே செல்வதற்கு அஞ்சுவர். இன்றும் பல அடியார்கள் இதை நினைவுபடுத்தும் போது மெய்சிலிர்க்கும். காலக் கிரமத்தில் அம்பாளின் திருவுருவில் ஏற்பட்ட சிறு பின்னல் காரணமாக 1965 ஆம் ஆண்டில் புதிய அம்பாள் பிரதிஷ்டை பண்ணும் தேவைக்கு வழிகோலியது. எனினும் இன்றும் ஆலய உள் பிரகாரத்தில் பின்புறத்தில் ஆதி அம்பாள் வீற்றிருந்து அருள் வழங்குவது சிறப்பம்சமாகும்.

தினமும் மூன்று நேரப் பூசைகள் நேரம் தவறாமல் நடைபெறும் எமது ஆலயத்தில் சித்திரா பௌர்ணமி

**மஹோற்சவ**
**இரதோற்சவ**
**நாள்**
**02.05.2015**
**சனிக்கிழமை**
**பகல் 11.00**
**மணி**


அம்பாள் ஹாட் வெயர்ஸ்
சுதுமலை வீதி,
தாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சாந்தி

# தாவடி தெற்கு
# திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
# ஹோற்சவம்-2015
# ர் வெள்ளோட்ட விழா
## கிழமை மாலை 4.00 மணி





யைத் தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு 15 தினங்கள் மஹோற்சவம் வெகுசிறப்பாக நடைபெறும். இக்காலப்பகுதியில் ஆலயமும் சுற்றாடலும் கிராமமும் கோலாகலமாகக் காணப்படும்.

இந்த ஆலயத்தில் கௌரி நோன்பு, நவராத்திரி விழா நாட்களும் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக் து. குடாநாட்டின் பல பகுதிகளிலும் மற்றும் வெளிநாடுகளிலிருக்கும் அம்பாள் அடியார்களும் நோன்புக் ாப்பை வந்து பெற்றுக்கொள்வார்கள். இவற்றுடன் தைப்பொங்கல்,மாசிமகம்,பங்குனித்திங்கள்,வைகாசி விசாகம்,ஆனி உத்தரம்,ஆடிச்செவ்வாய், ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் திங்கள், மார்கழித் திருவெம்பாவை பான்ற அனைத்து மாதாந்த உற்சவங்களும் சிறப்பாக நடைபெறும்.

மாசி மாதக் கடைசி வெள்ளிக்கிழமைகளில் அம்பாளுக்கு விளக்கேற்றும் வைபவம் நடைபெறும். பங்குனி மாத முதல் வெள்ளிக்கிழமை அம்பாள் அழகிய காராம்பசு வாகனத்தில் அடியார்கள் புடைசூழ எழுந்தருளி கிராம ஊர்வ ம் வந்து அடியார்கள் குறைகளையும் திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழியெங்கும் ரண கும்பங்களும் அடியார் கூட்டங்களும் அம்பாளை வரவேற்றுத் தம் குறை கூறி அருள்பெறுவர்.

கிராம ஊர்வலத்தின் போது அடியார்களின் வெப்ப நோய்களை அம்பாள் தன்னகத்தே எடுத்து அருள் ழங்குவதான அற்புதம் தனித்துவமானது. அம்மா, பிள்ளையார், முருகன் பிள்ளைகள் இருவரையும் மற் ம் தோஷ நிவர்த்தி செய்யும் நவக்ரக நாயகர்களையும் பைரவர் சண்டேஸ்வரி உள்ளிட்ட பரிவார மூர்த்திக ளையும் கொண்டு எழுந்தருளி அருளாட்சி செய்யும் திருக்கோலம் காணக்கண் கோடி வேண்டும்.

ஆதிகாலம் முதல் இன்றுவரை அடியார்களின் பூரண ஒத்துழைப்புடன் அர்ச்சகரே ஆதீனகர்த்தாவாக ருந்து அனைத்துத் திருப்பணி வேலைகளையும் கவனித்து ஆலய வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டு ருவது சிறப்பம்சமாகும். இன்றைய இரதோற்சவ சிறப்பு நாளிலே அவள்தாள் பணிந்து நாட்டில் மாதானம்,சாந்தி நிலைபெற்றிடப் பிரார்த்தித்து வணங்கி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டி வழிபட்டுத் தர் வட்டம் பிடிப்போம் வாரீர்.

ஓம் சாந்தி எல்லாம் சக்திமயம்

## ஆதீனகர்த்தாவின் ஆசியுரை



ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்த கணநேரத்தில் இருந்து ஸம்ஸ்காரச் சடங்குகளினாலே பிறவிப் பிணிநீங்கி முக்தி இன்பம் பெற இந்து மதம் வழி வகுத்திருக்கின்றது. மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் பஞ்சமகாயக்ஞத்தை தவறாது செய்தல் வேண்டும். அதிலே பதி தர்மம் என்னும் போது ஆலயம் அமைத்து விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து அபிஷேக,ஹோம, அர்ச்சனை, பூஜை,உற்சவ விழாக்கள் செய்து திருவருட்கீர்த்தியைப் பெருக்கி அருள் பெற்றுய்ய வழிவகுக்க வேண்டும். எமது முன்னோரின் சிறந்த பரிபாலனத்தின் காரணமாக எமது குலதெய்வமான ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் கோவில் அனைத்து விரதவிழாக்களும் மஹோற்சவமும் நடைபெறும் பெரும் தேவஸ்தானமாகவும் கிராமமக்களின் மிக முக்கிய வழிபாட்டு தலமாகவும் மிளிர்ந்து காணப்படுகின்றது. நான் சிறுபராயம் முதல் நித்திய பூசையில் இணைந்தது முதல் ஒவ்வொரு வருடமும் படிப்படியாக ஒவ்வொரு திருப் பணிகளும் செய்து ஆலய வளர்ச்சியில் அயராத பணிசெய்து வருகின்றேன். எனது இப் பணிக்கு ஊர் அடியவர்களும் உபயகாரப் பெருமக்களும் வெளிநாடுகளில் வசிக்கும் அன்னையின் மீளா அடியவர்களும் பேருதவி செய்து வருகிறார்கள். இரண்டு மஹா கும்பாபிஷேகங்கள், இராஜகோபுர அமைப்பு, கைலாசவாகனம், தீர்த்தமண டபம், அன்னதான மண்டபம்,சப்பைரதம், அவற்றிற்குரிய தரிப்பிடம், தேர்க்கொட்டகை, மணி மண்டபம் எனப் பற்பல பணிகளை நிறைவு செய்து இப்போது இவ்வருடம் அம்பாளுக் குரிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு இன்று வெள்ளோட்டமும் காண்கின்றோம் என்றால் அன்னைபத்திரகாளியின் திருவருட் துணைதான் காரணம். அம்பாள் என் மூலமாக ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு திருப்பணியாக நிறைவேற்றி வருகின்றாள்.

கொழும்பு லக்ஷன் சிற்பக் கலைக்கூடக் கலைஞர்களின் கைவண்ணத்தில் திரு வாளர் சிறிதரன் அவர்களால் அழகிய சிற்பங்களும் ஆறு அடி உயரமான யாழிகளும் கலைமிகு ஸ்தம்பங்களும் எழில்மிகு சிறு கர்ணக் கூடுகளும் கண்கவர் வர்ணமும் கைக்கு அடங்கா வடமும் கொண்ட இப்பெரும் தேரானது உபயகாரரின் பெருநிதியோடு அடியவர்களின் காணிக்கைகளும் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இப்பெரும்ப ணிக்கு ஆலோசனை வழங்கிய குரு அந்தணருக்கும் அருந்தொண்டாற்றிய கலை ஞர்களுக்கும் ஆதரவு நல்கிய அன்பர்களுக்கும் குறிப்பாக திருநவசன் அவர்களுக் கும் எம்குலநாயகியின் திருவருட்துணையால் சுகானந்தப் பெருவாழ்வு வாழப் பிரார்த்திப்பதோடு வெள்ளோட்டவிழாச் சிறப்புமலர் அன்னை ஸ்ரீ வடபத்திரகாளியின் திருப்புகழ்பாடும் மலராக மலர வாழ்த்துகின்றேன்.

*அன்னையின் பாதம் அனுதினம் துணைசெய்யும்.*
*பிரம்மஸ்ரீ நா.சசிதரசர்மா, ஆதீனகர்த்தா.*

## வாழ்த்துச் செய்தி



திருமூல நாயனாரால் "சிவபூமி" எனப்போற்றப்படும் இலங்கையில் சைவமும் தமிழும் திகழும் ஈழவள நாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் புண்ணிய பூமியாம் தாவடிப் பதியில் நடுநாயகியாக விளங்கும் பத்திரகாளிகாம்பாள் "ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள்" எனக் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலித்து வருகின்றாள். இவ்வாலயத்தில் ஏறக்குறைய 55 ஆண்டுகளுக்கு மேலாக மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது. அப்போது இரதோற்சவம் என அழைக்கப்படும் தேர்த்திரு விழாவில் அன்னை ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் கட்டுத்தேரில் எழுந்தருளி திருவீதியுலா வந்து அருள் பாலித்தாள். யாழ்ப்பாண ஆலயங்களில் சித்திரத்தேரில் இரதோற்சவம் நடைபெற எமது ஆலயத்தில் மட்டும் கட்டுத்தேர் என்பது ஒரு குறையாகவே காணப்பட்டது. இக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இங்கும் அன்னை ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் திருவீதியுலா வந்து அருள் சொரிய ஒரு அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த சித்திரத்தேர் ஒன்றை உருவாக்க பல அடியவர்களும் எண்ணினார்கள். எண்ணிய எண்ணம் ஈடேற அம்பாள் திருவருள் பாலித்தாள். இதன்பேறாக 5 ஆண்டுகளுக்கு முன்னர் ஆலய ஆதீனகர்த்தாவின் முயற்சியோடு பலரது முயற்சியின் பயனாக புதிய சித்திரத்தேர் எமது ஆலயத்தில் உருவாக ஆரம்பித்து பல இலட்சம் ரூபாய் செலவில் அழகிய சித்திரசிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தேரினை கொழும்பைச் சேர்ந்த "லக்ஷன் சிற்பாலயம்" ஸ்தபதி சிற்பாச்சாரியார் தம்பிப்பிள்ளை சிறீதரன் அவர்களின் கைவண்ணத்தில் அன்னை உருவாக்கினாள்.

33 அடி உயரங்கொண்ட அழகிய சித்திரரதம் இன்று வெள்ளோட்டம் கண்டு கொள்ளவுள்ளது. இதனைக் கண்டு நாம் ஆனந்தம் அடைகின்றோம். இதற்கென முழு ஒத்துழைப்பு வழங்கிய ஆலய ஆதீனகர்த்தாவை வாழ்த்துகின்றேன். மேலும் பெருநிதியுதவி செய்த தேர்த் திருவிழா உபயகாரர்களையும் நிதியுதவிகள் செய்த அடியார்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். அழகிய சித்திரத்தேரை உருவாக்கிய ஸ்தபதி சிற்பாச்சாரியார் தம்பிப்பிள்ளை சிறீதரன் அவர்களையும் அவர் சிற்பால சிற்பிகளையும் வாழ்த்துகின்றேன். லக்ஷன் சிற்பாலயப் பணிகள் பல்லாண்டு காலம் தொடர வாழ்த்துகின்றேன்.

புதிய சித்திரத் தேருக்கு வர்ணம் தீட்டி மெருகூட்டிய திருநெல்வேலி சிவன்கோயிலடி தேவசுந்தரம் தணிகாசலம் "ரவி ஆட்ஸ்" குழுவினரை வாழ்த்துகிறேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
"சக்தியை சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்"

இ.பரமேஸ்வரலிங்கம் (ஜே.பி.), உப தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.


அனுசரணை

விஜிதா அரிசி
ஆலை,
த்திரகாளி கோவிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
ரு.பிரசாத் உரிமையாளர்

செல்வி
நகையகம்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாத்தியமற்றதாகத் தோன்றும் நல்லாட்சிக்கான சாத்தியக் கூறுகள்



...நடைபெற முடியாத ஒன்றாக இருந்த ஆட்சி மாற்றம் திடீரென இப்போது நடந்து முடிந்ததுடன் சிலர் அதனை ஒப்பீட்டளவில் கடுமை இல்லாத சிறியதோர் 'அரபு வசந்தம்' என்று குறிப்பிட்டது மட்டுமல்லாது வாக்குறுதி அளிக்கப்பட்டு பெரும் எதிர்பார்ப்புடன் தாம் காத்திருந்த மாற்றங்க ளென்ற உணர்விலேயே இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் மத்திய கிழக்கிலோவென்றால் பெருமளவிலான பாரிய நிதி மூல வளங்களுடன்கூடிய சக்தி வாய்ந்த சர்வாதிகாரத் தலைமைத்துவங்கள், உள்ளக மற்றும் வெளிநாட்டு தலையீடுகள் மூலம் அகற்றப்பட்டதாயிற்று.

இதன்மூலம் நல்லாட்சியுடன் கூடிய ஜனநாயக ஸ்தாபனங்களின் செயற்பாடுகளே மக்களால் எதிர்பார்க்கப்பட்ட புதிய மாற்றங்களாயின. ஆனாலும் இப்பிராந்தியங்களில் பலம்வாய்ந்த ஆட்சியாளர்களில்லாத காரணத்தினால் புதிய பயங்கரவாத அமைப்புகளின் எழுச்சியுடன் எதிராளி நாடுகளின் பின்னணி ஆதரவு பெற்ற சக்திகளாலும் அரசியல் மற்றும் மதவாதக்குழுக்கள் போன்ற ஏனைய வெவ்வேறு போராட்டக் குழுக்களாலும் அப்பகுதிகளனைத்துமே போர்க்களமாகியுள்ளது.

முன்னர் இப்பிராந்தியமே சர்வாதிகாரத்தின் இரும்புப்பிடியில் நசுக்கப்பட்ட விதமான ஒருமைப்பாட்டினை அனுபவித்திருந்தது எனலாம். இந்த 'அரபு வசந்தம்' என்ற மாற்றத்தின் உப- உற்பத்தியொன்றாக உருவெடுத்திருப்பதும் உலகிலேயே பெரும் பணபலம் படைத்த சக்தியாக வளர்ந்து வருவதுமான 'ஐ.எஸ்.ஐ.எஸ்' ('I.S.I.S') பயங்கரவாத அமைப்பானது ஏனைய நாடுகளின் பிரதேசப் பகுதிகளுக்குள்ளும் அத்துமீறி பிரவேசித்து வரும் நிலையில் மேற்கு நாடுகளுக்கு மட்டுமல்லாது முழு உலகிற்குமே பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.



### வெளிவிவகார கொள்கையும் நல்லாட்சியும்

ஒரு நாடானது தனது சர்வதேச உறவுகளுக்கான நிகழ்ச்சி நிரலுக்குட்பட்ட இலக்குகளை எட்டுவதற்கான தனது ஆர்வத்தை தொடர்ந்தும் பாதுகாப்பான முறையில் தக்க வைத்துக் கொள்ளும்படியாக சுய ஆர்வத்திற்குரிய மூலோபாயங்களை தெரிந்து கொள்வதே அதனது வெளிவிவகாரக் கொள்கையாக இருக்கும் எனலாம். 'எல்லோரும் நண்பர்களே! பகையாளி எவருமில்லை!' என்ற பொன்மொழிக்கேற்ற கோட்பாட்டையே இலங்கை தனது அணிசாராக் கொள்கைக்கான அடிநாதமாகக் கொண்டுள்ளது.

எந்தவொரு வல்லரசுக் கூட்டினதும் பின்புல ஆதரவுமில்லாத இலங்கையின் சொந்த நலன்சார்ந்த உள்விவகார கொள் கையின் விசாலிப்பான வெளிவிவகார கொள்கையை சரியானபடி கையாளுவதன் பிரதி பலனையா நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்?

ஒருநாட்டின் 'நிதி' மற்றும் 'பண' ரீதியான பொருளாதார அபிவிருத்தியென்பது வெளிவிவகாரக் கொள்கையின் சரியான முகாமைத்துவத்திலேயே தங்கியதாயிருக்கிறது.

எமது வெளிவிவகார கொள்கை உண்மையில் சரியான விதமாக கையாளப்படுகிறதா? அத்துடன் வெளிவிவகார கொள்கை மற்றும் வெளிவிவகார சேவைகளிலும் நல்லாட்சிக்கான அடிப்படை விதிமுறைகள் பிரயோகிக்கப்படுகிறதா என்பதை நாம் இன்னும் தீர்மானிக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

ராஜபக்ச அரசினால் நியமிக்கப்பட்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் திடீரென இடைநிறுத்தப்பட்டமையானது பல்வேறு இராஜதந்திர ஸ்தானங்களிலும் முக்கியமான இந்தத் தருணத்தில் அதன் சேவைகளைக் கையாளுவதற்கான தலைமைகள்; இல்லாத காரணத்தினால் ராஜதந்திர வலையத்தள (Diplomatic Network) சேவை முடக்க நிலை உருவாகிற்று. இவ்விதமான இடைநிறுத்தங்களை அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி போன்றவற்றுடன் தொடர்புபட்ட வெளிவிவகார தொடர்நடைமுறைகளை குழப்பாது தேவைக்கேற்ற முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக மேற்கொண்டிருக்கலாம்.

இராஜதந்திர சேவைகளுக்குள்ளாகவே முக்கிய மற்றும் [illegible] சேவைகளுக்கென ஆற்றல் வாய்ந்த, [illegible] ஆற்றலுக்கு [illegible] தூது வர்களை பணிக்கேற்றவாறு நாட்டுத் தலைவர்கள் நியமிக்கும் நடைமுறைகளுங்கூட அமெரிக்கா உட்பட ஏனைய வேறு நாடுகளிலும் சாதாரண வழமையாக நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கிறது. வெளிவிவகார கொள்கையை கையாளுவது உட்பட அனைத்து துறைகளிலும் நல்லாட்சிக்கான விதிமுறைகள் கண்டிப்பாகவே கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்ற பார்வை எம் எல்லோருக்குமே உண்டு.

### நல்லாட்சியும் மனித உரிமைகளும்

நல்லாட்சியும் மனித உரிமைகளும் இயல்பாகவே ஒன்றையொன்று உறுதிப்படுத்துபவையேயாகும். நல்லாட்சி நடைமுறையில் இல்லாத நிலையில் மனித உரிமைகள் பொருத்தமான விதத்தில் மதிக்கப்படுவதாக இருக்காது. மனித உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இயல்பானதொரு சூழ்நிலையுடன் கூடிய ஊக்குவிப்புக் காரணிகளுமே உதவிகரமானதாயிருக்கும்.

நல்லாட்சியும் மனித உரிமைச் செயற்பாடுகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவையே. பொருளாதார- சமூக- கலாச்சார மற்றும் அபிவிருத்திகளின் பலனைத்தமது பங்காற்றலுடன் அனுபவிக்கும் அதிகாரபூர்வ உரிமையானது ஒவ்வொரு மனித உயிர்க்கும் உரியதென 'அபிவிருத்தி உரிமைகளுக்கான பொதுச்சட்சம்' (1 ஆவது சரத்து) அறுதியிட்டுக் கூறுகிறது. பொருளாதார கட்டமைப்புடன் அது சம்பந்தமான காரணிகளும் இணைந்த விதமான ஓர் சமநிலைச் செயற்பாடே நல்லதொரு அரசாங்கத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு உகந்தது என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

தேர்தல் பிரசாரத்தின்போது நாட்டில் நல்லாட்சியை நிலைநிறுத்துவதாக வாக்குறுதியளித்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு ஆட்சிக்கான அதிகார ஆணை மக்களால் அளிக்கப்பட்டது. முன்னைய அரசு திருத்திக் கொள்வதற்கும் தற்போதைய அரசு வாக் குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்குமான சந்தர்ப்பத்தினை வழங்கும் விதமாக மக்கள் தாங்களாகவே உரத்த குரலில் தெளிவான முறையில் குரல் எழுப்பி வலியுறுத்தியிருந்தனர். எதிர்காலம் அவர்களையிட்டு தீர்மானிக்குமளவிற்கு போட்டியான தகுதி அவர்களுக்கு இருக்கிறதா? அந்த தகுதி எங்களையே சார்ந்ததாயிருக்கிறது. அதாவது எமது தாய்நாட்டையும் எமது எதிர்கால சந்ததியின் எதிர்காலம் பற்றிய சிந்தனையும் அக்கறையும் எமதேயாகும். எமது அயல் நாடுகளும் உலகமும் எமது நடவடிக்கைகள் மட்டில் நேரடியாகவும் மறைமுக மாகவும் எவ்விதமான பிரதிபலிப்பைக் காட்டப் போகின்றன என்பதை எமது நாட்டின் ஸ்திரத்தன்மை யும் சமாதான நிலைமையுமே நல்லவிதமாக தீர்மானிக்க வேண்டுமென்பதே எமது விருப்பமும் மன்றாட்டமுமாகும்.

ஏனென்றால் தற்போதைய எமது நிலைமை குழப்பகரமான ஒன்றாகவே தோன்றுகிறது. ஆனால், அசாத்தியமானதாக தோன்றியவை சாத்தியமாகியிருப்பதும் வெளிப்படையே. ஆகையால் ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி அவர்களது செயற்பாடுகளே, எமது நாட்டினது ஸ்திரத்தன்மையற்றதும் குழப்பகரமானதுமான நிலையிலிருந்து அதனை வெற்றிகரமான முறையில் சிறப்பாக வெளிக்கொண்டு வரவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

### முன்னேற்றப்பாதை

அனைவருக்கும் அனைத்து விதமான சுதந்திரங்களுடன் கூடியதும் நாட்டின் செல்வச் செழிப்பையும் அபிவிருத்தியையுமே நோக்காகக்கொண்ட பலமான நிர்வாக ஒழுங்கு முறைகளுடன் இணைந்த நல்லாட்சியை கண்டிப்பான முறையில் கடைப்பிடிப்பதே முன்னேற்றப் பாதையாக அமையுமென்பதே வெளிப்படை உண்மையுமாகும். ராஜபக்ச தனது 'குடும்ப அரசியல்' ('Nepotism') மற்றும் ஊழல்கள் பற்றி குற்றச்சாட்டுக்களுக்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்டிருந்தார். அவர்மீதான இக்குற்றச்சாட்டுக்கள் மக்களிடமிருந்தே வந்ததாயிருந்தாலுங்கூட அவர் இப்போதும் அவர்கள் மத்தியில் பிரபல்யமிக்கவராகவும் அவர்களால் தொடர்ந்தும் நேசிக்கப்படுபவராகவுமே இருந்து வருகிறார். சிறிசேன- ரணில் கூட்டானது உயர் மட்டங்களிலான செயற்திறனின்மை மற்றும் ஊழல்கள் போன்றவை மட்டில் மிகவும் குறுகியதான காலவரையறை ஒன்றிற்குள் சிறப்பான விதமாக எதனையும் செய்து விடாத காரணத்தினால் மேற்படி முன்னைய அரசாங்கத்தின்மீதான குற்றச்சாட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் முன்னேற்றமெதுவுமின்றி முடங்கியிருப்பதான குற்றச்சாட்டுகள் கிளம்பியிருப்பதைத் தவிர வேறு எதுவும் நடைபெறுவதாக இல்லை.

சிறிசேன அவர்கள் எஞ்சியிருக்கும் தனது ஜனாதிபதி பதவிக் காலத்திற்குள் தனது கட்சி மற்றும் அரசாங்கம் மீதான அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்துபவராகவே இருக்கிறார். 'அதிகாரம்' என்பது ஒருமித்து அள்ளிக் கொள்ள முடியாத அகன்று பரந்த சமுத்திரம் போல விரிந்து கிடக்கிறது. 'நல்லாட்சி' தத்துவத்தின் அடிப்படையில் தெளிவான ஓர் பாதை எம்முன்னே நீண்டு கிடக்கும்போதே சம்பந்தப்பட்ட கட்சிகள் இவ் விடயத்தில் நாட்டின் நலனுக்காக பிரச்சினைகளை ஏன் தீர்த்துக்கொள்ள முடியாது?

-தமிழில்-யோகர்-

**சாத்தியமற்றதாகத் தோன்றும் நல்லாட்சிக்கான சாத்தியக்கூறுகள் எனும் தலைப்பில் ஸ்ரீலங்கா கார்டியன் பத்திரிகையில் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இஸ்ரேல் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் சரத் விஜேசிங்க எழுதிய கட்டுரையில் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### காணாமற் போனோர் விவகாரம்

# புலிகளே பொறுப்பு

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்பாதுகாப்பு தரப்பினருக்கும் இடையில் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற யுத்த காலத்தின் போது காணாமல் போனோரில் 60 சத வீமானவர்கள், புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகள் காரணமாகவே காணாமற் போயுள்ளனர். அதனால், காணாமற் போனோர் விவகாரத்தில் 60 சதவீதப் பொறுப்பை புலிகளே ஏற்க வேண்டும் என காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.**

இந்தியாவிலிருந்து வெளிவரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

காணாமற் போனோர் விவகாரத்தின் 30 சதவீதமான பொறுப்பை இலங்கை பாதுகாப்பு தரப்பினரும் ஏனைய 10 சதவீதத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய தமிழ் குழுக்களே பொறுப்பேற்க வேண்டும் என்றே முறைப்பாடுகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றார்.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட பொது மக்கள் சாட்சியமளித்துள்ளனர்.



எவ்வாறாயினும், மேற்கண்ட சதவீதமானது மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடுகிறது என்றும் பரணகம சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து காணாமற் போனோரில் 85 சதவீதமானோரும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து காணாமற் போனோரில் 80 சதவீதமானோரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் காரணமாகவே காணாமல் போயுள்ளனர் என்று, எமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோரில் 50 சத வீதமானோர் பாதுகாப்பு தரப்பினரின் நடவடிக்கைகள் காரணமாகவும் ஏனைய 50 சதவீதமானோருக்கு புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் காரணமாகவுமே காணாமற் போயுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள் ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## நிலநடுக்கம் காரணமாக நிர்க்கதியான 46 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

நில அதிர்வினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளான நேபாள மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கச் சென்ற இலங்கை விமானம் நாடு திரும்பியுள்ளது.

குறித்த விமானம் நாடு திரும்பியுள்ளதாக நேபாளத்தில் உள்ள இலங்கைத் தூதுவர் டபிள்யூ. செனவிரத்ன தெரிவித்தார்.

நேபாளத்தில் ஏற்பட்ட கடுமையான நில அதிர்வினையடுத்து, அங்கு நிர்க்கதிக்குள்ளான இலங்கை 19 வயதிற்கு உட்பட்ட மகளிர் காறபந்து அணி வீராங்கனைகள் 14 பேருடன் சேர்த்து, மொத்தம் 46 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேபாளத்துக்கு மருத்துவ உதவிகளை மேற்கொள்ளச் சென்ற இலங்கை விமானப்படையின் ஏசி 130 விமானம் தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக மீண்டும் இலங்கை திரும்ப முடியாத நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

## பத்தாண்டில் நிறைவேற்று அதிகாரம் மோசமாக பயன்படுத்தப்பட்டுள்ளது

நிறைவேற்று அதிகாரத்தை எவ்வாறு மோசமாக பயன்படுத்த முடியும் என்பதனை கடந்த பத்து ஆண்டு கால ஆட்சியின் போது அனுபவிக்க கிடைத்தது என நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேற்று அதிகாரம் மிகவும் மோசமான முறையில் பயன்படுத்தப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் சிறந்தது என்றே மலையக மக்கள் கருதினார்கள். எனினும் 2005 ஆம் ஆண்டு இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது.

நாட்டில் மன்னராக தொடர்ந்தும் ஆட்சி செய்யும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 18 ஆம் திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தார்.

அரசியல் கோணங்களில் பார்வையிடாது, ஏகாதிபத்தியவாதிகள் உருவாவதனை தடுக்கும் வகையில் புதிய அரசியல் சாசனத்திற்கு ஆதரவளிக்கப்பட வேண்டும் என ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### வெற்றி எப்படி நம்மைத் தேடி வரும்?

ஒரு காரியத்தில் வெற்றியடைய வேண்டும் என்றுதான் அதில் நாம் ஈடுபடுகிறோம். அந்தக் காரியம் வெற்றி அடையாமல் போனால் அதற்கு என்ன காரணம் என்பதை ஆராயவும் செய்கிறோம்.

ஒரு ஆமைக்கும் முயலுக்கும் ஒரு போட்டி நடந்தது யார் ஓட்டப் பந்தயத்தில் ஜெயிப்பது என்று. முயல் முதலிலிருந்தே வேகமாக ஓடத் தொடங்கியது. ஆமையோ மெல்ல மெல்ல நடந்து போய்க்கொண்டிருந்தது. அதைப் பார்த்த முயல் கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு போகலாம் என்று நினைத்து படுத்துத் தூங்கி விட்டது. அதற்குள் ஆமை அது இருந்த இடத்தைக் கடந்து சென்று வெற்றிக்கான எல்லையைத் தொட்டு விட்டது. அதனால் ஆமை ஜெயித்து விட்டது என்பது கதை.

இந்தக் கதையைக் கொஞ்சம் மாற்றிப் பார்க்கலாம். எப்படி என்றால் முயல் தன்னுடைய செயலை அத்துடன் நிறுத்திக் கொண்டுவிடவில்லை. நமக்கு ஏன் தோல்வி கிடைத்தது என்று சுய பரிசோதனை செய்தது. தூங்கியதுதான் இதற்கு காரணம் என்ற முடிவுக்கு வந்தது.

மீண்டும் வெற்றியடைய வேண்டும் என்று முடிவு செய்து அந்த ஆமையை திரும்பவும் போட்டிக்கு அழைத்தது. இருவரும் சேர்ந்து ஒரு எல்லையை நிர்ணயம் செய்தார்கள். இப்போது முயல் தூங்காமல் தன்னுடைய வேகத்தைக் காட்டி எல்லையைத் தொட்டு வெற்றி பெற்றது. ஆமை தோற்றது.

இப்போது ஆமை அத்தோடு சும்மா இருக்கவில்லை. நமக்கு ஏன் இந்த தோல்வி ஏற்பட்டது என்று அது யோசிக்க ஆரம்பித்தது. இந்த முயலை ஜெயிக்க வேண்டுமென்றால் ஒரு வழி இருக்கிறது. அதன்படி நாம் செயற்பட்டால் வெற்றி பெறலாம் என்று அது நினைத்தது. அதனால் அது முயலிடம் நான் சொல்லும் இடத்தைத்தான் போட்டி எல்லையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றது. அந்த எல்லை ஒரு ஆற்றங்கரைக்கு அப்பால் இருந்தது. அதை சரியாகப் புரிந்து கொள்ளாத முயல் போட்டிக்கு சம்மதித்தது.

மீண்டும் போட்டி தொடங்கியது. முயல் வேகமாக ஓடியது. ஆற்றின் கரையைத் தொட்டது. தண்ணீருக்கள் நீந்திப்போய் அந்த இடத்தைத் தொடுவது என்பது அதற்கு சிரமமான காரியம். அதனால்முயல்தயங்கிநின்றது. ஆனால்ஆமை ஆற்றைநீந்திச்சென்று எல்லையைத் தொட்டது. இப்போது ஆமை செய்த முயற்சியினால் அது முயலை வெற்றி பெறும் வாய்ப்பைப் பெற்றது.

வாழ்க்கையில் போட்டிகள் வந்து கொண்டேதான் இருக்கும். அந்தப் போட்டிகளை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றித் தெளிவாக நமக்குத் தெரிய வேண்டும்.

இப்போது ஆமை வென்றது. முயல் யோசித்தது இப்போது ஆமையும் முயலும் சேர்ந்து பேசின. ஒரு போட்டியில் நீயும் மற்றொரு போட்டியில் நானும் வெற்றி பெற்றோம். இப்படி நடந்து கொண்டே இருந்தால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. நாம் இருவரும் இணைந்து ஒரு காரியத்தில் ஈடுபடலாம். இதன் மூலம் காலத்தை மிச்சப்படுத்தலாம். அதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்தன. ஆமை சொன்னது இந்த ஆற்றங்கரை வரைக்கும் நான் உன் முதுகில் ஏறிக் கொள்கிறேன். அதன் பிறகு நீ வேகமாக ஓடி அந்த இடத்தைத் தொட்டு விடலாம். அந்த ஆற்றங்கரை வந்த பிறகு நீ என் முதுகிலே ஏறிக்கொள். நான் ஆற்றைக் கடந்து அந்தப் பக்கம் போய்ச் சேர்ந்து விடுகிறேன். இரண்டு பேரும் சேர்ந்தோம் என்றால் நேரத்தை மிச்சப்படுத்தலாம். பல காரியங்களை செய்யலாம் என்று சொன்னது. ஆமையும் முயலும் கூட இவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிற போது மனிதனுக்கும் இந்த உணர்வு வேண்டுமல்லவா? எனவே கூட்டு முயற்சி நல்லது.

நாம் தோல்விகளைக் கண்டு துவளக்கூடாது. அந்த தோல்விக்குப் பல காரணங்கள் இருக்கும். என்னென்ன காரணங்கள் இதற்கு அடிப்படையாக இருக்கின்றன என்பதை புரிந்து கொண்டு அதை நீக்கி விட்டால் வெற்றிக்கான வாய்ப்பு நம்மைத் தேடி வரும்.

மனோதத்துவ ரீதியில் ஆராய்ந்த சில அறிஞர்கள் தோல்விக்கான காரணங்கள் என்னவென்று வரையறை செய்து சில கருத்துக்களை கூறியுள்ளனர்.

**நாம் செய்கிற காரியத்தை சரியான ஆயத்தத்தோடு செய்யத் தொடங்கி இருந்தோமானால் அது வெற்றியாக முடியும். ஆயத்தம் இல்லாமல் திட்ட மிடாமல் ஒரு காரியத்தைத் தொடங்கினால் அது தோல்வியில் முடிவதற்கான வாய்ப்பு அதிகம்.**

சிலபேர் ஏதோ செய்து பார்க்கலாம். சரியாக வந்தால் வரட்டும். இல்லாவிட்டால் போகட்டும் என்கிற அரைகுறை மனதுடன் ஒரு காரியத்தில் ஈடுபடுவார்கள். அதுவும் தோல்வியையே தரும்.

வாய்ப்புகள் வரும்போது சரியான தருணத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் மனோபாவம் நமக்கு வரவேண்டும். அந்த நேரத்தில் கொஞ்சம் சோம்பலாக நாம் இருந்தாலும் அந்த வாய்ப்பானது நழுவிப் போகும். பிறகு நாம் வாய்ப்பைத் தேடி அலைந்தால் அது தோல்வியில்தான் முடியும்.

பொறுமை, முயற்சி, உழைப்பு, பெரியோர் ஆலோசனை பெறுதல் போன்ற நற்பண்புகள் தோல்வியைத் தவிர்த்து வெற்றியை நமக்குத் தேடித்தரும்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவமயமாக்கல்: இலங்கையின் நிலையான அமைதிக்கு முக்கிய சவால்!

2009 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போரின் மூலம் சிங்கள தேசம் பெற்றுக்கொண்டுள்ள வெற்றியை தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் இராணுவப் பலத்தை முதலில் குறைக்க வேண்டும்.

படைக்கலைப்பு என்பது ராஜபக்சவின் போருக்குப் பின்னான முன்னுரிமையாகக் காணப்படவில்லை. ஆனால் இராணுவத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை சிறிலங்கா முன்னெடுக்காவிட்டால், பாகிஸ்தான் போன்று, சிறிலங்கா இராணுவமும் தனது செல்வாக்கை விரிவுபடுத்தி, பொருளாதாரச் செயற்பாடுகளில் அதிகம் பங்கெடுக்கும்.



2009 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போரின் மூலம் சிங்கள தேசம் பெற்றுக்கொண்டுள்ள வெற்றியை தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் இராணுவப் பலத்தை முதலில் குறைக்க வேண்டும்.

**இவ்வாறு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் 'நிருபமா சுப்ரமணியன்' எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட பல்வேறு குறைபாடுகளை சீர்திருத்தும் விதமாக மைத்திரிபால சிறிசேனவால் வரையப்பட்ட 100 நாள் செயற்றிட்டமானது ஏப்ரல் 23 அன்று முடிவடைந்துள்ளது. இதற்கு ஒருநாள் முன்னதாக, சிறிலங்காவின் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான பசில் ராஜபக்ச ஊழல் குற்றச்சாட்டில் சிறிலங்கா காவற்துறையால் கைது செயயப்பட்டார். கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு முன்னர், சிறிலங்காவின் தலைநகரான கொழும்பில் கைதுகள் இடம்பெற்றிருந்தன.

கொழும்பிலுள்ள ஒலிப்பதிவகம் ஒன்றில் ஐந்து தமிழர்கள் மற்றும் மூன்று சிங்களவர்கள் பிடியாணை மூலம் கைது செய்யப்பட்டனர். இவர்களுள் ஒலிப்பதிவகத்தில் பணியாற்றுபவர்கள் மற்றும் குரல் வழங்கும் கலைஞர்களும் உள்ளடங்குவர்.

சிறிலங்காத் தமிழர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஒன்றுக்கு குறித்த ஒலிப்பதிவகம் ஒலிப்பதிவை மேற்கொண்டமை குற்றம் எனக் கூறப்பட்டுள்ளது. சிறிலங்காவின் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்களை இத்திரைப்படம் எடுத்துக் கூறுகிறது. இதில் நான்கு பேரின் உண்மைக் கதை திரைப்படமாக்கப்பட்டுள்ளது.

அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தம் புரிந்து கொண்டிருந்த அந்த வேளையில் இந்நால்வரும் எவற்றைச் சந்தித்தனர் என்பது திரைப்படமாக்கப்பட்டுள்ளது. இதில் நான்கு முக்கிய கலைஞர்கள் நான்கு வேடங்களில் நடிக்கின்றனர். இத்திரைப்படம் தமிழ்நாட்டில் ஒளிப்பதிவு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டது. சிறிலங்கா இராணுவம் வருகின்ற காட்சிகளை உள்ளடக்கிய ஏழு நிமிட விவரணக் காட்சிக்கு சிங்களத்தில் குரல் கொடுப்பதற்காகவே திரைப்படத் தயாரிப்பாளர் இதனை கொழும்பிற்கு அனுப்பியிருந்தார்.

இத்திரைப்படம் சிறிலங்கா இராணுவத்தைக் கொச்சைப்படுத்துவதாகவும், அதில் வரும் காட்சிகள் இராணுவத்தின் நற்பண்புக்கு கேடுவிளைவிப்பதாகவும், மனிதாபிமானமற்றதாகவும், மிகவும் கொடிய காட்சிகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளதகவும் சிறிலங்கா காவற்துறை தெரிவித்துள்ளது.

கொழும்பில் கைதுசெய்யப்பட்ட ஒலிப்பதிவகத்தைச் சேர்ந்த எட்டுப் பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான விசாரணை முடியும் வரை இவர்கள் எவ்விடத்திற்கும் பயணிக்க முடியாது எனத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவில் புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனவரியிலிருந்து இங்கு பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், இவ்வாறான கைதுச் சம்பவங்கள் தொடர்கின்றன.

சிறிலங்கா எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை சிறிலங்காவின் மைத்திரிபால அரசாங்கம் இன்னமும் முன்னெடுக்கவில்லை. 100 நாள் செயற்றிட்டத்தில் சிறிலங்கா வாழ் தமிழ் மக்களின் கோரிக்கைகள் எவையும் இணைக்கப்படவில்லை. சிறிசேன அரசாங்கத்தால் சிறுபான்மைத் தமிழ் மக்கள் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் இன்னமும் நிறைவுசெய்யப்படவில்லை. இதன் அடிப்படையில், தற்போது கலந்துரையாடப்படும் அரசியல் யாப்பு சீர்திருத்தம் மேலும் சிக்கலடையலாம்.

60 ஆண்டுகாலப் பிரச்சினைக்கு 100 நாட்களில் தீர்வுகாண முடியாது. ஆனால் இது தொடர்பில் சிறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க முடியும். இது நீண்டகாலமாக பிற்போடப்படுகிறது.

போருக்குப் பின்னான வாக்குறுதிகள் செயற்படுத்தப்படவில்லை. இராணுவமயமாக்கல் இன்னமும் நீக்கப்படவில்லை. சிறிலங்காவில் இராணுவ மயமாக்கல் நிலவுவதே இங்கு கைதுகள் இடம்பெறக் காரணமாக உள்ளது. கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற கைதுச்சம்பவமும் இதனையே சுட்டிக்காட்டுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போதும் செயற்படுகின்றனர் என்ற சிறிலங்காவின் குற்றச்சாட்டானது போர் இன்னமும் இங்கு முடியவில்லை என்ற தோற்றத்தைக் கொடுக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், ராஜபக்சாக்கள் தமது நாளாந்த ஆட்சிக்காக இராணுவத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். புலிகள் இன்னமும் செயற்படுகிறார்கள் என சிறிலங்கா அரசு கருதுவதாலேயே நாட்டின் இராணுவத்தில் சிங்களவர்கள் மட்டும் இணைக்கப்படுகின்றனர். தற்போதும் தமிழர்கள் சந்தேகிக்கப்படுகின்றனர். இதனாலேயே அண்மையில் கொழும்பிலுள்ள ஒலிப்பதிவகத்தில் இடம்பெற்ற கைதுச் சம்பவம் போன்ற பல சம்பவங்கள் அரங்கேறுகின்றன.

சிறிசேன வாக்குறுதி வழங்கியதற்கிணங்க, தனது 100 நாள் ஆட்சியின் போது நாடாளுமன்றத்தைக் கலைத்து நீதியான தேர்தலுக்கான அழைப்பை விடுக்கவில்லை. ஆனால் இவர் இதனை விரைவில் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. போருக்குப் பின்னான தேசத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக சிறிலங்கா மிகத் தீவிரமாகக் கருதியிருந்தால், இராணுவ மயமாக்கலை இல்லாதொழித்து, தமிழர் பிரச்சினைக்கு அரசியற் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கும்.

சிறிலங்காவில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையுடன் ஆரம்பிக்கின்றேன். 1970 களில், யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆயுதக்குழுக்கள் மீதான முதலாவது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட பின்னர், சிறிலங்காவின் இராணுவத்தின் எண்ணிக்கையானது 30,000 தொடக்கம் கிட்டத்தட்ட 300,000 வரை அதிகரித்துள்ளது. இதில் நாட்டின் தரை, கடல் மற்றும் வான் படையினர் உள்ளடங்குவர். இந்த எண்ணிக்கை போர் முடிவடைந்த போது காணப்பட்டது.

ஆனால் தற்போது இம்மூன்று படைகளினதும் எண்ணிக்கை தொடர்பாக பல்வேறு முரண்பாடான எண்ணிக்கைகள் கூறப்படுகின்றன. எதுஎவ்வாறிருப்பினும் சிறிலங்காவின் உள்நாட்டுப் போர் 2009 இல் முடிவடைந்த பின்னர், நாட்டின் பாதுகாப்புச் செலவீனம் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இராணுவ வீரர்களின் சம்பளம் மற்றும் அவர்களது ஓய்வூதியம் போன்றன அதிகரிக்கப்பட்டுள்ளன.

சிறிலங்காவை மகிந்த ஆட்சி செய்த காலத்தில் நாட்டின் பாதுகாப்புச் செயலராகக் கடமையாற்றிய கோத்தபாய ராஜபக்ச போர் முடிவடைந்த கையோடு இராணுவத்தினரை பொருளாதார நடவடிக்கைகளில் பங்குகொள்ளவும் பொது விடயங்களில் பங்குகொள்ளவும் காலாக இருந்தார். அதாவது சிறிலங்கா இராணுவத்தினர் நகர அபிவிருத்தித் திட்டங்கள் குறிப்பாக, கொழும்பின் அதிகம் பாராட்டப்படும் 'அழகுபடுத்தல்', கல்வி, பல்கலைக்கழக நுழைவு மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சியை வழங்குதல், சிறிய வியாபாரம், விவசாயம், சிவில் விமான சேவை, சுற்றுலாத் துறை, விடுதிகள் மற்றும் உணவகங்கள் போன்றவற்றை நடத்துதல் உட்பட பல்வேறு வருவாய் ஈட்டும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதி போர் அரண் அமைக்கப்பட்டிருந்த முல்லைத் தீவிலுள்ள கடல்நீரேரியிலும் சிறிலங்கா இராணுவத்தினர் உணவு விடுதிகள், விடுதிகள் போன்றவற்றை நடத்துகின்றனர். தமிழ் மக்கள் வாழும் வடக்கில், சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வில் தலையீடு செய்கின்றனர். புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னரே தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மாகாணத்திற்கென சிவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் இந்தப் பிரதேசத்தில் நிலவும் இராணுவ மயமாக்கலைக் குறைக்குமாறு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை அவை எவையும் செயற்படுத்தப்படவில்லை.

சிறிலங்கா இராணுவத்தின் 19 பிரிவுகளில் 16 பிரிவுகள் வடக்கு மற்றும் கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அதாவது 80,000 வரையான இராணுவ வீரர்கள் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மக்களுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை சிறிலங்கா இராணுவத்தினர் 1990 களிலிருந்து கையகப்படுத்தி வைத்துள்ளனர். இதில் இராணுவத்தினர் தமது முகாம்களை அமைத்துள்ளனர். இதற்கும் மேலாக, சிவில் உடையில் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு பணிபுரிகிறது.

தென் சிறிலங்காவில் இவ்வாறான எவ்வித அச்சுறுத்தல்களும் காணப்படவில்லை. ஆனால் சிறிலங்கா முழுமையும் வாழ்கின்ற தமிழர்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். சிங்களப் படையினர் வடக்கில் நிரந்தரமாக நிலைகொண்டு விடுவார்களோ எனத் தமிழர்கள் அச்சம் கொள்கின்றனர். வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையையும் நாடு முழுவதிலும் நிலவும் இராணுவ மயமாக்கலையும் சிறிலங்கா அரசாங்கத்தால் குறைக்க முடியும்.

'எதிரி' என்ற பெயரில் சிறிலங்கா இராணுவம் தனது செல்வாக்கை விரிவுபடுத்தும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான் யுத்தத்தில் சிறிலங்கா இராணுவத்திற்குத் தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவை ராஜபக்சாக்கள் கைதுசெய்ததன் மூலம், இராணுவம் நாட்டின் தலைமையின் கீழ்ச் செயற்பட வேண்டுமேயன்றி பாதுகாப்புப் படைகள் சதி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடமில்லை என்கின்ற வலுவான சமிக்கை ஒன்று வழங்கப்பட்டது.

தேர்தலில் தோல்வியுற நேரிட்டால் இராணுவச் சதி மூலம் ஆட்சிக்கவிழ்ப்பை மேற்கொள்வதற்கு ராஜபக்ச அரசாங்கம் முயற்சி செய்ததாக தற்போதைய அரசாங்கம் குற்றம் சுமத்தியிருந்தது. இதற்கு இராணுவத் தளபதி மறுத்ததால் நாடு பாதுகாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. உண்மையோ அல்லது இல்லையோ, சிறிலங்காவின் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இராணுவம் சிறிலங்காவின் அரசியல் மற்றும் இராணுவ சாகசங்களுக்குத் தூண்டுதலாக விளங்கும்.

இராணுவத்திலிருந்து விலக்கப்படும் வீரர்களுக்கு மாற்றீடான வாழ்வாதாரத்தை வழங்குவதென்பது பலம் பொருந்திய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடுகளுக்குக் கூட மிகப் பெரிய சவாலான காரணியாகும்.சிறிலங்கா தனது நாட்டில் சமாதானத்தை வென்றெடுக்க வேண்டும் என விரும்பும் இந்தியா மற்றும் ஏனைய நாடுகள் இந்த விடயத்தில் சிறிலங்காவுக்கு உதவ வேண்டும்.

காத்திரமான பொருளாதாரப் பங்காளியாக தன்னை மீளவும் நிலைநிறுத்த விரும்பும் மோடி அரசாங்கம் சிறிலங்காவின் முன்னாள் இராணுவ வீரர்களுக்கு தனது நாட்டில் பயிற்சிகள் மற்றும் கல்வியைத் தொடர்வதற்கான புலமைப்பரிசில்கள் போன்றவற்றை வழங்குவதன் மூலமும் சிறிலங்காவில் பணியாற்றும் இந்திய நிறுவனங்கள் முன்னாள் இராணுவ வீரர்களுக்குத் தொழில்வாய்ப்பை வழங்குவதை முன்னுரிமைப்படுத்த வேண்டும் என உந்துதல் வழங்குவதன் மூலமும் சிறிலங்காவுக்கு உதவமுடியும்.

படைக்குறைப்பு முன்னுரிமைப்படுத்தப்படும் போது, சிறிலங்காவின் போருக்குப் பின்னான மீளிணக்கமும் துரிதப்படுத்தப்படுவதுடன், இதன்மூலம் நாட்டின் அரசியல் உறுதித்தன்மையும் உறுதி செய்யப்பட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது மெய்ப்பாதுகாவலரிடம் போத்தல் ஒன்றே இருந்ததாம்

## நாமல் எம்.பி.விளக்கம்



(கொழும்பு)

**தனது மெய்ப்பாதுகாவலரிடம் தண்ணீர் போத்தல் ஒன்று மட்டுமே இருந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அம்பாந்தோட்டை அங்குனுகொலபெலஸ்ஸவில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிக் கூட்டமொன்றில் நாமலின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கைத்துப்பாக்கியுடன் ஜனாதிபதிக்கு அருகாமையில் சென்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இராணுவ கோப்ரலான இந்த நபரை பொலிஸார்கைது செய்து, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைத்திருந்தனர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்களின் வாயிலாகவே அறிந்து கொணடேன் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஜனாதிபதி ஒருவர் பங்கேற்கும் நிகழ்வு ஒன்றிற்கு ஆயுதங்களுடன் செல்வதில்லை.

எனது தந்தை மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருநத காலத்திலும் கொள்கை அடிப்படையில் எனது மெய்ப் பாதுகாவலர்கள் ஆயுதுங் களை எடுத்துச் செலவதனைகூட நான‌ அனுமதித்ததில்லை. இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தெளிவுபடுத்தினேன்.

இந்த விடயத்தை அவ்வளவு பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லை. எனது மெய்ப் பாதுகாவலர்கூட்டத்தை பார்வையிடுவதற்காக சென்றுள்ளார். கூட்டத்திற்கு சென்றவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்ட தண்ணீரபோத்தலையே அவர் வைத்துக் கொண்டிரு ந்தார்.

வேறு எந்த ஆயுதங்களையும் அவர் வைத்திருக்கவில்லை என நாமல் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சைவப்புலவர் தேர்வுகள்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர் தேர்வுகள் எதிர்வரும் 01/05/2015,02/05/2015, 04/05/2015 தினங்களில் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு,திருகோணமலை, லண்டன் ஆகிய இடங்களில் குறிக்கப்பட்ட நிலையங்களில் நடைபெறும் தேர்வு நாடிகளுக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கிடைக்கப்பெறாதோர் சங்கத்தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை அறிவித்துள்ளார்.(இ

# ஐ.ம.சு.கூ. உறுப்பினர்கள் நால்வர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஊவா மாகாணச்பை யின ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நான்கு உறுப் பினர்கள் கட்சியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, மாகாணசபை செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் இருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றுவதற்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் நால்வரும் விலக்கப்பட்டுள்ளனர்.

அநுர விதானகமகே, வடிவேல் சுரேஸ், கித்சிறி சேனாரத் அத்தநாயக்க மற்றும் ஹரேந்திர தர்மதாஸ ஆகியோரே இந்த நால்வருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 90 | 90-100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 30 | 40 | 60 | 40 | 40 |
| தக்காளி | 40 | 60 | 40 | 60 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கரட் | 120 | 120 | 110 | 120 | 100-120 | 120 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 40 | 50 | 60 | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 100 | 100 | 50-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 80 | 70 | 80 | 80-100 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 140 | 40 | 60 | 30-60 | 60 |
| கருணைக் கிழங்கு | — | 80 | 60 | 80 | — | 80 |
| பயற்றங்காய் | 60 | 50 | 50 | 50 | 40-60 | 60 |
| லீக்ஸ் | 180 | 160 | 100 | 150 | 140 | 100 |
| பீற்றூட் | 60 | 40 | — | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 80 | 60-80 | 60 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 600 | 400-600 | 500 |
| போஞ்சி | 160 | 140 | 100 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 30 | — | — | — |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 130 | 140 | 150 | 150 | 140-200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 35 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 16 | 100 | 110 | 120 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 30 | 50 | 40 | 80 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 355

Search for people, places and things Nagendram Home

இலக்கியா நகுலன்


ஒருவர் உன்னை தாழ்த்திப்
பேசும் போது
ஊமையாய் இரு
புகழ்ந்து பேசும் போது
செவிடனாய் இரு
எளிதில் வெற்றி
பெறுவாய்...

ருக்சி சிவகுமார்




தனு தனுசியா

கொஞ்சம் படித்தால் சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேறுகிறோம்.



நிறையப் படித்தால் சொந்த நாட்டை விட்டே வெளியேறுகிறோம்.

பிரவின் தாஸ்




ராஜா தனு



மாப்பள உங்களை நம்பி எங்க பொண்ணையே ஒப்படைக்கிறோம். பின்னாடி நாங்க எல்லாரும் உங்கள சொல்வதெல்லாம் உண்மைக்கு இழுக்கிற மாதிரி வைச்சிடாதீங்க...

தர்சன் கவிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம், போதைப்பொருள் கடத்தலில் இந்திய மீனவர்கள் ஈடுபடுகின்றனர்!

## உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்

(சென்னை)

**இந்திய மீனவர்கள் தங்கம், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் இலங்கை கடல எல்லைக்குள் அத்துமீறி செல்வதால் இலங்கை கடலோர காவற்படைக்கும் நமது மீனவர்களுக்கும் மோதல் ஏற்படுகிறது. இதற்கு இந்திய கடலோர காவற்படை பொறுப்பேற்க முடியாது என உயர்நீதிமன்றத்தில் இந்திய கடலோர காவறபடை துணை இயக்குநர் ஜெனரல் தாககல் செய்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களுக்கு கடலில் முப்படை பாதுகாப்பு வழங்கக்கோரி, சட்டத்தரணி எஸ்.எம்.ஆனந்தமுருகன் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், இந்திய கடல் எல்லையில் கூடுதல் பாதுகாப்பு வழங்க உத்தரவிட்டது. இந்த உத்தரவை நிறைவேற்றாததால், மத்திய அமைச்சரவைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி நீதிமன்ற அவமதிப்புமனு தாக்கல்செய்யப்படடது.

அந்த மனு நீதிபதிகள் எஸ்.மணிக்குமார், ஜி.சொக்கலிங்கம் ஆகியோர கொண்ட அமர்வு முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. இந்திய கடலோர காவற்படையின் துணை இயக்குநர் ஜெனரல் கே.ஆர். நாட்டியாலின் பதில் மனுவை உதவி சொலிசிட்டர் ஜெனரல் ஜி.ஆர். சுவாமிநாதன் தாக்கல் செய்தார்.

அந்த பதில் மனுவில் கூறியிருப்பதாவது,இந்திய கடல் எல்லையில் மீன் வளம் குறைந்ததால், நமது மீனவர்கள் இலங்கை கடல் எல்லையில் மீன்பிடிக்க தொடங்கினர். இலங்கையில் போர் முடிவுக்கு வந்த நிலையில், இந்திய மீனவர்கள் தங்கம், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டனர்.

எந்தெந்த வகையில் மீன்பிடிக்கக் கூடாதோ, அந்த வகைகளை மீன்பிடியில் பயன்படுத்துகின்றனர். இலங்கை மீனவர்களின் மீன்பிடி சாதனங்களை சேதப்படுத்துகின்றனர். இந்திய மீனவர்கள்சட்ட விரோத செயல்கள் ஈடுபடுவதால், அவர்களை இலங்கை கடற்படை கைது செய்கிறது.

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி போதைப்பொருள் கடத்தல் போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதற்காக 2014 ஜனவரி முதல் தற்போதுவரை இந்தியாவைச் சேர்ந்த 185 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. 937 மீனவர்கள் மீது வழககு பதியப்பட்டது. இது தவிர ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான மீனவர்கள் இலங்கையால் எச்சரித்து அனுப்பப்படுகின்றனர். இது தொடர்பாக இந்திய தூதரகத்துக்கு இலங்கை தகவல் கொடு த்து வருகிறது.

இலங்கை கடல் எல்லையில் அத்துமீறலில் ஈடுபட்ட படகுகளின் பதிவு எண்களை இலங்கை தெரிவித்துள்ளது. அந்த படகுகளின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு தெரிவித்துள்ளோம் எனத் தெரிவிக்கபட்டுள்ளது.


மேலும் எல்லை தாண்டிச் செல்வதால் இலங்கை கடலோர காவற்படைக்கும் இந்திய மீனவர்களுக்கும் தகராறு ஏற்படுகிறது. இதற்கு இந்திய கடலோர காவற்படை பொறுப்பேற்க முடியாது.

எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமெனக் கூறப்படடிருந்தது.

இதையடுத்து மனு மீதான அடுத்த விசாரணையை ஜூன் முதல் வாரத்திற்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (இ-5)

## நிதி மோசடியில் ஈடுபட்டவர்கள் விசாரணைக்கு அஞ்சுகின்றனர்

### ரணில் தெரிவிப்பு



நிதி மோசடி தொடர்பில் வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் சிலருக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

19 ஆவது திருத்தச் சட்டமூலம் நேற்று முன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதோடு, சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்று நடைபெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியின்போது இடம் பெற்ற நிதி மோசடி மற்றும் வெளி நாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணம் ஆகியவை தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக விசேட குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

அரசாங்கம் விடுத்திருந்த வேணடுகோளுக்கு இணங்க இந்தக் குழு கொழும்பிற்கு வந்து விசாரணைகளை மேற்கொள்கின்றது.

இந்நிலையில் விசாரணைகளால் அதிர்ந்து போயுள்ள கள்ளர் கூட்டம் தற்போது ஆர்ப்பாட்டங்களையும் ஏனைய எதிர்ப்பு நடவடிக்கைகளையும் செய்து வருவதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கள்வர் கூட்டத்தை காப்பாற்றும் முயற்சியிலும் சிலர் ஈடுபட்டு வருகின்றார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.(இ-5)


## பெட்டகம் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா இன்று

(கொழும்பு)

சக்தி தலைமையக ஊடகவியலாளர் உமாசந்திரா பிரகாஷ் எழுதிய பெட்டகம் என்ற கட்டுரைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொழும்பு 02 டவுசன் தெருவில் அமைந்துள்ள கப்பிற்றல் மகாராஜா நிறுவனக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கப்பிற்றல் மகாராஜா நிறுவனத்தின் எம்பிசி வானொலிக் குழுமப் பணிப்பாளர் சாந்தி பகீரதன், இலத்திரனியல் ஊடகம் மற்றும் வர்த்தகம் தொடர்பான குழுமப் பணிப்பாளர் நதீரா வீரசிங்க, சட்டம் தொடர்பான குழுமப் பணிப்பாளர்ருத்திராணி பாலசுப்பிரமணியம் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் கௌரவ விருந்தினராக மூத்த ஊடகவியலாளர் அன்னலட்சுமி இராஜதுரையும கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## பிரிவுத்துயர் பகிர்வு



### கனகசபை அருணாசலம்

(முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

அல்லாரை தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனக சபை அரு ணாசலம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் 2மணிய ளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### திருமதி ஆனந்தகுமார் வசந்தா

உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தகுமார் வசந்தா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### திருமதி அழகரட்ணம் இராசமணி

புத்தூர் மேற்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அழகரட்ணம் இராசமணி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் புத்தூர் கிந்தி சிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இராசையா கனகராசா

கோண்டாவில்வடக்கு சிவபூதவராயர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் புதுறோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகராசா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### தர்மலிங்கம் சிவராஜ்

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பி டமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவராஜ் கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 12.30-2.45 மணிவரை City of London Cemetery & Crematorium, Aldersbrook Road, London E12 5DQ, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி அருள்மணி ஜோசப் மேரி

வயாவிளான் தோலகட்டியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை தற்காலிக வதிவிடமாகவும் கொழு ம்பை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்மணி ஜோசப் மேரி கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின்திருவுடல் இன்று புதன்கிழமை கோப்பாய் தெற்கு சென்மேரிஸ் தேவாலயத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்ய ப்படும்.



### வெற்றிவேலு செல்லத்துரை

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Suhr ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு செல்லத்துரை கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை Kantonsspital Aarau House 19, 5000 Aarau, Switzerland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சாமுவேல் சொலமன்ஸ் கிறிஸ்ரி தேவதாசன்

(முன்னாள் விவசாய போதனாசிரியர் அரசாங்க விவசாய திணைக்களம் இலங்கை)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Basel ஐ வதிவிடமாகவும் கொண்ட சாமுவேல் சொலமன்ஸ் கிறிஸ்ரி தேவதாசன் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு Ev.ref.kirchgemeinde,Bennwilerstrasse 14,4434 Hollstein எனும் முகவரியில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெதுப்பகத்தில் தராசு கட்டாயம்

(கொழும்பு)

**வெதுப்பகம் மற்றும் வெதுப்பக உணவுகளை உற்பத்தி செய்யும் இடங்களில், தின்பண்டங்களின் நிறையை நுகர்வோர் அறிந்துகொள்வதற்காக தராசு வைக்கப்படுவது கட்டாயமாகும் என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.**

இந்த சட்டம் வெதுப்பக உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் நடமாடும் நிலையங்களுக்கும் கட்டாயமாக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்வேறான நிறைகளில் பாண் விற்பனை செய்யபபடுவதனால் அதற்கு ஏற்ற வகையில் விலைகளை நிர்ணயிக்குமாறு நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையிலேயே நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் ஒரு இறாத்தல் பாணின் நிறை 450 கிராம், என்பதுடன் அதன் விலை 54 ரூபாவாகும் எனவும் அவர்தெரிவித்தார். (இ-5)




## தமிழ்மொழிமூலத்தில் அகில இலங்கை ரீதியில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சாதனை

தேசியகல்வியியற் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பரீட்சையில் தமிழ்மொழி மூலத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உயர் பெறுபேற்றை பெற்று சாதனை படைத்துள்ளது.

தேசியகல்வியியற் கல்லூரிகளின் 2012/ 2014 ஆம் கல்வியாண்டுக்கான இறுதிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பதினெட்டு தேசியகல்வியியற் கல்லூரி களில் யாழப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியின் இரண்டு ஆசிரியமாணவர்கள் அதிவசேட சித்திகளை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் 99 ஆசிரிய மாணவர்கள் விசேடசித்தியையும் பெற்று யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இப்பெறுபேறுகள் அண்மையில் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## கடல் குதிரைகளுடன் சீன பிரஜைகள் கைது

சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து சீனாவிற்கு உலர்ந்த கடல் குதிரைகளை கொண்டு செல்ல முயன்ற இரு பிரஜைகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட கடல் குதிரைகளின் பெறுமதி 23 இலட்சம் ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்படவர்கள் இருவரும் 50 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## விஷ்ணுகிராந்தி/விஷ்ணுகாந்தி

Botanical Name: Evolvulus alsinoides

Family: Convolvulaceae

Sinh: Vishnukiranthi

இதன் பூக்கள்கார்மேக வண்ணமுடைய நிறத்தை பெற்றிருப்பதால் விஷ்ணுகாந்தி என்ற பெயர் வந்திருக்கலாம். இது சுமார் 15, 20 செ.மீ. தூரம் வரைக்கும் தரையோடு ஒட்டிப்படரும். கணுக்களில் வேர் விடுவதில்லை. சுமார் 10 மி.மீற்றர் நீளமும் 7 மி.மீற்றர் அகலமுள்ள நீண்ட விருத்த வடிவமான சிறிய இலைகள் கொடியில் வரிசையாக மாறி மாறி அமைந்துள்ளன. இலை, கொடி ஆகியவற்றில் மெல்லிய பஞ்சு போன்ற சுணைகளுண்டு. சிறிய வட்டவடிவ பூக்கள். நீலமேக நிறமுடையதாகவும் மிக மெல்லியதாகவும் இருக்கின்றன. இரண்டு கடுகளவுள்ள காயினுள் சுமார் 4,5 விதைகளுண்டு. இது ஓராண்டுப் பயிராகும்.

சிறிது மணற்பாங்கான இடத்தில் பரம்பல் அதிகம். செம்மண், மணல் கலப்புள்ள எல்லா இடங்களிலும் விதைகளைத் தூவிப் பயிரிடலாம். இதில் இருவகை உண்டு. வெண்ணிற, கார்மேகநீல நிறப் பூக்களைக் கொண்ட வகைகளாகும். வெண்ணிற பூக்களைக் கொண்ட இனம் அரிதாகும்.

விடாத காய்ச்சலுக்கு விஷ்ணு கிராந்தி என்பது பழமொழி. பொதுவாக எமது மருத்துவத்தில் வைரஸ் தொற்றுக்களால் வரும் காய்ச்சலுக்கு பயன்படும் முக்கிய மூலிகைச் சரக்குகளுள் விஷ்ணுகிராந்தி முக்கியமானது.

இதன் முழுச்செடியுடன், கருந்துளசி, நிலவேம்பு ஒரேயளவாக எடுத்து சிறுசிறு துண்டுகளாக்கி நான்கு பங்குநீர்விட்டு 1/4 பங்காகச் சுண்டக்காய்ச்சி 30-60 மில்லி 6 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை எடுக்க காய்ச்சல் குணமாகும். சிறுநீரும் நன்கு வெளிப்படும்.



வேருடன் இச்செடியை பிடுங்கி நன்கு கழுவி சீரகம் சேர்த்தரைத்து பாலில் உட்கொள்ள நரம்புத் தளர்ச்சி நீங்கும். 5 கிராம் அளவு தினமும் எடுக்க வேண்டும்.

சில கிராமத்துமக்கள் இன்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் காய்ச்சலுக்கு கைமருந்தாக இதனை குடிநீரிட்டு கொடுப்பது வழக்கம்.

அரைக்கைப்பிடியளவு விஷ்ணு கிராந்தியுடன் 3 வெள்ளைப்பூண்டு பற்கள், அரைத்தேக்கரண்டி அளவு சீரகம் சேர்த்து மைபோல அரைத்து தினமும் ஒருவேளை 20 நாட்கள் கொடுத்துவர உடலில் வீரிய விருத்தி உண்டாகும்.

சுத்தம் செய்த விஷ்ணுகிராந்தி இலைகள் ஒரு கைப்பிடியளவு எடுத்த ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து வதக்கி ஒரு டம்ளர் அளவு தண்ணீர்விட்டு பாதியளவுக்கு சுண்டக்காய்ச்சிய குடிநீரை காலை, மாலை கொடுத்துவர வயிற்றுப் போக்கு நிற்கும்.

இம்முழுச்செடியுடன் துளசியும் சேர்த்தரைத்து குடிநீரிட்டு கொடுத்துவர செரிமானக் கழிச்சலுடன் கூடிய காய்ச்சல் நீங்கும்.

50 கிராம் இலைகளை தானிய மாவுடன் சேர்த்து அடைதட்டி நெய்யில் பொரித்து புசித்துவர உடல் வீரிய விருத்தியுண்டாகும்.

20 கிராம் விஷ்ணு கிராந்தியை ஒன்றிரண்டாக தட்டி ஒரு மட்கலத்தில் போட்டு 500 மில்லி நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி வடிகட்டி 30-60 மில்லி தினமும் இருவேளை பெரியவர்களுக்கு கொடுக்க இருமல், கசம் நீங்கும். இதை பாலில் கலக்கிக் கொடுக்க கண்களுக்கு பிரகாசம் ஏற்படும்.

விஷ்ணுகிராந்தி பொடியை தினமும் 2 கிராம் அளவுக்கு வெந்நீரில் கலக்கிக் குடித்தால் குழந்தைப்பேறு உண்டாகும். அல்லது விஷ்ணு கிராந்தி பொடியை (நிழலில் உலர்த்தி பொடித்து) தினமும் 2 கிராம் பாலில் காலை, மாலை சாப்பிட்டுவரபெண்களுக்கு ஏற்படும் வெள்ளைசாய்தல் குணமாகும்.

விஷ்ணுகிராந்தியுடன் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றைச் சமஅளவு சேர்த்துப் பொடி செய்து தினமும் 2 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் சளி, இருமல், கோழைக்கட்டு போன்றன குணமாகும்.

விஷ்ணுகிராந்தி உடன்சாற்றை 5 மில்லியிலிருந்து 15 மில்லி வரை வெந்நீரில் கலந்து 3 மணி நேரத்திற்கு ஒருமுறை அருந்திவர குளிர் காய்ச்சல் குணமாகிவிடும்.

விஷ்ணுகிராந்தி, தூதுவளை, கண்டங்கத்தரி, பற்படாகம் ஒவ்வொன்றும்30 கிராம்எடுத்து ஒரு லீற்றர் நீரில் போட்டு 1/8 ஆக வற்றக்காய்ச்சி மணிக்கு ஒரு முறை 5 மில்லி முதல் 10மில்லி வரை கொடுத்தால் சன்னி பாதசுரம் (3 தோசங்களும்) (வாத, பித்த, கபம்) அதிகரித்த விடாச்சுரம் தணியும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலி எண்ணிக்கை 10000ஐ தாண்டும்

## நேபாள பிரதமர் கவலை

**(காத்மண்டு)**

**நேபாளத்தை புரட்டிப் போட்டிருக்கும் நிலநடுக்கத்தில் பலி எண்ணிக்கை 10 ஆயிரத்தை எட்டும் அபாயம் உண்டு என்று அந்நாட்டு பிரதமர் சுஷில் கொய்ராலா கவலை தெரிவித்துள்ளார்.**

கடந்த 25 ஆம் திகதி காலை இமாலய மலைப்பகுதியில் இருக்கும் நேபாளத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அலகில் 7.9 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் தலைநகர் காத்மண்டு உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் பேரழிவைச் சந்தித்துள்ளன. நேபாளத்தின் எல்லை நாடுகளிலும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, நேபாள நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 347 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. காயமடைந்தோர் எண்ணிக்கை 7 ஆயிரத்து 500 இற்கும் அதிகமாகவுள்ளது. நேபாளத்துக்கு பல நாடுகள் உதவிக்கரம் அளித்து வருகின்றன.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்காக கூடாரங்கள் மற்றும் மருந்துப் பொருட்களை வழங்கி வெளிநாடுகள் உதவ வேண்டும் என்று அந்நாட்டு பிரதமர் சுஷில் கொய்ராலா அழைப்பு விடுத்துள்ளார். ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த உருக்கமான பேட்டியில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் மேலும் கூறும்போது, "நிலநடுக்க பலி எண்ணிக்கை 10 ஆயிரத்தை எட்டும் அபாயம் உள்ளது. அரசுக்கு நிறைய கூடாரங்கள், மருத்துவ பொருட்களின் தேவை உள்ளது. எங்கள் மக்கள் மழையிலும் திறந்த வெளியிலும் உறங்குகின்றனர்.

7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயங்களுடன் உயிர் வாழ்கின்றனர். அவர்களுக்காக எங்களிடம் மருந்துகள் இல்லை. அவர்களுக்கு அளிக்க வேண்டிய சிகிச்சை மற்றும மறுவாழ்வுக்கான பணிகளும் எங்களுக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது. போர்க்கால அடிப்படையில் அனைத்து உதவிகளையும் அரசு செய்து வருகிறது" என்றார்.

கடந்த 1934 ஆம் ஆண்டு நேபாளத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்துக்கு 8 ஆயிரத்து 500 பேர் பலியாகினர். தற்போதைய நிலநடுக்க சூழல் அதனையும் தாண்டிய அபாயகரமான இறப்பு எண்ணிக்கையை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது. இமாலய மலைப் பகுதியில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கமாக இந்த பேரிடர் பார்க்கப்படுகிறது. (இ-5)

# 'தூக்கி அடிச்சிப்புடுவேன் பாத்துக்க'

## தலைநகரில் கடுப்பான விஜயகாந்த்




டில்லியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, கேள்வி எழுப்பிய ஒரு ஊடகவியலாளரைப் பார்த்து, "தூக்கி அடிச்சிப்புடுவேன் பாத்துக்க...!" என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆவேசமாக கூறியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேகேதாட்டுவில் கர்நாடக அணை கட்டும் பிரச்சினை உள்ளிட்ட தமிழகத்தின் 5 முக்கிய பிரச்சினைகள் குறித்து, தே.மு.தி.க. தலைவரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்த் தலைமையில் தி.மு.க. உட்பட பல்வேறு அரசியல் கட்சியை சேர்ந்த பிரமுகர்கள் பிரதமர் நரேந்திர மோடியை நேறறு முன்தினம் சந்தித்து பேசினர்.

அதனைத் தொடர்ந்து, ஊடகவியலாளர்களை சந்தித்து பேசினார் விஜயகாந்த். இந்த கூட்டுமுயற்சி எல்லா பிரச்சினைகளிலும் தொடருமா? என்ற கேள்விக்கு பதிலளித்த விஜயகாந்த், "முதல்லே சொன்னேல்லா, நல்ல பிரச்சினைகளிலும் தொடரும், அவரவர் கட்சி பிரச்சினை அவர்களுக்கு. கூட்டு பிரச்சினை நல்லெண்ணம். மக்களுடைய நல்ல பிரச்சினைகளுக்கெல்லாம் தொடரும்" என்றார்.

**கடுப்பான விஜயகாந்த்**

அப்போது ஜெயா தொலைக்காட்சி நிருபர் எழுப்பிய ஒரு கேள்வியினால் கடுப்பானார் விஜயகாந்த்.

ஜெயா தொலைக்காட்சி நிருபர், "சார், நீங்கள் ஆக்கபூர்வமான எதிர்க்கட்சி தலைவராக..." என கேள்வியை முடிப்பதற்குள் விஜயகாந்த் குறுக்கிட்டு, "நீங்க ஜெயா டிவில்ல. இல்ல... இல்ல நீங்க ஜெயா டி.வி. நான் பேசமாட்டேன்" என்றவர், மற்ற ஊடகவியலாளர்களைப் பார்த்து, "சொல்லுங்க. அவரு வீம்புக்குன்னே கேட்பார் சார். உங்க பேட்டியெல்லாம் கெட்டு போய் விடும்" என்றார்.

மீண்டும் அந்த தொலைக்காட்சி நிருபர் அதே கேள்வியை கேட்க முயற்சிக்கவும், அவரைப் பார்த்து கடுப்பானார் விஜயகாந்த், "நீங்க சும்மா இருங்க. இல்லாட்டி நான் குண்டக்க மண்டக்க பேசிடுவேன். ஜெயலலிதாவையும் குண்டக்க மண்டக்க திட்டுவேன்" என்றார்.

இதைத்தொடர்ந்து இன்னொரு நிருபர், "சார் பிரதமரை சந்தித்தது குறித்து சொல்லுங்க?" என்றார்.

அதற்கு, "பிரதமர் நல்லாத்தான் சார் சொல்லியிருக்கார். அரை மணி நேரம் பேசியிருக்கிறார். நல்லா பண்ணுகிறேன்னு சொல்லியிருக்கார்" என்றார்.

இதைத்தொடர்ந்து, தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில் தமிழக அரசு மற்றும் மத்திய அரசின் செயற்பாடு எவ்வாறு இருக்கிறது? எனக் கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த விஜயகாந்த், "திருப்திகரமாகத்தான் இருக்கிறது. இங்கு அனைத்து கட்சியினரும் இருக்காங்க. அனைவரும்தான் அதற்கு பதில் சொல்லணும்" என்றார்.

இதைத்தொடர்ந்து மீண்டும் ஜெயா டி.வி. நிருபர் ஒரு கேள்வியை கேட்க முயல, "சார் கேள்வி கேட்கக்கூடாது. எனக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமும் கிடையாது. சார், உங்க ஜெயா டி.வி.க்காக கேள்வி கேட்க உங்களுக்கு உரிமை இருக்கும்போது, பதில சொல்ல வேண்டாம் என்கிற உரிமை எனக்கு இல்லையா?" என மீண்டும் கடுப்பானார் விஜயகாந்த்,

"ஏன் நீங்க பேசுறீங்க. மற்றவங்களை டிஸ்ட்ரப் பண்ணணும்னா. கம்முன்னு இருக்க மாட்டியா? தூக்கி அடிச்சிப்புடுவேன் பாத்துக்க்" என ஒருமையில் கூறினார்.

மேலும், "உனக்குத்தான் பேசத் தெரியுமா?"என்று கேட்டவாறு, ஆவேசத்துடன் விஜயகாந்த் தனது இருக்கையில் இருந்து எழுந்து, ஜெயா டி.வி. என்றால் என்ன கொம்பா? என ஆவேசமடைந்த அவரை அருகில் இருந்த மற்ற கட்சியினர் பிடித்து அமர வைத்தனர்.

இருப்பினும், ஆவேசம் குறையாத விஜயகாந்தை மற்றவர்கள் அமைதிப்படுத்தினர். அப்போது, பத்திரிகையாளர்களும், மற்ற சில கட்சியினரும் பேசிக்கொண்டனர். இதனால், மேலும், ஆவேசம் அடைந்த விஜயகாந்த், "நீங்களே பதில் சொல்லுங்க்'' எனக் கூறிவிட்டு எழுந்து சென்று விட்டார்.

இதையடுத்து, புதிய நீதிக்கட்சித்தலைவர்ஏ.சிசண்முகம் "அண்ணே... அண்ணே..!" எனக்கூறியபடியே விஜயகாந்த் பின்னால் ஓடிச்சென்று அழைத்தார். ஆனால், விஜயகாந்த் மறுப்பு தெரிவிக்க, மீண்டும், ஏ.சி.சண்முகம் அவரை சமாதானம் செய்து அழைத்து வந்தார்.

இதன்பின்னர், "நீங்க கேளுங்க நீங்க கேளுங்க" என மற்ற நிருபர்களிடம் கூறி தனது பேட்டியை தொடர்ந்தார் விஜயகாந்த். (இ-5)

# உக்ரைனில் மீண்டும் உள்நாட்டுப் போர்

உக்ரைனில் அரசுப் படைகளுக்கும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே அமுலில் உள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் அண்மைக்காலமாக அதிக அளவில் மீறப்பட்டு வருகின்றன. இதனால் அங்கு மீண்டும் உள்நாட்டுப் போர் வெடிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

உக்ரைன் அரசுக்கு எதிராக கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் போர்க் கொடி உயர்த்தியுள்ளனர். பிரான்ஸ, ஜேர்மனி நாடுகளின் முயற்சியால் கடந்த பெப்ரவரியில் இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிலையில் எல்லையோர பகுதியான டோன்ஸ்க் நகரில் இருந்து கிளர்ச்சியாளர்கள் பீரங்கி குண்டு களை வீசி வருவதாக அர சுப் படைகள் குற்றம் சாட்டியுள்ளன. இதை மறுத்துள்ள கிளர்ச்சிப் படை, உக்ரைன் இராணுவம்தான் தங்கள் பகுதிகளில் ஏவுகணைகளை வீசி வருகிறது என்று தெரிவித்துள்ளது.

இருதரப்பினரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் அண்மைகாலமாக போர் நிறுத்தம் அதிக அளவில் மீறப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த இரு நாட்களில் மட்டும் 46 முறை எல்லையில் பீரங்கி குண்டுகள் வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் உக்ரை னல் மீண்டும் உள் நாட்டுப் போர் வெடி க்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கிளர்ச்சிப் படைகளுக்கு ரஷ்யா ஆயுத உதவி அளிப்பதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. அங்கு மீண்டும் உள்நாட்டுப் போர் மூண்டால் அமெரிக்க ரஷ்யா இடையிலான உறவில் மிகப் பெரிய விரிசல் ஏற்படும் என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் எல்லையில் ரஷ்ய இராணுவம் அதிக அளவில் குவிக்கப்படுகிறது. இது ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவான நடவடிக்கை என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெரி அண்மையில் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பின் தலைவன்

# அபூபக்கர் அல்பாக்தாதி உயிரிழந்ததாக தகவல்

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பாக்தாதி உயிரிழந்ததாக ஈரான் வானொலி தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி சிரியா எல்லை அருகே உள்ள நினேவா மாகாணத்தில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் முகாம்கள் மீது அமெரிக்கா தலைமையிலான நாடுகள் தாக்குதல் நடத்தின.

இந்த தாக்குதலில் அபூபக்கர் அல பாக்தாதி படுகாயம் அடைந்ததாகவும், அவர் உயிர் பிழைப்பது கடினம் என்றும்செய்திகள்வெளிவந்தன. இந நிலையில் பாக்தாதி உயிரி ழந்து விட்டதாக ஈரான் வானொலி தெரிவித்துள்ளது.



இது குறித்து ஒல் இந்தியா வானொலி டுவிட்டரில், ஐ.எஸ்.ஐ. எஸ் தீவிரவாத அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பாக்தாதி இறந்து விடார் என்று தெரிவித்துள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் ஒரு வெற்றிகரமான நாட்டை மக்களுடன் ஆலோசிக்காமல் உருவாக்க முடியாது. - லீ குவான் யூ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வீஷ்மாச்சாரியாரின் இடத்தில் மைத்திரி

பாண்டுவின் அரச சபையில் தலைமைத் தளபதியாக இருந்தவர் வீஷ்மர்.

கங்கை மைந்தன் என்று அடையாளப்படுத்தப்படும் வீஷ்மர் தனக்குக் கிடைக்க வேண்டிய அரசாட்சியை தன் தம்பியர் ஆள்வதற்காக விட்டுக் கொடுத்தவர். அது மட்டுமல்ல; தலைமைத்தளபதி என்பதால் துரியோதனனுக்காக போரிடவும் அவர் தயங்கிலர்.

அதேநேரம் நீதியின் பெயரால் பாண்டவர்கள் வெற்றி பெறவேண்டும் என்பதும் அவரின் பெருவிருப்பாக இருந்தது. எதுவாக இருப்பினும் பிதாமகர் என்று வீஷ்மர் போற்றப்படுவதற்குக் காரணம் தன் தந்தையின் விருப்பிற்காக தன் தம்பியை அரசாளட்டும் என்று ஆட்சிப் பொறுப்பை துறந்தமையாகும்.

பொதுவில் ஒரு சனசமூக நிலையத்தின் தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்க விரும்பம் இல்லாத இந்த உலகில் பதவிகளைத் தியாகம் செய்வது; தமக்கு இருக்கக் கூடிய அதிகாரங்களைத் துறப்பது என்பன போற்றப்படவேண்டிய அம்சங்கள்.

அந்த வகையில் இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போற்றப்பட வேண்டியவர். ஜனாதிபதி என்ற பதவிக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்று அந்த பதவியில் இருப்பவர் நினைப்பாராயின் அதற்குள் பொதுமை உள்ளது.

தனக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை குறைத்து இந்த நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்த ஜனாதிபதி மைத்திரியை நாம் பாராட்டுவதில் எந்தக் குறையுமில்லை.

19ஆவது திருத்தச் சட்ட மூலத்தால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை என்றால் எதுவுமே இல்லை என்பதே முடிவு. ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் தமிழர்கள் தீமைகளை அனுபவித்தனர்.

அதேநேரம் இலங்கை என்ற ஒட்டுமொத்தப் பார்வையில் நம் நாட்டுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறை நல்லதல்ல என்பது பட்டறிவில் கண்ட உண்மை.

எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறைமையில் தளர்வை ஏற்படுத்துவது நல்லது. அந்த நல்ல காரியத்தை இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தொடக்கம் மகிந்த ராஜபக்ஷ வரையான எவரும் செய்யவில்லை.

மாறாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று நான்கு மாதங்களே அந்தப் பதவியில் இருந்த மைத்திரி அதனைச் செய்தார் எனில், அவரை நாட்டிற்கு ஏற்ற தலைவர் என்று சொல்வதில் மிகையில்லை.

19ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுதில் இடையூறுகள் இருந்தபோது-அவ்வாறான சந்தர்ப்பம் தனக்கு சாதகமானது என்ற சூழ்நிலையிலும் அவற்றை இம்மியும் பொருட்படுத்தாமல் 19 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றியே தீருவேன் என்பதில் உறுதியாக இருந்து அதனை நிறைவேற்றிய ஜனாதிபதி மைத்திரியை நாட்டு மக்கள் கரகோசம் செய்து பாராட்டலாம்.

# மலேரியா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பேரணி!

(யாழ்ப்பாணம்)

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு. "வளமான எதிர்காலத்திற்கான முதலீடு மலேரியாவை தோற்கடிப்பதே" என்ற தொனிப் பொருளில் மலேரியா பற்றிய விழிப்புணர்வை பிரதேச மக்களிடையே ஏற்படுத்தும் முகமாக யாழ். றொட்டறிக் கழக அனுசரணையுடன் மலேரியா விழிப்புணர்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பிராந்திய மலேரியா தடை இயக்கம் மற்றும் பிராந்திய சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் யாழ். பேருந்து நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மலேரியா விழிப்புணர்வு நிகழ்வு இன்றும் பல்வேறு இடங்களிலும் நடைபெறவுள்ளது.

நேற்றைய இதன் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம், மாகாண சுகாதார பணிப்பாளர் எஸ்.ஆர்.யூட், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தேவநேசன், பிராந்திய மலேரியா தடுப்பு இயக்க பொறுப்பதிகாரி குமரன், முன்னாள் பிராந்திய மலேரிய தடுப்பு இயக்க பொறுப்பதிகாரி வைத்தியர் சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் குறித்த நிகழ்வில் மலேரிய விழிப்புணர்வு தெரு நாடகங்கள் இடம்பெற்றதுடன் துண்டு பிரசுரங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. யாழ் பேருந்து நிலையத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வு தொடர்ந்து சுன்னாகம், மல்லாகம், மானிப்பாய் ஆகிய பேருந்து நிலையங்களிலும் இடம்பெற்றது.

இவ் விழிப்புணர்வு நிகழ்வுகள் இன்றும் நாளையும் யாழ்.பிரதான பேருந்து தரிப்பு நிலையங்களில் நடைபெறவுள்ளது. மலேரியா காணப்படும் நாடொன்றுக்கு செல்வதற்கு முன்னர் மலேரியா தொற்றப்படுவதற்கு முன்னர் முன்சிகிச்சை மருந்துகளை பெற்றுக் கொள்ளவும், மலேரியா காணப்படும் நாடொன்றில் இருந்து வருகை தரும் போது மலேரியாவை இனங்கண்டு கொள்வதற்கான குருதி பரிசோதனைகளை செய்து கொள்ளவும்.

காய்ச்சல் இருப்பின் மலேரியாவை இனங்காண்பதற்கான எளிமையான குருதி பரிசோதனை செய்து கொள்ளவும், நுளம்பு கடியிலிருந்து பாதுகாப்படைவதற்கு நுளம்பு எதிர்ப்பு வலைகளை பயன்படுத்த பழகிக் கொள்ளவும் என பல அறிவுரைகளும் இவ்விழிப்புணர்வு நடவடிக்கையின் போது வலியுறுத்தப்பட்டன.

மேலும் இன்றைய தினமும் இவ் விழிப்புணர்வு நடவடிக்கை சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பிப்பதோடு தொடர்ந்து கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை, அச்சுவேலி ஆகிய பேருந்து தரிப்பு நிலையங்களிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## நெடுந்தீவில் நடமாடும் சேவை

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடமாடும் சேவை நடைபெற்றது. அரசாங்க அதிபருடன், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி கலந்து கொண்ட இந்த நடமாடும் சேவையில் 300க்கும் அதிகமான பொது மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை காலை நெடுந்தீவுக்கு வந்த அரசாங்க அதிபர், நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மேலதிக மாவட்டப் பதிலாளர் கிளையினை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார். அத்துடன் LGN (அரசாங்க வலை அமைப்பு இணைப்பினையும் உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார். (11)

## உலக சுகாதார நிறுவனம் நேபாளத்திற்கு உதவி

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அங்கு 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகினர். இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்து தவிக்கின்றனர்.

அவர்களுக்கு உதவ உலக சுகாதார நிறுவனம் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் டொலர் மதிப்பிலான மருந்துகள் மற்றும் மருத்துவ சிகிச்சைக்கான கருவிகளை கொடுத்து உதவியுள்ளது.

நிலநடுக்கம் நடந்த அடுத்த 3 மணி நேரத்தில் உலக சுகாதார நிறுவனம் சார்பில் 40 ஆயிரம் மக்களுக்கு 3 மாதத்துக்கு தேவையான மருந்துகளை அனுப்பிவைத்தது.

இதுகுறித்த தகவலை உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்கு ஆசியா மண்டல இயக்குநர் டாக்டர் பூனம் கேத்ரபால் சிங் தெரிவித்தார். (இ-5)

## கைப்பை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் கதிர்வீச்சு படம் எடுக்கும் இடத்தில் ஒரு கைப்பை சிறு தொகைப் பணத்துடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

எனவே இதனை அலுவலக நேரத்தில் [illegible] காரியாலயத்தில் அடையாளம் [illegible] பெற்றுக்கொள்ளுமாறு பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# இயல், இசை, நாடக விழா யாழில் நான்கு நாட்களுக்கு



(யாழ்ப்பாணம்)

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல், இசை,நாடக விழா நாளை வியாழக்கிழமை முதல எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை வரை பிற்பகல் 4 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் இசைவிருந்து, வேணுகானம், நாட்டியாஞ்சலி, சொல்லாடுகளம் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (இ-3)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### உள்ளம் கடவுளிடம் இருக்கட்டும்



✦ புலி மற்ற மிருகங்களைக் கொன்றுவிடும். அதுபோல பக்தி என்னும் புலி காமம் குரோதம் முதலானவற்றைக் கொன்றுவிடுகிறது. இதயத்தில் பக்தி வளருமானால் காமமும் ஏனைய மிருக உணர்ச்சிகளும் அடியோடு மறைந்துவிடும்.

✦ பொட்டலம் கிழிந்து கடுகு சிதறிவிட்டால் அவற்றை ஒன்று சேர்ப்பது மிகவும் கடினம். அதுபோல பல்வேறு திசைகளில் ஓடுகின்ற மனத்தை உட்குவித்து ஒருமுகப்படுத்துவது எளிதான செயல்அல்ல. மனதை ஒருமுகப்படுத்துவதற்கு நல்லவர்களுடன் நாடிச் சேர்வது மட்டுமே வழி.

✦ சிறு இழை ஒன்று நீட்டிக் கொண்டிருந்தாலும் ஊசியின் காதுவழியாக நூல் நுழைய முடியாது. உலகப் பொருட்களில் சிறிது பற்று இருந்தாலும் நம்மால் கடவுளை அணுக முடியாது.

✦ மனைவி, மக்கள், பெற்றோர் அனைவருடனும் சேர்ந்து குடும்பமாக வாழுங்கள். ஆனால், உள்ளத்தை மட்டும் கடவுளிடம் இருத்துங்கள்.

✦ முட்செடிகளை விரும்பித் தின்னும் ஒட்டகத்தின் வாயில் ரத்தம் ஒழுகும். அதுபோல, உலகியல் இன்பங்களில் நாட்டம் கொண்டு மனிதன் எத்தனையோ வேதனைகளையும், துன்பத்தையும் அனுபவிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி பிறீமியர் லீக்கில் சில்வர் லயன்ஸ் அணி வெற்றி




அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழகம் ஒருங்கிணைந்து நடத்திய அச்சுவேலி பிறீமியர் லீக் போட்டிகளுக்காக பிரதேசத்தின் தெரிவு செய்யப்பட்ட வீரர்களில் இருந்து 8 அணிகள் உருவாக்கப்பட்டன. ஏப்ரல் 5ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை நடைபெற்ற 56 லீக் ஆட்டங்களின் நிறைவில் கடந்த சனிக்கிழமை "பிளே ஓப்" சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன.

லீக் போட்டிகளின் புள்ளிப் பட்டியலில் முதல் நான்கு இடங்களை பிடித்த அணிகளான சில்வர் லயன்ஸ், பிரவுன் புல்லட்ஸ் , புளூ பிறேவ்ஸ், ரெட் ரைநோஸ் ஆகிய அணிகள் இறுதி சுற்றில் மோதின.

கடந்த சனிக்கிழமை அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சில்வர் லயன்ஸ் அணியை எதிர்த்து ரெட் ரைநோஸ் மோதியது. இறுதி ஆட்டத்தில் ரெட் ரைநோஸ் அணியை வீழ்த்தி சில்வர் லயன்ஸ் அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்றிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சில்வர் லயன்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர். ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டான்சன் மற்றும் சுபேந்திரன் ஆரம்பம் முதலே அதிரடி காட்ட சில்வர் லயன்ஸ் அணியின் ஓட்ட வேகம் அதிகரித்தது. ரெட் ரைநோஸ் அணியின் பந்துவீச்சு வியூகங்கள் எவையும் பயனளிக்காத நிலையில் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து 69 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அணி சார்பாக டான்சன் தொடர்ச்சியான ஐந்து சிக்சர்கள் அடங்கலாக 43 ஓட்டங்களையும், அணியின் தலைவர் சுபேந்தி ரன் மூன்று சிக்சர்கள் அடங்கலாக 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

கடினமான இலக்கான 70 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ரெட் ரைநோஸ் அணியினர் ஆரம்பம் முதலே தடுமாற தொடங்கினர். சீரான இடைவெளியில் இலக்குகள் சாய்க்கப் பட்டு எந்த ஒரு வீரரும் பிரகாசிக்க தவறிய நிலையில் 4ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பாக சுபதாஸ் 12 ஓட்டங்களையும் கஜந்தன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சில்வர் லயன்ஸ் அணி சார்பாக பகீரதன் 2 இலக்குகளையும், ஜெஹிந்தாஸ், சுபேந்திரன் ஆகியோர் தலா 1 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக 43 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்த சில்வர் லயன்ஸ் அணியின் டான்சனும், போட்டித்தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக 14 போட்டிகளில் 240 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிதர்ஷனும் , சிறந்த பந்து வீச்சாளராக 14 போட்டிகளில் 12 இலக்குகளை வீழ்த்திய ஜெஹிந்தாஸ் மற்றும் போட்டித் தொடரின் நாயகனாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சுபேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# ரியல் மாட்ரிட்டுக்காக விளையாடுவது மகிழ்ச்சியானது- ஹெர்னாண்டஸ்




ஸ்பெயின் நாட்டின் முன்னணி காற்பந்து கிளப் அணி யாண ரியல் மாட்ரிடில், மெக்சிகோவின் ஜேவியர் ஹெர்னாண்டஸ் விளையாடி வருகிறார்.

26 ஆவது வயதான மெக்சிகோவின் ஹெர்னாண்டஸ் அட்லெடிகோ மாட்ரிட் அணிக்காக நடைபெற்ற சம்பியன் லீக் காலிறுதிப் போட்டியில் வெற்றிக்கான கோல் அடித்து அசத்தினார்.

செல்ட்டா விகோவிற்கு எதிரான லா லிகா போட்டியில் ஒரு கோல் அடித்தும் அணியை வெற்றி பெறச் செய்தார்.

இது குறித்து ஹெர்னாண்டஸ் கருத்து வெளியிடுகையில்,

நான் ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடுகிறேன். இது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

நான் மகிழ்ச்சியாக விளையாடுவதற்காக கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். கடவுள் விரும்பினால் நான் அங்கு தொடர்ந்து விளையாடுவேன்.

ரியல் மாட்ரிட் அணிக்காக அடுத்த வருடம் நான் விளையாடுவேனா என்று எனக்குத் தெரியாது. ஆனால், நீண்ட நேரம் களத்தில் நின்று விளையாடுவதில் கவனம் செலுத்துகிறேன் என்றார்.

ஆனால், பிரிமீயம் லீக் கிளப் மான்செஸ்டர் யுனைடெட் அணியில் இருந்து ரியல் மாட்ரிட் அணிக்கு வந்து விளையாடி வரும் இவர், மூன்று போட்டிகளில் மட்டுமே விளையாடி உள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மீண்டும் இர்பான் பதான்



காயத்திலிருந்து மீண்டுள்ள இர்பான் பதான் மீண்டும் அணிக்கு திரும்புவார் என சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளர் பிளெமிங் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பிளெமிங் மேலும் தெரிவிக்கையில்,

டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என அனைத்து துறையிலுமே சிறப்பாக செயற்பட்டு வருகிறது.

கொல்கத்தா அணியின் சுனில் நரைன் சிறந்த பந்துவீச்சாளர். தற்போது அவர் நெருக்கடியை சந்தித்து வருவது துரதிர்ஷ்டவசமானது.

சென்னை அணியின் சகல துறை ஆட்டக்காரர் இர்பான் பதான் காயத்திலிருந்து நன்கு குணமடைந்து வருகிறார். விரைவில் இந்த தொடரிலேயே களமிறங்குவார் என எதிர்பார்க்கிறேன்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு எதிராக நடைபெறும் லீக் ஆட்டத்தில் இர்பான் விளையாடுவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை.

ஸ்மித்,மக்கலம், ஜடேஜா, ரெய்னா, அஸ்வின், டோனி உள்ளிட்ட வீரர்கள் பார்மில் இருப்பது எங்கள் அணிக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளது.

சேப்பாக்கம் மைதானம் சுழற்பந்துவீச்சுக்கு நன்கு ஒத்துழைக்கிறது. இதுவும் எங்களுக்கு சாதகமான அம்சம் தான் என தெரிவித்துள்ளார். (க)

# அர்ஜுனா விருதுக்கு பரிந்துரை எனக்கு கிடைத்த கௌரவம்

## ரோஹித் சர்மா



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் ரோகித்சர்மா. மும்பை இந்தியன்ஸ் அணி கப்டனாக உள்ளார். அவரது பெயரை அர்ஜுனா விருதுக்கு கிரிக்கெட் வாரியம் பரிந்துரை செய்து இருக்கிறது.

இதுகுறித்து ரோகித் சர்மா கூறியதாவது,


அர்ஜுனா விருதுக்கு எனது பெயரை கிரிக்கெட் வாரியம் பரிந்துரை செய்தது மிகப்பெரிய கௌரவம். அதை கேட்டதும் மகிழ்ச்சி அடைந்தேன்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடவில்லை என்பதை அறிவேன்.

7 ஆட்டத்தில் 2 வெற்றி மட்டுமே பெற்று உள்ளோம். இதேபோன்ற சூழ்நிலையில் தான் கடந்த ஆண்டும் இருந்தோம்.

ஆனால் பிளே-ஓப் சுற்றுக்கு தகுதி பெற்றோம் என்றார். (க)

# கோலியின் நடவடிக்கையால் அதிருப்தியில் நிர்வாகம்




பெங்களூர் அணித்தலைவர் விராட் கோலி, குடும்பத்தினருக்கு ஐபிஎல் போட்டிக்கான 'பாஸ்' கேட்டுள்ளதால் நிர்வாகத்தினர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

மேலும் டில்லியில் நடக்கும் சில போட்டிகளுக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான 'பாஸ்' கேட்டுள்ளார்.

இதனால் இவரைப் போன்ற நட்சத்திரங்கள் இப்படி செய்யலாமா என்று நிர்வாகத்தினர் குமுறுகின்றனர். (க)

# தந்தைக்கு பெருமை சேர்ந்த மகன்: மிக் ஷூமேக்கர்



ஜேர்மனியில் நடந்த பார்முலா 4 கார் பந்தயத்தில் அபாரமாக செயற்பட்ட மிக் ஷூமேக்கருக்கு சிறந்த இளம் வீரருக்கான விருது கிடைத்துள்ளது.

16 வயதான மிக் ஷூமேக்கர், பார்முலா 1 கார் பந்தயத்தில் மகத்தான சாதனைகளை படைத்த முன்னாள் சம்பியன் மைக்கேல் ஷூமேக்கரின் மகன் ஆவார்.

[illegible] அடைந்த ஷூமேக்கர் கோமா நிலையில் இருந்து மீண்டாலும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி பார்முலா 4 பந்தயத்தில் பெற்ற வெற்றியை தனது தந்தைக்கு சமர்ப்பிப்பதாக பெருமையுடன் தெரிவித்துள்ளார் மிக் ஷூமேக்கர்.(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தாவை பந்தாடியது சென்னை சுப்பர் கிங்ஸ்



கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடரின் நேற்றைய லீக் போட்டியல் சென்னை- கொல்கத்தா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் காம்பீர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

கொல்கத்தா அணியில் மோர்னே மோர்கல், சுனில் நரைன், போதா ஆகியோர் இடம் பெறவில்லை. அவர்களுக்குப் பதிலாக கம்மின்ஸ், பிராட் ஹொக், டென் டோயிஸ்சே ஆகியோர் இடம் பெற்றனர்.

சென்னை அணியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. பஞ்சாப் அணிக்கு எதிராக விளையாடிய அதே அணியே விளையாடியது.

சென்னை அணியின் ஸ்மித், மக்கலம் ஆரம்ப வீரர்களாக களம் இறங்கினர். ஆரம்ப ஓவரை கம்மின்ஸ் வீசினார். இந்த ஓவரின் 3ஆவது பந்தில் ஸ்மித் பவுண்டரி அடித்தார். 2ஆவது ஓவரை உமேஷ யாதவ் வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டி ஓட்ட கணக்கை தொடங்கினார் மக்கலம். கம்மின்ஸ் வீசிய அடுத்த ஓவரில் மக்கலம் ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் விளாசினார்.

உமேஷ் யாதவ் வீசிய 4 ஆவது ஓவரில் ஸ்மித் ஒரு சிக்ஸ், இரண்டு பவுண்டரிகள் அடித்து ரசிகர்களை குஷிப்படுத்தினார்.

5 ஆவது ஓவரை சாவ்லா வீசினார். இந்த ஓவரின் 2 ஆவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய மக்கலம் 4 ஆவது பந்தில் ஆட்டமிழந்தார்.

அவர் 14 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 19 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து களம் இறங்கிய ரெய்னா அந்த ஓவரின் கடைசி பந்தில் சிக்ஸர் அடித்தார்.

9ஆவது ஓவரை பிராட் ஹொக் வீசினார். அந்த ஓவரின் 4 ஆவது பந்தில் ஸ்மித் ரன் அவுட் ஆனார். அவர் 19 பந்தில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 25 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்த ஓவரில் ரெய்னா 17 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

அதன்போது சென்னை அணி 9.3 ஓவர்களில் 67 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

அடுத்து வந்த தோனி 3 ஓட்டங்களிலும், பிராவோ 5 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் சென்னை அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்வில் மந்த நிலை ஏற்பட்டது. இந்த பரபரப்புக்கு மத்தியில் சென்னை அணி 15.1 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

6ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த டு பிளிசிஸ், ஜடேஜா அதிரடியாக விளையாட நினைத்தபோதும் பந்து துடுப்பில் சரியாக படவில்லை. 12-வது ஓவரின் கடைசி பந்தில் பவுண்டரி அடித்த சென்னை அணி அதன்பின் 17ஆவது ஓவரின் 2-வது பந்தில்தான் பவுண்டரி அடித்தது.

18 ஆவது ஓவரை கம்மின்ஸ் வீசினார். அந்த ஓவரில் 6 ஓட்டங்கள் கிடைத்தது. 19 ஆவது ஓவரை பிராட் ஹொக் வீசினார். இந்த ஓவரில் ஜடேஜா ஆட்டமிழந்தார். அவர் 20 பந்துகளில் 15 ஓட்டங்கள் எடுத்தார்.

கடைசி ஓவரை உமேஷ் யாதவ் வீசினார். இந்த ஓவரில் அஷ்வின் இரண்டு பவுண்டரிகள் அடித்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் சென்னை அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 134 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. டு பிளிசிஸ் 29, அஸ்வின் 9 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

135 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தாவின் கம்பீர், உத்தப்பா தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

முதல் ஓவரை ஈஸ்வர் பாண்டே வீசினார். முதல் பந்தில் உத்தப்பா ஒரு ஓட்டம் எடுக்க 2ஆவது பந்தில் கம்பீர் விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து தான் சந்தித்த முதல் பந்திலேயே டக் அவுட் ஆனார்.

அடுத்து உத்தப்பாவுடன் மணீஷ் பாண்டே ஜோடி சேர்ந்தார். ஆட்டத்தின் 3ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்து உத்தப்பா அசத்தினார்.

மோகித் சர்மா வீசிய 4ஆவது ஓவரில் உத்தப்பா ஹட்ரிக் பவுண்டரி அடித்து ரசிகர்களை குஷிப்படுத்தினார். உத்தப்பா அதிரடியால் கொல்கத்தா 5 ஓவர்களில் 52 ஓட்டங்கள் எடுத்தது.

6ஆவது ஓவரை அஸ்வின் வீசினார். இந்த ஓவரின் முதல் பந்திலேயே உத்தப்பா ஆட்டமிழந்தார். உத்தப்பா 17 பந்தில் 6 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 39 ஓட்டங்கள் குவித்தார்.

உத்தப்பா அவுட் ஆன பிறகு சென்னை அணியினர் உஷார் ஆகினர். பந்துக்கு பந்து ஓட்டம் கொடுக்காமல் அபாரமாக களதடுப்பு செய்தார்கள். குறிப்பாக மக்கலமின் களத்தடுப்பில் அனல் பறந்தது.

அடுத்து 3 ஆவது விக்கெட்டுக்கு சூர்யகுமார் யாதவ் களம் இறங்கினார். அஸ்வின் வீசிய அடுத்த ஓவரின் முதல் பந்தில் பாண்டே ஆட்டமிழந்தார். அவர் 20 பந்துகளில் 15 ஓட்டங்கள் எடுத்தார்.

4 ஆவது விக்கெட்டுக்கு சூர்யகுமார் யாதவ் உடன் யூசுப் பதான் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமாக விளையாடியது. 13 ஆவது ஓவரை மோகித் சர்மா வீசினார்.

இந்த ஓவரின் 2 ஆவது பந்தில் சூர்யகுமார் ஆட்டமிழந்தார். இவரது பிடியை பிராவோ அபாரமாக பிடித்தார். யாதவ் 26 பந்துகளில் 16 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து 5ஆவது விக்கெட்டுக்கு பதான் உடன் டென் டோயிஸ்சே ஜோடி சேர்ந்தார். கொல்கத்தா 15 ஓவர்கள் முடிவில் 90 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அந்த அணி வெற்றி பெற 30 பந்தில் 45ஓட்டங்கள் தேவைப்பட்டன.

16 ஆவது ஓவரை பிராவோ வீசினார். இந்த ஓவரின் 2-வது பந்தில் பதான் கிளீன் போல்டானார். அடுத்து ரஸல் களம் இறங்கினார்.

17ஆவது ஓவரை நெஹ்ரா வீசினார். இந்த ஓவரின் 5-வது பந்தில் ரஸல் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன் அவுட் ஆனார்.




அடுத்து கம்மின்ஸ் களம் இறங்கினார். இந்த ஓவர் முடிவில் கொல்கத்தா அணி 101 ஓட்டங்களைக் கடந்தது.

18ஆவது ஓவரை பிராவோ வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தில் கம்மின்ஸ் ஆட்டமிழந்தார். 8ஆவது விக்கெட்டுக்கு டென் டோயிஸ்சே உடன் பியூஸ் சாவ்லா ஜோடி சேர்ந்தார். 5ஆவது பந்தில் சாவ்லா ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். 9 ஆவது விக்கெட்டுக்கு உமேஷ் யாதவ் களம் இறங்கினார்.

கொல்கத்தா அணி வெற்றிக்கு 12 பந்துகளில் 30 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 19ஆவது ஓவரை நெஹ்றா வீசினார். இந்த ஓவரின் 2 ஆவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய டென் டோயிஸ்சே 3-வது பந்தை சிக்ஸருக்கு விளாசினார். 4 ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டது.

5ஆவது பந்தில் உமேஷ் யாதவ கிளீன் போல்டானார். கடைசி விக்கெட்டாக பிராட் ஹொக் களம் இறங்கினார். கடைசி பந்தில் இரண்டு ஓட்டங்கள் எடுக்கப்பட்டது.

இதனால் கடைசி ஓவரில் 17 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அந்த ஓவரை பிராவோ வீசினார். முதல் மூன்று பந்துகளில் ஓட்டம் எடுக்க முடியவில்லை. 4 ஆவது பந்தை சிக்சருக்கு விளாசினார் டென் டோயிஸ்சே. அடுத்த பந்தில் பவுண்டரி அடித்தார். இதனால் கடைசி பந்தில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

ஆனால் அந்த பந்தையும் பவுண்டரிக்கு விரட்டினார். இதனால் சென்னை அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

சென்னை அணி தரப்பில் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பிராவோ போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவானார். (க)




## போர்க்குற்றம்...

களுக்கும் இடையிலான உறவுகளில் முறுகல் நிலை காணப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சுமுகம் அடைந்துள்ள நிலையில், ஜோன் கெரியின் இந்தப் பயணம் இடம்பெறவுள்ளது.

இதன்போது, இலங்கையின் வெற்றிகரமாக இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் மற்றும் சுமுகமாக நடந்த அதிகார மாற்றம் குறித்து இலங்கைக்கு ஜோன் கெரி பாராட்டுத் தெரிவிப்பார் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற போரின் போது, மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்த அமெரிக்காவின் நீண்டகால கரிசனைகளை ஜோன் கெரி வெளிப்படுத்துவார் என்று அமெரிக்க அதிகாரிகள் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர். (11)

## 19 ஆம் திருத்தம்...

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த அரசமைப்பின் 19ஆவது திருத்தம் 211 வாக்குகளால் நிறைவேறியது. இதன்படி ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள் சில வெட்டிக்குறைக்கப்பட்டு பிரதமருக்கு சில அதிகாரங்கள்பகிரப்படவுள்ளன.

ஜனாதிபதியின் நிறை வேற்று அதிகாரங்களைக் குறைத்தல், சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தல் உள்ளிட்ட சில மறுசீரமைப்புகள் 19 ஆவது திருத்தத்தில் கொண்டுவரப்பட்டு பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பித்தார்.

எனினும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் பெரும் எதிர்ப்புக்களும் நெருக்கடிகளும் அரசத்தரப்புக்கு ஏற்பட்டிருந்தன. இரண்டு தடவைகள் குறித்த சட்டத்தின் மீதான விவாதங்கள் பின்தள்ளப்பட்டன.

இந்த நிலையில இந்த சட்ட மூலத்தின் இரண்டாம் வாசிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் ஆரம்பித்து வைத்தார்.

இரண்டு நாட்கள் விவாதத்தின் பன்னர், நேற்று மாலை 6.00 மணிககு வாக்கெடுப்பு நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவை [illegible] ஒரு [illegible] ஒத்திவைக்கப்பட்டு, கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

அதன்பின்னர் பெயர் கூப்பிட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்படி, பிரேரணைக்கு ஆதரவாக 215 பேர் வாக்களித்தனர். எதிராக சரத் வீரசேக எம்.பி வாக்களித்தார்.

ஜனநாயக தேசிய முன்னணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார எம்.பி வாக்கெடுப்பில் தான் கலந்து கொள்ளவில்லை என்று அறிவித்தார்.

இந்த வாக்கெடுப்பின் போது ஏழு எம்பிக்கள் சமுகமளிக்கவில்லை. சபநாயகர் ஒத்துழைப்புடன் இந்த திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வரும். (11)

## கூட்டமைப்பு...

சூழல் உருவாகும். அத்துடன், ஜனநாயகத்துக்குரிய அம்சங்கள் இந்தத் திருத்தச்சட்டத்தில் இருப்பது வரவேற்கத்தக்கது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையிலுள்ள அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு இலங்கை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முன்வந்துள்ளதை நாம் மதிக்கின்றோம். இதன் மூலம் அவருக்கு நன்மை ஏற்படாவிட்டாலும், நாட்டு மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பது உறுதி.

18ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது. இதன் ஊடாக அவர் எத்தனை தடவைகளும் போட்டியிடலாம் என்றும் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இதனால் எதேச்சாதிகாரம் உருவாகியுது. இதனை ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலின ஊடாக மக்கள் தோற்கடித்து தெளிவான ஆணையை வழங்கி னர். எனவே, மக்களின் ஆணை மதிக்கப்பட வேண்டும் என்று அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சாரதி தேவை

Hotel Lux Etoiles உல்லாச விடுதியின் உல்லாசப் பேருந்துக்கு தரமும் அனுபவமும் வாய்ந்த சாரதி உடன்தேவை.

வயதெல்லை - 45 வயதிற்குட்பட்டவர்

நேர்முகத் தேர்வு :- 29.04.2015 இன்று
9.00 மணி - 2.00 மணி வரை (C-845)

இல.34, செட்டித்தெரு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



## வெளிவாரி பட்டப்படிப்பை கற்க காத்திருக்கும் மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி

- தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் (ஒலுவில்) கலைமாணி (பொது) வெளிவாரி பட்டப்படிப்புக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L மூன்று பாடங்களும் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.
- பதிவுகளுக்கு மேலதிகமான கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.
- பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றன. உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- விரிவுரைகள் 02.05.2015-ல் எமது நிறுவனத்தில் ஆரம்பமாகும்.

**NJT** பட்டப் படிப்புகள்
இல. 55, பலாலி றோட், இலுப் பையடிச் சந்தி.
மேலதிக தகவல்களுக்கு:- 0776624387 (225)



## FRENCH MOVIES - JAFFNA

*Alliance Française de Jaffna*
cordially invites you to the screening of

**ANIMAL TALES**
4 Short Movies From Africa.
(1989 - 2001, 80 min.)
on
Thursday 30 April 2015 at 4:00 p.m.
at
*Alliance Française de Jaffna*
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093
(206)

French Language. English subtitles. Free entrance



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள் (207)
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(C-833)

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
(Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393


### கூட்டமைப்...

மன்றில் இடம் பெற்ற இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் தனதுரையில் மேலும் தெரிவிததுள்ளதாவது,

19ஆவது திருததச் சட்டத்தில் இருக்கின்ற ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான பல்வேறு விடயங்களை நாம் வரவேற்கின்றோம். இந்தத் திருத்தச்சட்டம் மூலம் நல்லாட்சி உறுதிப்படுத்தப்படுவதுடன், மக்களின் இறைமையும் பாதுகாக்கப்படும்.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதி ஒரு ஆண்டுக்குப் பின்னர், எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரத்தைக கொண்டுள்ளார்.

இது சட்டவாக்கத் துறைக்கும், மக்களின ஆணைக்கும் பாதகமாகவே அமைந்தன. ஆனால் இத் திருத்தச்சட்டம் ஊடாக ஜனாதிபதியின் இந்த அதிகாரம் நீக்கப்பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

அதேவேளை, கட்சி தாவும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதிலும் முன்னர் சிக்கல்கள் இருந்து வந்தது.

ஆனால்19ஆவது திருத்தச்சட்டம் மூலம் இந்தச் சிக்கல்களுக்கு முடிவுகட்டப்பட்டுள்ளது. கட்சிதாவும் உறுப்பினர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட கட்சி சுதந்திரமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும் என நம்புகிறேன்.

19ஆவது திருத்தச் சட்டம் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, அரசியல் தலையீடுகள் நீங்கும்.

இவ்வாறு ஏற்பட்டால் மக்களின் இறைமை பாதுகாக்கப்படுவதுடன், ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்குரிய

23ஆம் பக்கம் பார்க்க....


## ECONOMICS HALL

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

கணக்கீடு : AP.பகீதரன்
ஆரம்பம் 02.05.2015
A/L 2016 சனி, ஞாயிறு
3.00 - 4.00 - சொத்துவிற்பனை
4.00 - 5.00 - பங்குடமை (225)

Paper Class ஆரம்பம் 06.05.2015
செவ்வாய், வியாழன் } 6.15 - 7.15 காலை



## ECONOMICS HALL

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

A/L 2017 புதிய பிரிவு
பொருளியல் பேராசான்
பொருளியல்உதயன்

ஆரம்பம் : 02.05.2015
சனி காலை 8.00 மணி

Note : புதிய பிரிவில் ஏற்கெனவே கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். (225)



வானொலி நாடகங்கள் எழுதுவதில் நீங்கள் திறமை மிக்கவர்களா? உங்கள் திறமையை உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம். வெளிநாட்டு, உள்நாட்டு வாழ்வியலை மையமாகக் கொண்ட நாடகங்கள் விரும்பத்தக்கது. சிறந்த நாடகங்களுக்கு பரிசு வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:- வைகுந்தம் 62/1, K.K.S Road, சுன்னாகம். (145)

இவ்வறிவித்தலை உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். அவர்களும் பயன் அடையட்டும்.



## அரசியல் விஞ்ஞானம் கருத்தரங்கு

இலங்கையின் முன்னணி ஆசிரியர்
**சி.அ.யோதிலிங்கம்**
யாழ்.முன்னணி ஆசிரியர்
**K.சுகாஷ்**

தொடர் 1 01.05.2015 வெள்ளி 10 am

- எதிர்பார்க்கை வினாக்கள்
- விடை எழுதும் முறை
- மாதிரிப் பரீட்சை

(226)

வெளி மாணவர்களும் பங்கேற்கலாம்

**DCM** யாழ்.நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)


### புலம்...

கொண்டிருந்தது.

எனினும் கடந்த 108 நாட்களுக்குள் புதிய அரசாங்[illegible] இந்தநிலையை மாற்றியமைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (11)

### வெள்ளை...

வெள்ளை வான் சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பாதுகாப்பு பிரிவு பிரதானிகளில மூன்று பேரில் இருவர் ஒய்வு பெற்றுக் கொண்டுள்ளனர்.

இராணுவ மேஜர் ஒருவர் தொடர்பிலும் தனியான அறிக்கையொன்று ஜனாதிபதி மற்றும் பிரதமரி[illegible] ஒப்படைக்கப்படவுள்ளது. (11)

### சிராந்தி...

யப்பட வாய்ப்பிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் இவர்களைக் கைது செய்வதன் மூலம் 19-வது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றாமல் தடுக்க ஐக்கிய தேசியக் கட்சி முயல்வதாக அவர் நேற்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)


## மருந்தாளர் தேவை

சித்தன்கேணியில் பிரபலமாக இயங்கிவரும் TAN Pharmacy க்கு மருந்தாளர் தேவை. (C-843)

தொடர்புகளுக்கு :- 077 1728 141



## மாபெரும் மே தின பேரணியும் பொதுக் கூட்டமும்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸும் இணைந்து நடாத்தும் மாபெரும் மேதின பேரணியும் பொதுக் கூட்டமும்.

இடம் : நடராஜா கலையரங்கம் (கொட்டடி கடற்கரை) பருத்தித்துறை.
நேரம் : பி.ப. 03.30 மணிக்கு
காலம் : 01.05.2015
அனைத்து தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (C-842)

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



## V2 Travels & Tours (Pvt) Ltd
## அலுவலக வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தில் வேகமாக வளர்ந்துவரும் பல் வேறு சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும் நிறுவனத்தில் இணைந்து உங்கள் தகைமைகளை வளர்த்துக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு



பதவி :- வாடிகையாளர் சேவை நிர்வாகி வெற்றிடங்கள் :- 5
அடிப்படைத்தகுதி :- Degree அல்லது HND அல்லது A/L
வயது : 21 முதல் 30 வரை (இருபாலாரும்)
மேலதிக தகுதிகள் :- ஆங்கிலத்தில் உரையாடும் புலமை
வேலை தொடர்பான அழுத்தங்களை சமாளிக்கும் ஆற்றல்
ஆரம்ப சம்பளம் :- 15,000/- (திறமையானவர்கள் இரண்டு வருடத்தில் 50 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம்)
காலம் :- 30.04.2015 வியாழக்கிழமை நேரம் : காலை 10.00 மணி
இடம் :- V2 Travels & Tours (Pvt) Ltd 49 A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (C-836)

குறிப்பு 1 : தெரிவு ஒரே நாளில் 3 கட்டமாக நடைபெறும். சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்

குறிப்பு 2 : Photoshop, XL, Powerpoint, Word, Tamil Typing தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு : 077 866 8420


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.